


15629
7227
JPL
C7227
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் விடுதலைக் குரல்

KC JPL
C9+
156261
பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.
782766

ஆசிரியர்:

**கே.எஸ்.ஏ.கபூர்**

வெளியீட்டாளர்:

**சி. கதிரவேற்பிள்ளை**

பா. உ., கோப்பாய்

156261 CC

விற்பனை உரிமை:

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

90, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: செப்ரெம்பர் 1973

இந்நூலாசிரியரின் உணர்ச்சி வரிசை - 5

320.512

## சமர்ப்பணம்

தமிழினத்தின் தனிப்பெரும் தலைவன்-தியாகி-வழி காட்டி-ஒளிவிளக்கு-அஞ்சா நெஞ்சன்-நல்லவர்-வல்லவர்-சிந்தனையாளர்-இரும்புமனிதன் அமரர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்களுக்குச் சிரம்தாழ்த்தி கரம்கூப்பி. இதைச்சமர்ப்பணமாக்கி-ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

## அட்டைப்பட ஓவியம்

சிரமம் பாராது பொறுப்போடும்-உணர்ச்சியோடும் இப்புத்தகத்திற்கென அட்டைப் படம் வரைந்து தந்த நண்பர் எம். எஸ். பாருக் அவர்களுக்கு எங்களது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முன்னுரை*

KOHA JPL

# தமிழ் இனம் தனிநாட்டுக்கு தள்ளப்படுகிறது?

சிங்கள அரசாங்கம் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை தனிநாட்டுக் கொள்கைக்கு தள்ளுகின்றது என்று தமிழ் தலைவர்கள் எச்சரித்துள்ளார்கள். ஆனால் சிங்கள அரசாங்கம் தனது போக்கை மாற்றாமல் இந்த நிர்ப்பந்தத்தை மேலும் வலியுறச் செய்கின்றது. இதனால் சிங்கள மக்களின் உள்ளுறைக் கருத்து தெளிவாகின்றது. தமிழ் மக்களை சிங்கள நாட்டிலிருந்து வெளியேற்றி தனி சிங்கள பௌத்த நாட்டை உருவாக்குவதே கருத்து. இதனைச் செய்கையால் உணர்த்தி, சொல்லால் மறுத்து தங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் நோக்கங்களைப்பற்றிக் குழப்பமான மனநிலைகளை ஏற்படுத்துவதில் அர்த்தம் இல்லை. சொல்லுக்கும், செயலுக்கும் வேற்றுமை இல்லாமல் நோக்கங்களை தெளிவாக வெளிப்படுத்தி சமரசமாகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கலாம். தனிச் சிங்கள பௌத்த நாட்டை உருவாக்கித் தங்கள் தனித்துவத்தை பாதுகாக்கவும் தொடர்ந்து வளர்க்கவும் சிங்கள மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அந்த நோக்கத்திற்காக தமிழ் இனத்தின் சுதந்திரத்தைப் பறித்து, உரிமைகளை மறுத்து பொருளாதார வளர்ச்சியினைத் தடுத்து, ஆண்டு, இன மாற்றமும், மத மாற்றமும் செய்விப்பதே பிழையானது. 2500 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தமிழரும் சிங்களவரும் இரு வேறு இனங்களாக இலங்கையில் இரு வேறு பிரதேசங்களில் வாழ்ந்து தனி ஆட்சி நடத்திவந்துள்ளனர். பிற்காலத்தில் வந்த அந்நியர் ஆட்சி இந்த இரு வேறு தனித்துவத்தை மாற்றி ஒன்றாக்கவில்லை, இரு வேறு இனங்களை ஒன்றாக்கவில்லை, ஆங்கிலேயர் 1813-ல் ஈழத்துச் சிங்கள நாட்டையும், ஈழத்துத் தமிழ் நாட்டையும் தங்கள் நிர்வாக ஆட்சிக்கான வசதிக்காக ஒன்றாக இணைத்தனர். 1948-ல் சுதந்திரம் என்ற பெயரில் இரு இனங்களுக்கும் பொதுவாக இலங்கைக்கு ஒரே அரசியல் அமைப்பு சுமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டது. இந்த அரசியல் அமைப்பை 1972-ல் இரண்டு இனங்களும் வேண்டாம் என்று உதறி வீசினர். இரண்டு இனங்களும் ஒன்றாக வாழலாம் என்ற கருத்தில் அரசியல் நிர்ணயசபையில் அதற்கான அடிப்படைத் தீர்மானங்களை ஆராயப் புகுந்தனர். சிங்கள அரசாங்கம் சமர்ப்பித்த அடிப்படைத் தீர்மானங்களில் தமிழினத்தின் சுதந்திரமும், உரிமையும் அமையாது என்று கண்ட பின்னர் தமிழர்கள் அரசியல் நிர்ணயசபையில் இருந்து வெளியேறினர். சிங்கள அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தை தமிழினம் ஏற்கவில்லை. ஆனால் தொடர்ந்தும் பிரிவினை ஏற்படாமல் ஒற்றுமையாக வாழ்வதற்காககுறைந்த பட்சக் கோரிக்கையாக அரசியல் அமைப்புத் திட்டத்தை திருத்தி அமைப்பதற்காக தமிழினம் சென்ற வருடம் மே மாதம் ஆறு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்தது. சிங்கள அரசாங்கம் இதனை ஆலோசிக்காமல் தொடர்ந்து தமிழினத்தை நிர்ப்பந்தித்ததால் இவ்வருடம் மேமாதம் தமிழினம் சுயாட்சிக்கொள்கையை ஆராய்ந்துள்ளது. இதன் காரணமாக அதற்கு மேலாகஎல்லோரும் தனி ஆட்சிக் கொள்கையையும் ஆராயத் தொடங்கி விட்டார்கள். ஆகவே சிங்கள இனமும், தமிழ இனமும் இலங்கையில் தனித் தனி ஆட்சிகளை நிறுவினால் ஒருவருக்கு மற்றவர் இடையூறு ஆகாமல் தங்கள் தனித்துவத்தை பாதுகாத்து வளர்ப்பதற்கும் வழி உண்டாகுமா? சரித்திரத்தில் இருந்தது போல மீண்டும் ஈழத்தில் சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் உருவாக்குவதுதான் இரு இனங்களுக்கும் நன்மையாகும்.

சிங்கள இனம் ஏன் தமிழினத்தை பிரிவினைக்கு நிர்ப்பந்திக்கிறது? இதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு.

(1) சரித்திரம்:- சரித்திரத்திற்கு முற்பட்ட காலம் முதல் சிங்கள இனம் தமிழினம் என்று பிரிந்திருந்தது. இலங்கைக்கு விஜயன் வந்த பின் சிங்கள இனம் திரண்டு உருவானது. தமிழ் இனத்தின் எதிர் நிலையிலே இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இருந்த தமிழ் அரசுகளும் இந்தியாவில் இருந்து காலத்துக்குக் காலம் நிகழ்ந்த படை எடுப்புகளும் இரு இனங்களுக்கும் இடையே உள்ள எதிர்ப்பையும் வேற்றுமைகளையும் வலியுறுத்தின. சிங்களவர் பல முறை தமிழர்களை எதிர்த்து தங்கள் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட வேண்டியிருந்தது.

• (2) மானதம்: சரித்திர உண்மைகளாலும் மொழி சமய கலாச்சாரத்தாலும் இரு இனங்களும் வேறுபட்டு இருப்பதால் சிங்களவர் தங்களைச் சிங்களவர் என்றும், தமிழர்கள் தங்களை தமிழர்கள் என்றும் அத்திவாரத்திலிருந்தே நினைத்து வருகின்றனர். இருமக்களும் தாம் இலங்கையர் என்ற கருத்து, இடையில் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலம் படித்த ஆங்கில ஆட்சியில் ஒரு சில அரசியல் உரிமைபெற முன்னின்றவரின் மனதில் உதயமானது. ஆங்கில ஆட்சியும் ஆங்கிலக் கல்வியும் ஒழிந்த பின் இக் கருத்து படிப்படியாகப் போகின்றது. அரசியல் ஆதிக்கத்தை விரும்பாத ஆங்கிலம் படித்த முற் சந்ததியினரின் ஒரு சிலரின் மனதிலேதான் இக் கருத்து இன்று எஞ்சி இருக்கின்றது.

(3) இலட்சியம்: சிங்கள மக்கள் பெரும்பாலும் தங்கள் மொழியையும் சமயத்தையும் இணைத்து தனித்துவம் காணுகின்றனர். இத் தனித்துவத்தை வளர்ப்பதென்றால் தமிழுக்கு இடம் கொடுக்க முடியாது. இடம் கொடுத்தால் தனித்துவத்தில் கலப்பு உண்டாகும். இக் கலப்பை சிங்களவர் விரும்பவில்லை.

(4) பொருளாதாரம்: தமிழர்கள் படித்து உத்தியோகம் பெற்று சிங்களநாட்டில் வந்து வாழ்கின்றனர். இன்னும் வியாபார்ரம், கைத்தொழில், தனித் தொழில்களில் வளர்ந்து இருக்கின்றனர். இந்தியாவில் இருந்து மற்றத் தமிழர், பரம்பரையான சிங்கள நாட்டின் நிலங்களில்,குடியேறி தோட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் படித்த சிங்களவரும் படியாத சிங்களவரும் பலதுறைகளிலும் சிங்கள நாட்டிலே பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நான்கு காரணங்களும் சிங்கள இனத்தை கலப்பற்ற தனித்துவத்துக்கும் தமிழரை விலக்குவதற்கும் எடுத்துச் செல்கின்றது. அவை தனி சிங்கள பௌத்த அரசை உருவாக்க ஊக்குகின்றன. சிங்கள மக்களுக்குள் தமிழர் இருப்பது சிங்களவருடைய இத் தனித்துவத்துக்கு இடையூறுதான். தமிழர்களை ஏற்றுக்கொண்டால் தனித்துவம் அழிந்து கலப்பு உண்டாகும். இலங்கையர் என்று தமிழரையும் சமத்துவம் கொடுத்து ஒரு பன்மை சமுதாயத்தை சிங்கள இனம் அடிப்படையில் ஏற்கவில்லை. ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு சமயம் என்று சிங்கள இனம் இயங்குவதால் தமிழ் இனத்துக்கு சகல வழிகளில் பிரிந்து போகவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. ஆனால் எந்த நிர்ப்பந்தத்தாலும் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களையும் அவர்களுடைய தனித்துவத்தையும் அழிக்கமுடியாது. தமிழ் இனம் இந்த நிர்ப்பந்தத்தை அகிம்சை வழியில் எதிர்க்கின்றனர். அதனால் காலப்போக்கில் வெளிநாடுகளின் தலையீட்டுக்கும் பலாத்காரத்துக்கும் இப் பிரச்சினை வித்தாக அமையும் அபாயம் உண்டு. தமிழர்களை சிங்கள நாட்டில் தங்களுக்குள்ளே வைத்துக்கொண்டு சிங்கள இனம் தனித்துவம் காணமுடியாது. தமிழர்களை சிங்கள நாட்டில் இருந்து வெளியேற்றித்தான் தன் தனித்துவத்தைக் கண்டு பாதுகாக்கலாம். தமிழர்கள் இப்படித்தான் தனிச் சிங்கள பௌத்த நாட்டை உருவாக்கலாம். தமிழர்கள் வெளியேற்றப்பட்டு தனித் தமிழ்நாடு அமைக்கவேண்டி வரும். தனிச் சிங்கள நாட்டை உருவாக்குவதால் சிங்கள இனத்துக்கு நன்மையேயாகும். கள்ளத்தோணிப் பிரச்சினை, வேலைவாய்ப்புப் போட்டி பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, பொருளாதார பிரச்சினை, மொழிப் பிரச்சினை, சமயப் பிரச்சினை பலவும் சிங்கள மக்களுக்கும் இல்லாமல் பெரிதும் நீங்கிவிடும். இன்னும் தமிழர்களாலும் இந்தியாவாலும் அபாயம் என்ற சரித்திர ரீதியான பயமும் நீங்கிவிடும். சிங்கள நாட்டிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் இந்தியாவிற்குமிடையில் மெத்தையாக ஈழத் தமிழ் நாடு அமையும். சிங்கள இன, தமிழ் இன எதிர் நிலையால் வரக்கூடிய அந்நியர் தலையீட்டுப் பயமும், பலாத்கார இயக்கங்களுக்குரிய காரணங்களும் தாமாகவே நீங்கும். இச் சிந்தனைகளையும் தத்தம் மனங்களில் ஆளக் கிடக்கும் அபிலாசைகளையும் சமரசமாக வெளிப்படுத்தி தங்கள் தங்கள் மனதில் உள்ள இலட்சியங்களைப் பற்றிய தெளிவற்ற குழப்பநிலைகளை மாற்றுவது இரு இனங்களுக்கும் அவசியம் ஆகின்றது. தமிழர்கள் சிங்களவர்களுக்கு இடையூறாக அவர்கள் மத்தியில் தங்கி வாழும் இனமாக தொடர்ந்து வாழாமல் தங்களைத் தாங்கள் ஆளும் பொறுப்பை ஏற்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

கோப்பாய்,
3-8-73.

சி. கதிரவேற்பிள்ளை
பா உ.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

என்றுமுள்ள நிரந்தர விடுதலை வேண்டிக் கரம் கூப்பி நிற்கும் தமிழினத்தின் கண்கள் ஒளிபெற - சிந்தனை தெளிவு காண - உள்ளம் உரம் கொள்ள - தமிழன் தன்னாட்சி பெற்று வாழ எமது தமிழரசின் நீண்ட காலத் தொண்டனான நண்பர் கபூர் அவர்கள் எழுதிய இப் புத்தகத்தின் கைப்பிரதியை படித்துப்பார்த்த நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன். ஏனெனில் எழுத்துலக இலட்சியவாதியான - எமது நம்பிக்கைக்குரிய நண்பர் கபூர் இதைப் படித்துப் பார்க்க என்னிடம் தந்தபோது தமிழினம் வேண்டி நிற்கும் விடுதலைப் பாதைக்கு மேலும் புதியதோர் ஆயுதம் கிடைத்திருக்கின்றது என்றெண்ணி நான் மகிழ்ச்சி கொண்டது வெறும் புகழ்ச்சி மொழியல்லவே.

எமது போராட்டப்பாதையில் துணிவு பெற்ற உள்ளத்தோடு கடந்த பதினேழு ஆண்டுகளுக்கு மேலாக தமிழரசின் கொள்கையோடு இணைந்து நின்று செயல்படும் நண்பர் கபூர் கொள்கை வீரன் - விடுதலைத் தியாகி - எழுத்துலகில் இலட்சியவாதி - மேடையில் வல்லவன், இவர் எப்போதுமே போராட்டங்கள் நிறைந்த வரலாறுகளையும் - சக்திகொண்ட சரித்திரங்களையும் ஆராய்ந்தறிந்து எமது விடுதலைப் பாதைக்குப் பயிற்சி தருவதில் கைதேர்ந்தவர். கூராக்கப் பட்ட வழமையான தன் பேனா முனையால் முன்பு எழுதிய பல புத்தகங்களைப் போன்று - சின்னஞ் சிறிய நாடுகளின் - இனங்களின் வரலாறுகளையும் - பொதுவுடமை வாதிகளின் இனவாதக் கொள்கைகளையும் சரியான ஆதாரங்களுடனும் - புள்ளி விபரங்களுடனும் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஒரு சவாலாக எழுதியுள்ளார். எனவே இவ்விடுதலைக்குரல் எமது விடுதலைப்பாதைக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன்.

வணக்கம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி,
யாழ்நகர்,
ஈழத்தமிழகம்,
25-8-73

அன்புள்ள
அ. அமிர்தலிங்கம்,
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

தனது எழுத்துத் திறமையாலும் - பேச்சுவன்மையாலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சிறந்த முறையில் அறிமுகம் பெற்ற எனது நீண்டகால நண்பரான ஜனுப் கே. எஸ். ஏ. கபூர் அவர்களை எழுத்துலகச் சம்பிரதாயத்திற்காக அறிமுகப்படுத்திவைக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தமைக்காக உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றேன், நண்பர் கபூர் அவர்கள் எழுதிய "தமிழினத்தின் விடுதலைக் குரல்" என்ற அரசியல் உணர்ச்சிமிக்க கட்டுரையின் கைப்பிரதியைப் படித்தேன். முழுக்க முழுக்கப் படித்தேன். பிரமித்தேன். அவரின் ஆழ்ந்த அரசியல் அறிவும் - உணர்ச்சி வசப்படக்கூடிய வசன அமைப்பும் - விடுதலை வேண்டி நிற்கும் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலை அரசியல் மதியூகத்துடனும் - சிறந்த எடுத்துக் காட்டுக்களுடனும் எழுதிய இவரது அறிவுத் திறன் மென்மேலும் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

'அன்னைதந்த மொழியே - அமுதத் தமிழே - என் விழியே-உனக்கு அழிவென்றால் என்னை இழந்தேனும் உன் புகழ் பாடியே மடிவேன்' என்ற இவரது தத்துவத்தின் ஆழ்ந்த கருத்து இப் புத்தகத்தில் வரிக்கு வரிக்கு இழையோடி எமக்கு உணர்ச்சியூட்டி நிற்பதை இங்கே நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் நீண்டகால செயல் படும் அங்கத்தவரான நண்பர் கபூர் மொழி உணர்ச்சி மிக்கவர். எதையுமே ஆழ்ந்து சிந்தித்து அரசியல் வரம்போடு நியாயத்திற்காக விவாதித்து முடிவுகாணும் தனித்தன்மை கொண்டவர். கட்சி ஆரம்ப காலம் தொட்டு எத்தனையோ முஸ்லிம்கள் விருந்தாளிகளைப் போன்று கட்சிக்குள் ஒட்டி நின்றதும் - பின் வெட்டிப் பிரித்துக் கொண்டு வெளியேறியதும் - தம் கொள்கைகளை விலை மாதுகளாக காட்டி விட்டதும் சிலரது அரசியலில் சர்வசாதாரணமாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியானவர்கள் மத்தியில் நண்பர் கபூர் கொள்கைக்கே ஒரு வள்ளல். சில முஸ்லிம்கள் தம் சொந்த லாபங்களுக் காக அரசியலில் பதுங்கித் தமிழான தம் அன்னை மொழியை பணயம் வைத்து சர்க்கஸ் விளையாடும் கோமாளிகள் மத்தி யில், கொள்கைக்குன்றான நண்பர் 'கபூர் எமது தாய் மொழி அழகு தமிழேதான்' என்று வரலாற்று ஆதாரங்களுடன் திட்டவட்டமாக எடுத்துக் காட்டிச் செயல் பட்டு நிற்கும் இவர் - தன் அன்னை மொழிக்காகத் தன்னையே பணயம் வைத்து நிற்பது எமது புகழுக்கும் - பெருமைக்கும் உரிய வராவர்.

தமிழினத்தின் போராட்டப் பாதையில் முன்பு சிங்க ளமே சீறீப்பார், இரத்தச் சுவடு, ஒழிக ஒற்றை ஆட்சி, இலங்கையில் இன முழக்கம் ஆகிய பல உணர்ச்சிப் படைப்புக்களை வடித்துத் தந்த இவர், இன்று தனது ஐந் தாவது வெளியீடாக இப்புத்தகத்தைத் தந்துள்ளது எம்மை மேலும் விழிப்படையச் செய்திருக்கின்றது.

மேடையிலே முழங்கும் பலருக்கு எழுத்துத்துறை என்றால் சுத்த சூனியமாகத்தானிருக்கும், அதே போன்று எழுத்து வன்மை கொண்டவர்களுக்கு மேடைப் பேச்சென் றால் கடைச் சரக்காகத்தான் இருக்கும். ஆனால் இரண்டு தன்மைகளும் சிறப்பாக அமையப் பெற்ற நண்பர் கபூர் தனித்திறமை கொண்டவர். தமிழினத்தின் விடுதலைக்காக எதையுமே இழக்கத் துணிவு கொண்டவர். அடக்கமும் துணிவும் - நம்பிக்கையுமே தன் மூலதனமாகக் கொண்ட இவரையும் - இவரது விடுதலைப் புத்தகங்களையும் ஆதரிக்க வேண்டியது எமது கடனாகும்.

வணக்கம்

உடுவில்,
ஈழத்தமிழகம்
20-7-73

அன்புள்ள
வி. தர்மலிங்கம்
தேசிய பேரவைப் பிரதிநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# எனதுணர்ச்சி

—:—

உரிமை உயிர் வர்க்கத்தின் ஒப்பற்ற விளக்கு. கோழை களுக்கு வேண்டுமானுல் அது தேவையற்ற ஒரு கற்பனைச் சொல்லாக இருக்கலாம். ஆனுல்-கொள்கை வாதிகளுக்கோ, அதுவே தம் வாழ்க்கையை மேம்படுத்தும் அடிப்படைக்கரு வாகும். விடுதலை தானுகவே மடிக்கு ஓடி வந்துவிடும் என்று சிலர் கருதிக்கொண்டிருக்கலாம். வேறு சிலர் அதைச் சொல்லிக்கொண்டிருப்பதிலேயே சுகம் காண விளையாலம்.

எப்படியோ புகழுக்காகப் புறப்பட்டவர்கள் எதிர்ப்புக் கஞ்சியவர்களாக வேகமாகத் திரும்பி வரவும் - அதனுல் வெறும் புகழ்ச்சிமொழிகளிலேயே தங்களைக் கற்பனைக்கோட் டைக்கு ஒப்படைத்துக்கொண்டவர்களாகவும் ஆகிக் கொண் டார்கள் - ஆனுல் - தமிழரசுத் தியாகிகளின் பயணம் என் றைக்குமே நம்பிக்கைக்குரியது. அவர்களின் நெஞ்சங்களி லெல்லாம் உரிமையின் உருவம் வெங்கலத்தால் வடிக்கப் பட்ட சித்திரமாக மங்காது துலங்குகிறது. அடக்கப்பட்ட தமிழினத்தின் அகல் விளக்காகிக் கொண்டிருக்கின்றது. உரி மைகளைப் பெறும் வழிவகைகளைக் கேட்டறிந்து கொள்கின் றனர் - தினம் - தினம் போர்முனைக்குத் திரண்டெழுந்து கொண்டிருக்கின்றனர்.

சோம்பித் தாழும் நிலையில் தேம்பிக்கிடக்கின்றது தமிழினம்.

தன்மான உணர்வை மறந்தவர்கள் இனப் பெருமை யுடன் வாழ்ந்ததில்லை. அதை உணர்ந்தவர்கள் என்றுமே வீழ்ந்ததில்லை. இந்த உண்மைகளை உள்ளத்தின் ஆழத்தால் ஆய்ந்தறிந்தவர்களை அகிலமே என்றென்றும் வாழ்த்துகின் றது. அதை மதித்துணர மறுத்தவர்களை மனித இனமே மிதித்தொதுக்குகின்றது - தூற்றுகின்றது;

காலம் பறந்துகொண்டே இருக்கின்றது. வீரம் வெறியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டே இருக்கின்றது. தமிழினம் தனிச்சிங்களத் தேசியம் தொடுக்கும் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து - விடுதலை பெற்று வாழ நடாத்தும் உரிமைப் போராட்டம் உலக அரங்கில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

மொழி என்பது எண்ணங்களை வெளியிடும் ஒரு சிறு கருவிதான் என்ற எண்ணம் அக்காலத்தில் மக்கள் மத்தியிலே நிலவியிருந்தது. ஆனுல் இன்று அந்நிலை மாறி, மொழியின் சக்தியால்தான் உலக அமைதியும் - அரசியலும் - ஒரு இனத்தின் வாழ்வும்-தாழ்வும் அமுங்கியிருக்கின்றன என்ற உண்மையை இன்றைய நூற்ருண்டில் பச்சிளம் குழந்தைகள் கூட தெரிந்துகொண்டிருக்கின்றன. என்ருலும் எமது எதேச்சதிகார வாதிகளுக்கும், சிங்களத் தேசியத் தலைவர்களுக்கும், மொழியின் சக்தியும், ஒரு இனத்தின் அடிப்படை உரிமைகளும் தெருப் பொருளாகிக் கொண்டிருக்கின்றன. விலைப்பொருளாக்கப்பட்டிருக்கின்றன.

இயல்பாகவே ஆரம்பத்தில் தோன்றிய பொருளில்லா ஒலிகள் காலத்தின் வேகப் பாய்ச்சலாலும் - மனித இன வளர்ச்சியின் வேகத்தாலும் - மொழியாக உருவெடுத்து ஒவ்வோர் இனத்தையும் கட்டிக் காக்கும் மூல அரணுக அமைந்துவிட்டன. எனவே இம்மொழிக்கு அழிவென்ருல் - அது அந்த இனத்திற்கு அழிவென்றுதான் பொருள்.

ஆகவேதான் சொல்கின்றேன் - நாம் வாழ - நமதினம் வாழ - குலம் வாழ-எமது இழந்த உரிமைகளை மீட்க இன்றே அன்னைமீது ஆணையிட்டு விரைந்தெழுவோம், களம் காண!

மேலும் - இவ்வுணர்ச்சிப் படைப்பு இன்று உங்கள் கரங்களிலே தவழுவதற்குக் காரண கர்த்தாக்களாக இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய தமிழினத்தின் மதிப்புக்குரிய உயர்திரு அ. அமிர்தலிங்கம் (தலைவர்), நாக பத்மநாதன், எஸ். கதிரவேற்பிள்ளை பா. உ. மற்றும் பல உதவிகள் செய்தவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு சிறந்த முறையில் இதை அச்சிட்டுத் தந்த ஆனந்தா அச்சக நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எருக்கலம்பிட்டி
10-8-73

அன்பு—
கே. எஸ். ஏ. கபூர்

## தன்மானத்தின் கரு

அன்னை தந்த மொழியே-அமுதத்தமிழே-என்விழியே-எனதினத்தின் உயிரே—உடலே-உடமையே-என்னை வாழவைக்கும் அழகுத் தமிழே உனக்கு அழிவென்றால் என்னை இழந்தேனும் உன்புகழ் பாடியே மடிவேன்.

# காலத்தின் சக்தி

—o—

காலம் தன் வேகமான சுழற்சியினால் பல லட்சோப லட்சமான புதிய புதிய படைப்புக்களை உருவாக்கி உல கிற்கு அறிமுகப்படுத்திக்கொண்டே இருக்கின்றது. இப் பரந்து விரிந்த பூமி - அதன் அறிமுக மேடையிலே தினம் தினம் நாம் தெரிந்துகொண்டேயிருக்கும் அத்தனை நிகழ்ச்சி களையும் - அறிமுகமாகிக்கொண்டிருக்கும் ஒவ்வோர் உறவு களையும் துளியேனும் நினைவிழக்காமல் அனைத்தையுமே உள் ளத்தின் ஆழத்திலே நிலைநிறுத்திக்கொள்வதில்லை.

மனித இனம் மற்றெல்லா உயிரினங்களையும் விட அறி வில் சிறந்தவன். எதையுமே அறிவின் சக்தியால் அளந்து பார்த்துத் தெரிந்துகொள்ளும் ஆற்றலை சற்று அதிகமா கவே பெற்றிருக்கின்றவன். அவ்வப்போது அவன் தேவை என்பதைமட்டும் ஒரு சில காலத்திற்காகத் தெரிந்து வைத் துக் கொள்கின்றான். ஆனால் - தனக்குத் தேவையில்லை என்று தன் மனதில் பட்ட எதைப்பற்றியுமே அவன் கவலைப்படு வது கிடையாது.

அன்று அடர்ந்த காடுகளுக்கு மத்தியிலே விலங்குக ளோடு விலங்காக - காட்டுமிராண்டியாக - சிந்தனை என்பதே என்னவென்று தெரியாது வாழ்ந்த ஆதி மனிதனான எம் முன்னோர் தனக்கென்று எதையுமே சேமித்துக் கட்டிக்காக்க எண்ணவில்லை. காலம் தன் கடமையில் வேகமாக இயங்கி யது. ஆதி மனிதனது தனி வாழ்வு என்ற நிலை அதனால் அழித்தொழிக்கப்பட்டு - தம் பாதுகாப்புக்களுக்காகக் கூட்ட மாக வாழ்வதிலுள்ள மகத்தான நன்மைகளை அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டார்கள். அப்போது அவர்களது அறிவு சிந்தனையின் பக்கம் திரும்பியது. சிந்தித்தார்கள். நன்றாகச் சிந்தித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.



அதன் முடிவுதான் இன்று மனிதன் சமுதாயமாக இணைந்ததும், தனக்கென்று எதையுமே - எந்த வழியிலாவது சொந்தமாக்கிக்கொள்ளவேண்டுமென்று செயல்படத் தொடங்கியதும்! துணிந்ததும்!!

நாவிலே வன்மையுள்ளவன் - உடம்பிலே வலுவுள்ளவன் தன் திறமையின் சக்தியாலும் - பலத்தாலும் மற்றவர்களை மிருகத்தனமாக அடக்கியாளும் முறைகளை வழிவழியாகத் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டான் - தன்னைச் சார்ந்தவர்களுக்கும் இம் மிருகத்தனத்தைப் பழக்கிக் கொடுத்தான். எதை எதை எல்லாமோ தன் பக்கம் திருப்பிக் கொள்ள வேண்டுமென்று துடிதுடித்து நிற்கும் அவனால் காலத்தை மட்டும் வெல்லவே முடியவில்லை. அதன் அன்றாடப் பசிக்கு இரையாக்கிக் கொள்ளும் உயிரினங்களின் அழிவைத் தடுக்க அவனது எந்தத் தத்துவங்களுமே இதுவரை பயன் படக்கூடிய வழியைத் தேடித்தரவில்லை. அதனால்தான் காலம் எந்த இடையூறுமில்லாமல் நிரந்தரமாகத் தன்தொழிலைச் செய்துகொண்டே இருக்கின்றது.

பிறப்பு - இறப்பு என்ற இரு கரங்களும் காலத்தைக் கட்டி அணைத்துக் கொண்டே செல்கின்றன. அதிலே உதிர்ந்து உதிர்ந்து அழுகிப் போவதுதான் உலகம்.

குழந்தை அழுதுகொண்டே பிறக்கின்றது. அப்படி அழுதுகொண்டே பிறக்கும் குழந்தை, இறக்கும்போது பிறரை அழவைத்துவிட்டுப் போய்விடுகின்றது. பிழைத்துக் கொண்ட குழந்தை தன்னை அன்போடு அணைக்கும் கரங்களையும், பசிக்குப் பாலூட்டும் மார்பகங்களையும் புரிந்து கொள்கின்றது. பிறர் தூக்கினால் தாய்ப் பாசத்திற்காகத் துடித்தழும் குழந்தை, தாய் அணைத்தால் அடுத்த விநாடியே அமைதி கொள்ளும். அங்கே அறிவு பிறப்பதற்கு முன்னால் உறவு பிறந்து விடுகின்றது. அவ்வுறவில்லையேல் வாழ்வில் பிடிப்புமில்லை.

156261
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாத உயிர்களைச் சாகடிக்கும் போர் வீரன்-தானுகவே மாண்டொழிந்த தன் அன்னைக்காகக் கண்ணீர் வடிக்கின் ருன். ஒன்றைக் கொல்லும்போது மகிழ்ச்சி. ஒருவர் சாகும் போது துயரம். காலம் தரும் இத்துயரம் தேயக்கூடியது. மகிழ்ச்சியும் - நல்ல நிகழ்ச்சியும் நிலையானது. எப்போதுமே காலத்திற்குப் பேதமிருப்பதில்லை - வெற்றியின் இறுமாப்பில் மயங்கிக் கிடப்பவனைத் தோல்வியின் பக்கம் திருப்பி விடு கின்றது. தோல்வியால் துவண்டு - மெலிந்து கிடப்பவனை வெற்றியின் பக்கம் வேகமாகக் கொண்டு வருகின்றது. வெற் றியும் - தோல்வியும் - வாழ்வும் - தாழ்வும் ஒவ்வோர் பகுதி மக்களுக்கு மட்டும்தான் தொடர்ந்து நிரந்தரமாகச் சொந் தம் என்று முழுக்க முழுக்கக் காலம் ஒதுக்கிவிட்டிருந்தால் என்றைக்கோ உலகம் அழிந்தொழிந்து மண்மேடாகி இருக் கும்.

காலம் மனித இனத்தை விட புத்திச் சாதுர்யத்தில் சிறந்தது. அதனுல்தான் வாழ்வு தாழ்வாக வேண்டும்- தாழ்வு வாழ்வாக வேண்டும் - வெற்றி தோல்வியாக வேண் டும்-தோல்வி வெற்றியாகவேண்டும் என்ற ஓர் பூர்வீக நிய தியைக் காலம் வழி வழியாக உருவாக்கி ஓட்டிக்கொண் டிருக்கின்றது - வெற்றிக்களிப்போடு!

நெற்கதிர்கள் முற்றமுற்றத் தலை சாய்கின்றன - தலை சாய்க்க மறுக்கும் நெடு மரங்கள் அடியோடு சாய்கின்றன. விட்டுக்கொடுக்க மறுக்கும் முரட்டுக்குணம் கொண்ட காட்டு மிராண்டிகளின் முடிவும் பரிதாபத்திற்குரிய நெடுமரத்தின் கதைதான். ஒரு அடிமைப்பட்ட இனத்தின் ஒற்றுமை சுதந் திர சமுதாயத்திற்கு ஏற்படக் காரணமில்லை. தினம் தினம் கல்லறையைச் சுற்றி விளையாடும் விடுதலை வீரனின் இரு தயம் கட்டிலறையைச் சுற்றி விளையாடப்போவதில்லை.

ஓலத்திலும் - துயரத்திலும் - அல்லலிலும் வரும் பரி வும் பாசமும் தியாகத்தோடுதான் பிறக்கின்றன. அத்தகை யத் தியாகத்துடனேயே தமிழ் பேசும் மக்களாகிய நாமும் சுதந்திரத் தாகத்தால் வரண்ட நெஞ்சங்களுக்கு இன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வை நீராகப் பாய்ச்சிக்கொள்ளவேண்டிய காலக்கட்டத்திற்கு வேதனையுடன் வந்திருக்கின்றோம். அதனால்தான் நாகரீகம் - அரசியல் உணர்ச்சி - விடுதலைப் போராட்டங்கள் போன்ற இன்ன பிற விழிப்புக்கள் கண்ட இனங்களின் வரலாற்றுக் குறிப்புக்களை - எமது விடுதலைப் பயணத்திற்கு - சவக் குழிக்கு அடகு வைக்கப்பட்ட இருதயத்தோடு வரலாற்றில் சின்னஞ்சிறிய குறிப்புக்களைப் புரட்டிக்கொண்டிருக்கின்றோம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## கிரேக்க வரலாறும் சின்னஞ்சிறிய நாடுகளும்

கடந்த ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்கம் பண்டைய பெருமை வாய்ந்த நாடுகளில் ஒன்றாக அறிவு, அரசியல், நாகரீகம் ஆகிய பல்வேறு துறைகளிலும் மேம்பட்டு உலகிற்கு உயர்வான வழிவகைகளை எடுத்துக்காட்டி வந்திருக்கின்றது என்பதில் வரலாற்று வல்லுனர்கள் எவரிடமுமே கருத்து வேற்றுமைகள் காணமுடியாது. கிரேக்க இனத்தின் மூதாதையரான "ஹெல்லானிய" இனத்தில்தான் உலகப்பெரும் சிந்தனையாளர்களும் - தத்துவ ஞானிகளும் - அரசியல் மாமேதைகளும் - வழிகாட்டிகளும் அலை அலையாகத் தோன்றி உலக உய்விற்கு வழிகாட்டிவிட்டு மறைந்திருக்கின்றார்கள். தம்முடைய திறமையான அறிவுக் கூர்மையால் மனித இனத்தின் அடித்தள ஆழத்தையே அணுவணுவாக ஆராய்ந்து பார்த்த தலைசிறந்த சிந்தனைச் செல்வங்களைக் கிரேக்க நாட்டின் வரலாற்றில் வரிக்கு வரி நம்மால் ஆச்சரியத்தோடு காணமுடியும். அவர்கள் அவ்வப்போது காலத்தின் மாறுதல்களுக்கும் - அரசியல் சூறாவளிகளுக்கும் ஏற்றவாறு, எக்காலத்திற்கும் மக்களின் அரசியல் வாழ்வோடு இணையக்கூடிய நிலையில் பல்வேறு சட்ட திட்டங்களை வகுத்துத் தந்தனர்.

உலகப் பெரும் சிந்தனையாளர்களான கிரேக்கர்கள் முப்பெரும் ஸ்தாபனங்களின் மூலமாகவே தம் அரசியல் கொள்கைகளை வகுத்துத் தந்தனர்.

இயற்கையின் வேகத் தாக்குதல்களால் மலைகளாலும்-பள்ளத்தாக்குகளாலும் சிறுசிறு நகரங்களாக வெட்டிப் பிளக்கப்பட்ட கிரேக்க மக்கள் ஹெல்லானியர் - ஏதன்னியர், ஸ்பார்ட்டானியர் என்ற முப்பெரும் இனத்தைச் சார்ந்தவர்களாக - ஒவ்வோர் இனத்திற்கும்– அனேகமாகத் தொடர்புகளில்லாமலேயே வாழ்ந்து வந்திருக்கின்றூர்கள். அதேபோன்று ஒவ்வோர் இனமும் பூகோள அமைப்பால் தனித்தனிக் கிராமமாகவே வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் கூட, அவர்கள் தம் மொழி - பண்பாடு, நாகரீகம் என்பனபோன்ற எதையுமே இழக்காமல் தனித்துவத்துடனேயே - பெருமையோடு வாழ்ந்துவந்திருப்பதை நாம் பார்க்கின்றோம். கிரேக்கர்களின் இத்தத்துவ எடுத்துக்காட்டுகளிலிருந்து பல உண்மைகளை நாம் தெரிந்து கொள்கின்றோம்.

ஒரு இனம் தனக்குரிய நாகரீகம் - மொழி - வரலாறு போன்றவைகளைக் கட்டிக் காத்துப் பெருமையுடன் உலகிற்குத் தம்மை எடுத்துக்காட்டி வாழ்வதற்கு மக்கள் தொகையோ - பரந்து விரிந்த நிலப்பரப்போ முக்கியமானதல்ல என்பதையே தெட்டத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கின்றோம். உலகிலுள்ள எந்தச் சிறுபான்மை இனமும் - அவர்களது மொழியும் நசுக்கப்படாமல் தன்னிச்சையாக வாழமுடியுமென்றால் - நிச்சயமாக அந்த இனத்தில் தத்துவ மேதைகள் - அரசியல் சாணக்கியர்கள் - அறிஞர்கள் - உலக மேதைகள் - வழிகாட்டிகள் போன்றோர்களெல்லாம் தோன்ற முடியும் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.

ஒரு இனத்தினுடைய மொழி வளர்ச்சிக்குச் சட்டபூர்வமான எந்தக் குறுக்கீடுமில்லாமல் – அம்மொழிக்குரிய இனம் சுயமாகச் சிந்திக்கின்ற ஆற்றலைப் பெறும்போது, அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மாமேதைகள் தடையின்றி இயற்கையாகவே தோன்றி விடுகின்றார்கள்; அதனால்தான் அடக்கப்பட்ட எந்த இன மும் முதலில் தன் மொழியைக் காத்துக் கொள்ளத் துடிக் கின்றது - விரைகின்றது.

விடுதலைப் போராட்டம் நடத்திப் பல லட்சோப லட்ச மக்களைப் பலிகொடுத்து - இளைக்காமல் சளைக்காமல் தொடர்ந்து முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகக் களம்பல கண்டுவந்த அயர்லாந்து மக்களைப் பார்த்து பிரிட்டிஷ் ஏகாதி பத்தியவாதிகள் கேட்டார்கள். 'உங்களுக்கு மொழியுரிமை வேண்டுமா? அல்லது சுதந்திரம் வேண்டுமா?' என்று. அப் போது அவர்கள் என்ன கேட்டிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? விடுதலை வேண்டாம் - வீடுதான் வேண் டும் - சுதந்திரம் வேண்டாம் - சோறுதான் வேண்டும் என்று கேட்டார்கள்? இல்லவே இல்லை. 'எங்களுக்கு முதலில் மொழியுரிமைதான் வேண்டும் - இது கிடைத்தால் சுதந்திரம் தானாகவே கிடைத்துவிடும்' என்றார்கள். உடனே அதைப் பெற்றார்கள், அதேபோல் தானாகவே சுதந்திரத்தையும் கண்டார்கள். எனவே எந்த இனமாக இருந்தாலும் சரியே, எதை இழக்கச் சம்மதித்தாலும் தம் அன்னை மொழியை மட்டும் இழக்கச் சம்மதிக்கவே மாட்டார்கள்.

## சின்னஞ்சிறிய நாடுகளும் - மக்கள் தொகையும்

| | | |
|---|---|---|
| 1. | கதார் | 50 ஆயிரம் |
| 2. | ஸ்பானிஸ் சகாரா | 1 லட்சம் |
| 3. | ஸரவக் | 6½ ,, |
| 4. | சிசிலின் | 60 ஆயி. |
| 5. | டான்ஜியர் | 1¾ லட்சம் |
| 6. | டிரூசியல் ஓமன் | 1 ,, |
| 7. | ஜான்ஜிபார் | 3 ,, |
| 8. | ஏடன் | 10 ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 9. | டோபாகோ | 9 | ,, |
| 10. | பஉற்ரைன் | 1½ | ,, |
| 11. | பெச்சுவானுலாண்ட் | 4 | ,, |
| 12. | பூட்டான் | 5 | ,, |
| 13. | போர்ணியோ வடபகுதி | 5 | ,, |
| 14. | புருணை | 75 | ஆயிரம் |
| 15. | கொமெரோரா தீவுகள் | 2 | லட்சம் |
| 16. | சைபிரஸ் | 6 | ,, |
| 17. | எரித்ரியா | 15 | ,, |
| 18. | பீஜித்தீவுகள் | 4 | ,, |
| 19. | காபூன் | 5 | ,, |
| 20. | மத்திய காங்கோ | 9 | ,, |
| 21. | உபங்கிசாரி | 13 | ,, |
| 22. | டஹோமி | 17 | ,, |
| 23. | மாரிடானியா | 8 | ,, |
| 24. | ஜிப்ரால்டர் | 50 | ஆயிரம் |
| 25. | குவைத் | 4 | லட்சம் |
| 26. | மேகாவ் | 2 | ,, |
| 27. | மகல்ல தீவுகள் | 3 | ,, |
| 28. | மால்டா | 5 | ,, |
| 29. | மொரிஸ்தீவு | 7 | ,, |
| 30. | மஸ்கத் ஓமன் | 10 | ,, |
| 31. | ஜோர்தான் | 18 | ,, |
| 32. | லிபியா | 13 | ,, |

இச்சுண்டைக்காய் நாடுகளும் - இனங்களும் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே உலக நாடுகளின் எண்ணிக்கை வரிசையில் தம்மையும் ஒரு அங்கத்துவ நாடாகப் புகழோடும் பெருமையோடும் அறிமுகப்படுத்திக்கொண்டன. எனவே இந்நாடுகளும் - இனங்களும் எந்தத் தாக்கமுமின்றிச் சுயமாகச் சிந்திக்கவும் - செயல்படவும் தனித்திறன் பெற்றுக்கொண்டதனுல்தான் உலகப் பெரும் வல்லரசுகளோடு, உலக விவகாரங்களில் ஈடு கொடுத்து நிற்க முடிகின்றன. ஆனுல் - இம் மக்களின் எண்ணிக்கையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் - இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பாதி எண்ணிக்கை கூட இல்லை - இருந்தும் அவைகள் விடுதலை பெற்ற இனங்களாக - நாடுகளாக உலகில் பீடுநடை போடுகின்றன.

## அன்றைய மக்களாட்சி

நாகரீகம் தோன்றி சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பெரும்பாலான நாடுகளில் ஆட்சி அமைப்புக்கள் முடியரசாகவும் - சிலர் ஆட்சியாகவுமே இருந்து வந்திருக்கின்றன. புராதன எகிப்து, அசிரியா, பாபிலோனியா, பர்சிய சாம்ராஜ்யங்கள், தமிழர் கண்ட சாம்ராஜ்யம், பண்டைய சீனு போன்ற பல நாடுகளிலெல்லாம் சமூகக் கட்டுக்கோப்புக்கள் நாம் மூக்கில் விரல் வைக்குமளவுக்கு அன்று அமையப் பெற்றிருந்ததை இன்று வரலாற்றில் படிக்கின்றோம். அவ்வப்போது நாட்டிலே ஏற்பட்டு வந்த பிரச்சனைகளை எல்லோரும் ஒருமித்து ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு தீர்த்துக்கொள்வதற்கு-அதிகாரம் பெற்ற அரசரோ - அன்றி பிரபுக்களோ பொதுமக்களைக் கூட்டியே எதற்கும் முடிவு காணும் வழக்கம் இந்திய உப கண்டம், கிரேக்கம் போன்ற நாடுகளில் நடைமுறையிலிருந்து வந்திருக்கின்றது. இதில் முடியரசாக இருந்தாலும் கூட, நாகரீகம் கொண்ட நாடுகளில் எப்போதுமே அளவுக்கதிகமான அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. மணிமுடி தரித்த மன்னராக இருந்தாலும் அடக்குமுறையில் நம்பிக்கைகொண்ட - முரட்டுச் சுபாவம் படைத்தவராக இருந்தால் மக்கள் தங்கள் எழுச்சிக் குரல்கள்மூலம் மன்னர்களை அவ்வப்போது மணிமுடி இழக்கச் செய்து விரட்டியிருக்கின்றார்கள். வேத காலத்தில் முக்கிய ஆட்சி அமைப்பாக முடியரசே செயல்பட்டு வந்தாலும், பிரபுக்களால் - அல்லது மக்களின் மேல் வகுப்புப்பிரதி நிதிகளால் அரசோச்சப்பட்ட குடியரசுகளும் கூடவே இயங்கி வந்திருக்கின்றன. இக்குடியரசை மனித தர்மத்துடன் நேரான வழியில் இயக்கிச் செல்ல அரசியல் அறிஞர்கள் அடங்கிய குழு ஒன்றும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தமதம் பரவிய காலத்தில் குடியரசு முறையும் பரவி வந்திருக்கின்றது. புத்தபெருமான் இளவரசராக அரசோச்சியகாலத்தில்ஐந்நூறு அங்கத்தவர்களடங்கிய 'சாக்கிசபை' ஒன்றைத் திறந்து வைத்து - குடியரசு முறைகளைப் புகழ்ந்து பேசினர் என்பதைப் பகவான் புத்தரின் வாழ்க்கை வரலாற்றிலே நாம் படிக்கின்ருேம்.

அன்றைய குடியரசு சித்தாந்தங்களில் இரகசிய வாக்களித்தல் முறை - நான்கில் ஒரு பங்கினர் ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தால்தான் அக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் செல்லுபடியாகும்-கூட்டத்தில் எந்தப் பிரச்சனையாவது கிளப்பப்படவேண்டுமானுல் கூட்ட அமைப்பாளர்களுக்கு முன்னறிவிப்புக் கொடுக்கவேண்டும்- ஒரு தீர்மானம் அக்கூட்டத்தில் நான்குமுறை நிறைவேற்றப்படவேண்டும்- மேலும் விவாதங்களைப்பற்றிய விதிகள் - பேச்சுக்களைச் சபை முதல்வர் கட்டுப்படுத்துதல் போன்ற பல்வேறு கொள்கைகளும் - விதிகளும் - அன்றைய கிரேக்கத்தில் நடைமுறையிலிருந்துவந்திருக்கின்றன. இன்று நமது மத்தியிலே இருந்து வரும் பெரும்பான்மையோரின் தீர்மானம்தான் செல்லுபடியாகும் என்ற கொள்கைக்குப் பதிலாக - எல்லோரும் ஒரே முடிவாக ஒரு பிரச்சனையில் தீர்வுகாணவேண்டும் என்ற விதியே அன்று நடைமுறையில் செயல்பட்டு வந்திருக்கின்றது - ஒருவேளை ஒரு பிரச்சனையில் முடிவாகவே முடிவு காண முடியாது - விவாதங்களில் இருசாரார் பக்கமும் நியாயமான காரணங்களிருந்தால் அப்பிரச்சனை ஓர் உபகுழுவின் கீழ் பரிசிலனைக்கு விடப்பட்டுத் தீர்க்கமான முடிவு காணப்படும். இதிலும் சில பல சிக்கல்கள் ஏற்பட்டால் காலவரையின்றி அப பிரச்சனை ஒத்திவைக்கப்பட்டு - பின் அவ்வப்போதுள்ள சூழ்நிலைகளுக்கேற்றவாறு இப் பிரச்சனை சமாதானமாகத் தீர்த்து வைக்கப்படும். ஆனுல்—

நாகரீகம் முதிர்ந்து - அரசியல் மேம்பட்டு வளர்ந்து- மக்களின் நிலையும் நினைப்பும் உயர்ந்தோங்கி நிற்கும் இன்றைய சுதந்திர நூற்ருண்டில் - எமது ஆட்சியாளர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

காட்டுமிராண்டித் தர்பார்களையும் நாம் பார்க்கின்றோம். இரு பெரும் தேசிய இனங்கள் வாழும் இலங்கையில் தமிழ் பெரும் தேசிய இனத்தின் அடிப்படை ஜீவாதார உரிமைப் பிரச்சனைகளெல்லாம் கபளீகரம் செய்யப்பட்டு - தேசியப் பேரவையிலும் அப்பெருமினத்தின் பலமான எதிர்ப்புக்களுக்கு மத்தியில் - தமிழினத்தின் பேரவைப் பிரதிநிதிகளைக் கட்டாயமாக வெளியேறச் செய்துவிட்டுப் பலவந்தமாகத் தனிச்சிங்களச் சட்டம் - குடியரசுச் சட்டம் - மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை - நீதிமன்ற மொழி மசோதா போன்ற பல்வேறு மசோதாக்களைத் துணிந்து சட்டமாக்கிவிட்டு அதன் கொடுமுடியிலே பவனி வந்த அதிசயத்தை நம்மால் இங்குதான் பார்க்கமுடியும்.

ஒரு ஆட்சி அறநெறியுடன் அரசோச்சினுல்தான் அந் நாடு செழித்து வளம் கொழிக்கும் என்ற உயர்ந்த சித்தாந் தத்தைப் பண்டைய எமது தமிழினம் முறையாகப் பேணிப் பாதுகாத்து வந்திருக்கின்றது. இத்தத்துவத்தை தமிழ் தந்த ஆயிரமாயிரம் பாவலர்களும் - அரசியல் அறிஞர்களும் வற்புறுத்திச் சென்றிருக்கின்றுர்கள். மணிமுடி தாங்கிய எம் மாமன்னர்களும் இத் தத்துவத்தைத் தம் உள்ளத்தின் அடித்தளத்திலே குடியிருத்திப் பெருமையோடு பூஜித்து வந் திருக்கின்றுர்கள்.

ஏன், இன்று உலகில் இருபதுக்கு மேற்பட்ட நாடு களில் சமஷ்டி ஆட்சி முறைகளை நாம் பார்க்கின்றோம். ஆனுல் இச்சமஷ்டி ஆட்சிமுறைகளைப் பலநூற்றுண்டுகளுக்கு முன்பே பண்டைய எமது தமிழகத்தில் எம்மவர்கள் நடை முறையில் செயல்படுத்தியிருக்கின்றனர். அதிகாரங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குவிக்கப்படாமல் இனம், கிரா மம், தொழிலாளர்கள் போன்றவைகளிடம் அன்றைய அர சியல் நிலைகளுக்கேற்றவாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. பாளையங்கள், சிற்றரசுகள் என்ற பெயர்களில் அதிகாரங் கள் பரவலாக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று - சோஸலிசம்கூட தமிழினத்திற்குப் புதி தல்ல. வீரம் செறிந்த பண்டைக்கால எம் தமிழினத்தின் வரலாற்றில் சமுதாயப் "பொது" என்ற ஒரு சொல் சர்வ சாதாரணமாகவே நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வந் திருக்கின்றது. எந்த ஒரு தனிமனிதனுக்கும் சொந்தமில்லா மல் - சகல இன மக்களுமடங்கிய சமுதாயத்திற்குச் சொந்த மாக இருப்பது எதுவோ - ஒரு அரசின் உற்பத்திகளைப் பல இனங்களைச் சார்ந்த அனைவரும் குடும்பமாகவோ - தனிப் பட்டவர்களாகவோ எப்படி ஒன்றித்துப் பங்கிட்டுக்கொள் கின்றனரோ அதைத்தான் "சமுதாயப்பொது" என்று எம் மவர்கள் பெருமையோடு பெயர் சூட்டிக் கொண்டாடி வந் திருக்கின்றனர். இச்சமுதாயப் பொது என்பதுதான் இன்று நாகரீகப் பெயராகச் சோஸலிசம் என்று பெயர் சூட்டப் பட்டிருக்கின்றது. உலக அரசியல் வாதிகளுக்கு எம்மவர்கள் கற்றுத் தந்த இச்சோஸலிசம்தான் இன்று தமிழினத்தின் வாழ்வுக்கு எதிராக ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## என்றுமே மக்களின் தேவைகள் ஒன்றுதான்

கிரேக்க நாட்டு மாகாணங்களில் முடிதாங்கிய அரசர்க ளுக்கு உதவியாக "மூத்தோர் சபை" என்ற ஒரு சபையும் கூடவே இயங்கி வந்திருக்கின்றது. இச் சபை நாட்டிலே ஏற்படும் முக்கியமான பிரச்சனைகளைச் சமரசமாகத் தீர்த் துக் கொள்ளப் பொதுமக்களைக் கூட்டிச் செயல்பட்டு வந்த தன் மூலம் மக்களாட்சிக்கு மெருகூட்டி வளர்த்து வந்தது. கிரேக்க மக்கள் அனைவரையும் அங்கத்தவராகக் கொண்ட இச்சபைக்கு இருந்துவந்த அதிகாரங்கள் போதாதென்று அரசியல் அறிஞர் "சோலன்" என்பவர் புதிய அரசியல் திட்டமொன்றை மக்களுககு அறிமுகப்படுத்தினர். அதில் குறிப்பாக - ஆண்டுக்கொரு முறை முப்பது வயதுக்கு மேற் பட்டோரெல்லாம் ஒரு சபையாகக் கூடி - ஆட்சியாளர்கள், அரசியல் அதிகாரிகள் ஆகியோர்களின் குறை நிறைகளை ஆராய்ந்து தகுதியிலும் திறமையிலும் வாய்ப்பில்லாதவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



களைப் பதவியிலிருந்து வெளியேற்றிவிடவேண்டுமென்ற கொள்கையை ஆழமாக அவர் வற்புறுத்தியிருக்கின்றார். என்றாலும் - மொத்த உருவில் ''சோலன்'' கண்ட அரசியல் கொள்கைகளில் பலமான குறைகள் கண்ட அறிஞர் "பெரிக்ளிஸ்'' என்பவர் புதிய அரசியல் தத்துவங்களை நாட்டுக்குக் காட்டினார். அதுவரை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள் இப்போது மக்களால் ''திருவுளச்சீட்டுமூலம்'' நியமிக்கப்பட்டனர். ஆனால்-இராணுவ அதிகாரிகள் மட்டும் இம்முறைகளினின்றும் தவிர்க்கப்பட்டு -மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்தல் முறைகளால் பணம் படைத்தவர்களும் - செல்வாக்குடையோர்களுமே அதிகமாக நன்மை பெற்றுக்கொண்டிருந்ததினால்தான் பெரிக்ளிஸ் என்பவர் இம்முறைகளில் நம்பிக்கைகொண்டு செயல்பட்டு வந்தார். அதனால் சபை உறுப்பினர்கள் அனைவரும் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே தத்தமது பதவிகளை இழக்கவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டு- குடிமக்களில் அனேகமாக ஒவ்வொருவரும் சபை உறுப்பினர்களாகவும் - நீதிமன்ற அங்கத்தவர்களாகவும் - அரச சேவையாளர்களாகவும் அங்கத்துவம் வகிக்கக்கூடிய சாத்தியம் ஏற்படலாயிற்று. இதனால் தனித்தனியாக இயங்கி வந்த அதிகார வர்க்கங்கள் பூண்டோடு அழித்தொழிக்கப்பட்டு மக்களாட்சியின் மாண்புக்கு மதிப்பளிக்கப்பட்டது. அதிகாரவர்க்கங்கள் அவ்வப்போது தத்தமது வசதிகளுக்கேற்ப இரகசியமாக நடத்திவந்த கூட்டங்களும் - தீர்மானங்களும் அடியோடு தவிர்க்கப்பட்டன. இனிமேல் - பிரச்சனைகள் அனைத்தும் ஒழிவு மறைவில்லாமல் குடிமக்களுக்குப் பூரணமாக விளக்கப்படவேண்டும் - அதிகாரிகளாகப் பதவிக்கு வருபவர்கள் தத்தமது நேர்மைகளை நாட்டுக்கு நிரூபிக்கவேண்டும் - மக்களின் பூரணமான ஆதரவைப் பெற்றே ஒரு தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பன போன்ற பலசிறந்த அரசியல் தத்துவங்களை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஆழமான அறிவால் தந்தார் - இதனுல் நாளடைவில் ஆதிக்கவாதிகளினதும் - நிலப்பிரபுக்களினதும் எண்ணிக் கைகளும் - எதேச்சதிகாரங்களும் சமுதாய - அரசியல் ஷீண திசையை நோக்கி வேகமாக விரைந்தன.

கிரேக்க நாட்டின் உயிர்த் துடிப்புள்ள அரசியல் அமைப் புக்கு ''எப்பார்ஸ்'' என்ற ஒரு ஸ்தாபனமும் அரசியல் சூருவெளிக்கேற்றவாறு ஆட்சிப்பொறுப்பை ஏற்று நேரான பாதையிலே இயங்க வைத்திருக்கின்றது. இச்சபையே பல அரசியல் கொள்கைகளேயும் வகுத்திருக்கின்றது. இச்சபை யைத்தான், இக்காலத்தில் எமது தலே எழுத்தை நிர்ணயிக் கும் மந்திரிசபை அமைப்புக்கு அரசியல் மேதைகள் ஒப்பிட் டுப் புகழ்ந்திருக்கின்ருர்கள்.

கிரேக்கர்களின் மக்களாட்சியின் தனித்துவத்தைப் புகழ்ந்து பெரிக்ளீஸ் என்பவர் பல சொற்பொழிவுகளே நிகழ்த்தியிருக்கின்ருர்.

"நாங்கள் மக்களாட்சி நடத்துகின்ருேம். எங்களது நாட் டின் நிர்வாகம் ஒருசிலரின் கைப்பாவையாகத் தேங் கிக் கிடந்து தவிக்கவில்லே. அறிவும் - அடக்கமும் பொறுப்புமுள்ள பல மேதைகளிடமே எப் போதும் அது ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஏற்றத்தாழ்வுகளுமில்லாது சட்டத்தின் முன்னே சகல ரையும்சமமாகப் பாலித்து நீதி வழங்குகின்ருேம். ஏழை என்பதற்காக எவருடைய அரசியல் உரிமைகளேயும் நாங்கள் கபளீகரம் செய்துவிட்டு - அவர்களே அரசிய லில் அனுதைகளாக்கவில்லே. எங்களது பொதுச் செயல் களில் கடவுள் பக்தி - நியாய பக்தி ஆகியவைகள் இழை யோடிருக்கின்றன. தீங்கிழைக்கப்பட்டவர்களேக் கட்டிக் காத்து நியாயம் கிடைக்கச் செய்யும் எங்களின் மகத் தான சட்ட திட்டங்களிடம் எங்களுக்குத் தனியான மதிப்புக்களுண்டு" என்று தன் ஆழ்ந்த சிந்தனேப் புலமை யால் எடுத்துக்காட்டி இருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கத்தின் (ஏதன்ஸ்) பொற்காலம் என்றுவரலாற்றில் புகழப்பட்ட கி, மு. ஐந்தாம் நூற்ருண்டின் மத்தியில் மக்களிடம் தனிச் செல்வாக்கும் - புகழும் பெற்றவர்தான் பெரிக்ளீஸ். என்ருலும் - என்னதான் புகழும், செல்வமும், செல்வாக்கும் கொண்டு கிரேக்க அரசியல் அரங்கில் முடிசூடா மாமன்னனுகத் திகழ்ந்தாலும் மக்களின் எண்ணங்களையும் - தேவைகளையும் புறக்கணித்து ஒதுக்கிவிடும் உரிமையும் - துணிவும் பெரிக்ளீசுக்கே கிடையாது, அதை அவரால் கற்பனையில்கூட நினைத்துப் பார்க்க முடியாது என்பதை அன்றைய வரலாறு எடுத்து காட்டுகின்றது நமக்கு!

ஏன், ஒரு சமயம் மக்கள் அவருக்கே அபராதம் விதித்துத் தீர்ப்பளித்து மக்களின் மகத்தான உரிமைகளையும், சக்திகளையும் உலகறிய எடுத்துக்காட்டியிருக்கின்ருர்கள். இதற்குத்தான் பெயர் - ஜனநாயகம். மக்களாட்சி, மனித தர்மம் என்பதெல்லாம் ஒரு நாட்டின் சிறப்புக்குரிய வழிகாட்டியாக இருந்தாலும்கூட, இறுக்கமான சட்டத்தின் முன்னே அவர் சக்தியற்ற தனிமனிதன்தான் என்பதை இந்நிகழ்ச்சி எமக்கு எடுத்துக் காட்டத் தவறவில்லை.

ஆனுல் - இங்கு நாம் வாழும் நாட்டில் மக்களின் மகத்தான வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் -அதேமக்களின் விருப்பத்திற்கு நேர்எதிர்மாருகச் சர்வாதிகாரத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டு - அடக்குமுறைகளால் தம் ஆட்சித் தேரை ஆடாமல் அசையாமல் ஓட்டிச்செல்லத் துடிதுடித்து நிற்கின்றனர். எப்படியோ தமக்குக் கிடைத்துவிட்ட ஒரு புனிதமான சந்தர்ப்பத்தை நேரான வழியில் பயன்படுத்தி மக்களை வாழச்செய்வதற்குப் பதிலாக, அரசியலை நாற்றமெடுக்கும் சாக்கடையாக்கி விட்டனர். நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி அதிகரிப்பு, லஞ்சம், பசி, பட்டினி, இனக்கொலை, அடக்குமுறை, பொருள்கள் தட்டுப்பாடு, உணவுகளுக்குக் கட்டுப்பாடு, வர்த்தகத் தாக்கம், கொலை, கொள்ளை, நாட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரப் பீதி, ஆட்சிக்கட்சிகளிடையே சலசலப்பு இப்படியான எத்தனை எத்தனையோ நெருக்கடிகளுக்கும் - பிரச்சனைகளுக்கும் மத்தியில் நள்ளிரவு வர்த்தமானிமூலம் நாம் வாழ்த்துகொண்டிருக்கின்றோம்.

இனம் எதுவாக இருந்தாலும் மக்களின் அடிப்படை உரிமைகளும் - தேவைகளும் - பிரச்சனைகளும் ஒன்றேதான் என்பதை எப்போதும் ஆட்சியாளர்கள் உணரத் தவறவே கூடாது. அன்று அரசியலில் பூரணமான நாகரீகமடையாத மக்கள் மத்தியிலே நடைமுறையில் இருந்துவந்த நல்ல பல கொள்கைகளெல்லாம் -இன்று நாகரீகத்தின் அடித்தளத்தையே அறிவின் கூர்மையால் ஆராய்ந்து பார்த்த இந்த இருபதாம் நூற்றுண்டில் இலங்கைபோன்ற சிலநாடுகளில் இன்னமும் அது கற்பனைச் சொல்லாகவே இருந்து வருகின்றது. கிரேக்க மக்களின் அரசியல் வாழ்க்கையில் இப்படியான உயர்ந்த கொள்கைகள் மட்டுமல்ல; பொருளாதாரத் துறைகளிலும் மேம்பாடு கண்டிருக்கின்றுர்கள். பண வசதி படைத்தவர்கள் பொதுக்காரியங்களுக்காகத் தேவையான நிதி உதவி அளிக்கவேண்டும் - நாட்டின் பொதுச் செல்வத்தில்தான் மக்களின் அன்றுட அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்படவேண்டும் என்ற பல கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஏன், காரல்மார்க்ஸ் கண்டுபிடித்துத் தந்த பொதுவுடமைத் தத்துவம்கூட, அன்று கிரேக்கப் பேரறிஞன் அரிஸ்டாட்டில் அறிமுகப்படுத்திய சித்தாந்தம்தானே!

அரிஸ்டாட்டில் கண்ட அரசியல் கலையில் 160க்கு மேற்பட்ட கிரேக்க மக்களின் அரசமைப்பு வரலாறுகளைச் சந்தித்திருக்கின்றுர். அரசியல் - சிந்தாந்த பூர்வமான அரசியற் கலையின் முழு அம்சமும் அடிப்படைத் தத்துவங்களின் விளைவாகவே மலர்ந்திருக்கின்றன. வரலாற்றின்வேர் கால்களில் இருந்து துளிர்கின்றன. நீதிமுறைகளைத் தழுவி நிற்கின்றன. அவர் தன் பகுதி, இனம் என்ற குறுகிய வட்டத்தைஒதுக்கிவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



டுப் பரந்த மனப்பான்மையுடனேயே தன் அரசியல் சித்தாந்தங்களை மிக நுணுக்கமாக வடித்தெடுத்திருக்கின்றார். அவரின் தத்துவத்தில் ஆழ்ந்த அர்த்தப் புஸ்டி அடங்கியிருக்கின்றது. அவர் சிலரின் விருப்பங்களை விட, நியாயத்திற்கும், மனித தர்மத்திற்குமே அதிகமான முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார். அவரது அரசியல் சிந்தாந்தத்தில் நிதானம் முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றது. ஏன், முழு உருவத்தின் உறுப்புக்களும் சின்னஞ்சிறு பிரச்சனைகளுக்கும்கூட இருக்கவேண்டிய ஏற்றத் தாழ்வுகளை நன்கு உணர்ந்தே – ஆழ்ந்தசிந்தனைக்குப் பின்தான் அரசியல் நெறி முறைகளை வகுத்திருக்கின்றார். நன்கு இணைக்கப்பட்ட சிந்தனைக் கோவையின் உருவமாகவே அவரது அரசியல் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு இனங்களின் உரிமைகளும் அவர்கள் சார்ந்துள்ள நாடுகளின் நாடி நரம்புகளிலேயே பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உரிமைகளில் எவைகளுக்காவது பங்கமின்றி, மக்கள் தம் வாழ்க்கையில் இறுக்கமான நம்பிக்கை வைத்துச் செயல்படவேதான் நாடுகளும், அரசுகளும் ஏற்பட்டன என்பதை எவருமே மறுக்கமுடியாது. பிலிப்ஸ், அலக்சாந்தர் போன்றவர்களின் ஓரளவான உன்னத ஆட்சி இயங்கி வந்த காலத்தில்தான் அரிஸ்டாட்டலும் வாழ்ந்து வந்திருக்கின்றார். அதனால்தான், "சிறுகக் கட்டி பெருக் வாழும்" நிலைதான் மனித இனத்தின் வாழ்க்கை அமைப்புக்கு ஏற்றதென்ற கருத்து அவருடைய தூய்மையான மனதில் நிலைத்துவிட்டது போலும்!

ஏன், இன்று உலக நாடுகள் கூட, குடும்பக்கட்டுப்பாட்டுக்காகத் தம் பொருளாதார நெருக்கடிகளிலும் கோடானு கோடி ரூபாக்களை அதற்காகச் செலவழிக்கின்றன. இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துங்கள் என்று தினம் தினம் கோஷமிடுகின்றன. அதை ஏற்றுக்கொண்ட மக்களுக்குச் சன்மானங்களும் வழங்குகின்றன. இனப் பெருக்கம் கூடிய ஜனநாயக நாடுகளில் அரசியல் கட்சிகளும் - தொழிற்சங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்களும் அளவுக்கதிகமாக குவிந்திருக்கின்றன. அதனுல் அங்கே குழப்பங்களும் - போட்டி பூசல்களும் தெருப்பொரு ளாக மலிந்திருக்கின்றன என்பதே சில அரசியல் வாதிக ளின் அசைக்கமுடியாத சிந்தாந்தமாகும்.

ஓர் அரசுக்கு எதிராக ஏற்படும் பயங்கரமான நோய் - அவ்வரசின் கொடூரத்தால் மக்களின் உள்ளத்தின் அடித் தளத்திலே இருந்து பீறிட்டெழும் தடுக்க முடியாத உணர்ச் சியே என்று அறிஞர் அரிஸ்டாட்டில் சுட்டிக்காட்டியிருக் கின்றூர். அரசியல் நீதிகளேப் பற்றி ஓர் இனத்தின் இருத யத்தில் ஒருதலேப்பட்சமான கருத்து ஏற்படும்போது அக் கருத்து அவர்களே வக்கிரமாகச் சிந்தித்துச் செயல்படத் தூண்டியிருக்கின்றது. இத்தகைய வக்கிரப் புத்திதான் புரட் சியின் வற்ருத ஊற்ருகும். மனித இனம், மதம், மொழி, நிறவேறுபாடுகளுக்கப்பால் சமத்துவம் கொண்டவர்கள் தான், பிறருக்குப் பணமும் - புகழும் கிடைப்பதைக் கண்டு ஏற்படும் ஆத்திரம்-பயம் - தனி நபர்களின் ஆணவப் பிர சித்தி - அருவெறுப்பு - தேர்தல் பித்தலாட்டங்கள் -நம்பிக் கையின்மை போன்றவைகளே அரசியல் அதிகாரங்களில் அமர்த்தும் போக்கு தற்கொலேக்கொப்பாகவே முடியும் ஒரு இனத்தின் சிறு மாறுதல்களில் கூட, அரசுகாட்டி வரும் அலட்சியம் - பாரபட்சம் போன்றவைகளே புரட்சியின் மனுேநிலே தோன்றுவதற்கான காரணங்களாக அமைகின் றன.

ஜனநாயகத்தில் மக்களாட்சிப் போர்வையில் நடக்கும் எல்லே கடந்த கொடுமைகளாலும் புரட்சி வேகமாகத் தோன்றும். அதே போன்று வன்முறைப் புரட்சியில் நம் பிக்கை கொண்ட பொதுவுடமைத் தோழர்களாலும் ஒரு ஜனநாயக நாட்டில் புரட்சி தோற்றுவிக்கப்படும். சுயநலக் கும்பலாட்சியின் அடக்குமுறை காரணமாகவும் மக்கள் புரட்சியைச் சந்திக்கலாம் - இப்படிப் புரட்சிகளிலே பல் வேறு வகையான புரட்சிகள் இருந்தாலும், தமிழ் பேசும் மக்கள் விரும்பும் புரட்சி இவைகளில் எதுவுமேயல்ல - அது தனி உரிமைப் புரட்சி. ஆயுதப் புரட்சியல்ல - அகிம்சைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

புரட்சி. எனவேதான் சொல்கின்றேன் - தமிழரசு காட்டும் இந்த அகிம்சைப் புரட்சியினுல்தான் தமிழினம் உய்ய உயர வழிபிறக்கும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்து அது செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது.

## ஒற்றுமையால் உயர்ந்த சுவிஸ்லாந்து

உலகில் எந்த ஓர் இனமும் எழுச்சி முகம் காட்டி இன்புறும்போது அது தனிச்சிறப்புடன் விளங்குவதும் - பின் அவ்வினத்திடையே ஊழலும் - பேயாட்டமும் மலியும்போது நலிவடைந்து அழிவதையும் வரலாற்றில் நாம் வரிக்குவரி எப்போதுமே படிக்கத் தவறுவதில்லை. காலத்தின் இந்த விதிகளுக்கு எந்த நாடுகளுமே விதிவிலக்கானதில்லை. ஆனல் - உண்மையும் - நேர்மையும் - தர்மமும் எந்தத் தடைகளையுமே உடைத்து நிரந்தரமாக நிலேத்து நிற்கும் பண்புடையதாகும் ஓர் அரசு எழுச்சி காண்பதும் - வீழ்ச்சியைச் சந்திப்பதும் அதை ஓட்டிச் செல்லும் ஆட்சியாளர்களின் கரங்களிலே தான் தங்கியுள்ளன. ஐரோப்பியக் கண்டத்திலே உள்ள பல நாடுகள் அரசியல் பண்புகளுக்கு மாருகப் பல்வேறு உள் நாட்டுப் போராட்டங்களையும்-சாம்ராஜ்ய சரிவுகளையும்-நடந்து முடிந்த உலகமகா யுத்தங்களால் அழிந்தொழிந்த வைகளையும் அரசியல் களத்திலே அறிந்துணரும் நாம் - அங்கே எந்த அழிவு சக்திக்கும் தன்னை உட்படுத்திக்கொள்ளாது ஒற்றுமையால் உலகுக்கு ஒளி ஏற்றிவைத்துப் பெருமையுடன் உயர்ந்தெழுந்த ஒரு நாட்டையும் ''சுவிஸ் லாந்து'' என்ற புனிதமான பெயரில் பார்க்கின்ரேம் - படிக்கின்ரேம்.

நாம் மேலே படித்த கிரேக்க நாடுகளைப்போன்று-மலைகளாலும் - ஆறுகளாலும் இருபத்திரெண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் சுவிஸ் எப்படியெல்லாம் தன்னைப் பெருமையோடு வாழவைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை நினைக்கும்போதே ஆச்சரியமாகத்தானிருக்கும். அங்கு வாழும் பல்வேறு இனங்களின் மத்தியில் இனப் போராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களோ - மொழிக் குளப்பங்களோ - தொழிற் பிரச்சனை களோ - அரசியல் அடக்குமுறைகளோ என்பனபோன்ற. எதுவுமே அம்மண்ணில் கிடையாது - போட்டி பொறுமை என்ற சொல் சுவிஸ் மக்களுக்கு எப்போதும் ஒரு நச்சுச் சொல்லாகவே இருந்து வருகின்றது. அதனுல்தான் ஒற்று மையால் உயர்ந்த நாடு சுவிஸ் என்று உலகநாடுகள் போற் றிப் புகழ்கின்றன.

அந் நாட்டில் நான்கு மொழிகள் பேசக்கூடிய மக் கள் ஒன்றித்து வாழ்கின்றுர்கள். ஜர்மன் மொழியாளர்கள் 72 சதவீதமும், பிரஞ்சு மொழி பேசக்கூடிய மக்கள் 21 சத வீதமும், இத்தாலிய மொழிக்குரிய மக்கள் 6 சத வீதமும், ரோமன் மொழி பேசக்கூடிய மக்கள் ஆக 1 சத வீதமுமா கவே ஒன்றித்து வாழ்கின்றுர்கள். 72 சதவீத ஜர்மன் மொழியாளர்களுக்கு எப்படிப்பட்ட உரிமைகளெல்லாம் இருக்கின்றனவோ, அதே உரிமைகள்தான் 21 சதவீதமான பிரெஞ்சுமொழியாளர்களுக்கும், 6 சதவீதமான இத்தாலிய மொழியாளர்களுக்கும், 1 சதவீதமான ரோமன் மொழியா ளர்களுக்குமாக அடிப்படை அரசியல் சட்டமூலம் கொடுக் கப்பட்டிருக்கின்றன. அந்தந்த இனங்களெல்லாம் போராட்ட வழிகளிலோ - புரட்சிப் பாதைகளிலோ இந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை, அரசியல் மேதைகளின் அறிவொ ளியால் - ஐக்கியத்திற்கு அச்சாணியாக அமைககப்பட்டதே பல்வேறு இனங்களின் பாதுகாப்புக்கான அரசமைப்பு ஆனுல்—

இலங்கையில் 35 லட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு - இருபது சத வீதம் கொண்ட இரண்டாவது பெரிய தேசிய இனத்திற்கு அடிப்படை அரசியல் சட்டத்தின்மூலம் அவர்க ளது உரிமைகளைக் கொடுத்துத் தன்மானத்துடன் வாழவைக்க சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் பிடிவாதமாகவே மறுத்து நிற் கின்றனர், 6 சத வீத இத்தாலிய மொழியாளர்களுக்கும் 1 சத வீத ரோமன் மொழியாளர்களுக்கும் அடிப்படை அரசியல் உரிமைகளைக் கொடுத்திருக்கின்றது சுவிஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



ஆனால் இருபது சதவீதமான தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் இங்கே மனித தர்மத்திற்கு மாறாகக் கபளீகரம் செய்யப்படுகின்றது. இதற்குத்தானா பெயர் ஜனநாயகம் - சோஸலிஸம் என்பதெல்லாம்?

சுமார் 50 லட்சம் மக்கள் தொகையைக்கொண்ட ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவிஸ், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் அடிப்படை அரசியலமைப்புக் களிலிருந்து தனக்கென ஒரு அரசமைப்பை வகுத்துச் சகல தேசிய இனங்களும் ஒன்றித்து வாழ ஐக்கியமாக அமைத்துக் கொண்டன, அதுவும் அமெரிக்காபோன்ற மாபெரும் வல்லரசு நாடுகளில் நடைமுறையிலிருக்கும் சமஸ்டி ஆட்சி முறைகளையே அவ்வினங்களும் விரும்பி ஏற்றுக்கொண்டன. அங்கு எந்தச் சட்டங்களைக் கொண்டு வந்தாலும் மக்களின் விருப்பு வெறுப்புக்களை நேரடியாக அறிந்துணர - பொது வாக்கெடுப்புமூலமே முடிவறிந்து சட்டமாக்கிக் கொள்கின்றார்கள். இதனால் சுவிஸ் மக்கள் எந்த நிமிடத்திலும் தவறாது ஆட்சியில் பங்கெடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள். ஆகவேதான் அங்கு விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், உணவுத் தட்டுப்பாடு போன்ற அனைத்துமே பிரச்சனைகளின்றித் தவிர்க்கப்பட்டு வருகின்றன. ஆட்சி, கட்சி என்பன எதுவாக இருந்தாலும் மக்களின் அடிப்படைத் தேவைகள் ஒன்றுதானே!

இந்நிலையில் - எமது ஆட்சியாளர்களுக்குத் தீர்க்கமான திட்டவட்டமான கொள்கைகள் எதுவுமே இல்லாததினால் நாளுக்கு நாள் சட்டங்களும் - அறிவிப்புக்களும் - பின் அதற்குப் பல மாற்றங்களும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இதனால் மக்கள் தினம் தினம் புதிய புதிய சிக்கல்களைச் சந்திக்கவேண்டியதாக இருக்கின்றது.

சுவிஸ் நாட்டின் நடுநிலைக் கொள்கை இருபெரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. முதலாவது:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த காலங்களில் முக்கியத்துவம் வாய்ந்த பல ஐரோப்பிய கேந்தர ஸ்தானங்களை அது தன்னகத்தே கொண்டுள்ளதால் அந்நிய படை எடுப்புக்களில் நின்றும் தன்னைக் காத்துக் கொள்ளும் அவசியத்தால் ஏற்பட்டது.

இரண்டாவது:- பலதரப்பட்ட இனங்களை சுவிஸ் உட்கொண்டுள்ளதால் நடுநிலையொழிந்த ஏனைய அயல் நாட்டுக் கொள்கைகளால் உள்நாட்டுக் குழப்பங்களும்-க்ருத்து வேறுபாடுகளும் வளர்ந்து மக்களின் நிரத்தர ஐக்கியத்தை அழித்தொழித்து நாட்டையே சாம்பர் மேடாக்கி விடும் என்று பீதிகொண்டதேயாகும். ஜர்மனியுடன் பூரண உறவு கொண்டால் தன் நாட்டில் வாழும் பிரஞ்சுமொழி பேசக்கூடிய மக்களின் எதிர்ப்பைத் தேடிக்கொள்ளவேண்டி வரும் - பிரான்சுடன் தொடர்பு வைத்தால் ஜர்மன்மொழி பேசக்கூடியவர்கள் பகை உணர்ச்சி கொள்வார்கள், இத்தாலியுடன் தொடர்பு கொண்டால் அதேபோன்று மற்றைய மொழியாளர்கள் வேதனைப்படுவார்கள். ஆகவேதான் எந்த இன, மத, மொழி வேறுபாடுகளுமின்றி அறிவில் கிறந்த அரசியல் சித்தாந்தத்தை சுவிஸ் பெருமையோடு கடைப்பிடித்து உலகில் உன்னத இடத்தை அது பெற்றுக்கொண்டிருக்கின்றது. வாழ்த்துகின்றோம் அதை!

விண்ணகத்தில் இயங்கும் கோள்களும் - மீன்களும் எண்ணிற் பலவாயினும் எவ்வாறு தத்தமது இடங்களில் இருந்து கொண்டே மண்ணில் வாழும் உயிரினங்களுக்குத் தம்மாலான ஒளியுமிழ்ந்து மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருக்கின்றதோ-அதைப் போலவே சுவிஸ்நாட்டில் வாழும் மக்களின் இன ஐக்கியமும், அரசியல் உணர்ச்சிகளும் உலகிற்கு மேலான வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன. இந்நாடு புனிதமான தன் நடுநிலைக் கொள்கைகளால் நான்கு வெவ்வேறு மொழி பேசுவோர்களையும் - மூன்று இனங்களையும் உள்ளடக்கி உயர்ந்தோங்கி வாழ்கின்றது. அங்கு வாழும் பிரெஞ்சு மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவோர்களுக்கு பிரான்ஸ்மீது இயற்கையாகவே ஏற்ப டக்கூடிய அன்பும் ஆதரவும் இருக்கின்றது. அதே போன்று இத்தாலிய மொழி பேசுவோர்களுக்கு இத்தாலிமீதும்- ஜர் மன் மொழி பேசுவோர்களுக்கு ஜர்மன்மீதும் தனியான பரி வும் பாசமும் இருக்கின்றன. என்றாலும் அங்கு வாழும் பல் வேறு இன மக்களுக்கும் தனித்தனியான கலாச்சாரம்-நாக ரீகம் – பண்பாடு - சமத்துவ உணர்ச்சி - சகோதரத்துவப் பாசம் ஆகியவைகளே மேலோங்கி நிற்கின்றன.

சுவிஸ் சகல இன மக்களுக்கும் சமத்துவம் வழங்கி கௌரவிக்கும் அடிப்படைக் கொள்கையினால்தான் அவ்வி னங்கள் தேசிய ஒற்றுமைகளைக் கட்டிக்காத்து வளர்த்து வருகின்றன.

சுவிஸ்நாட்டின் சமஷ்டி அரசின் அதிகாரங்கள்-அமெ ரிக்கா தன் சமஷ்டி அரசுகளுக்குக் கொடுத்த அதிகாரங்களை விடச் சற்றுக் கூடுதலாகவே கொடுத்திருக்கின்றது. தனிச் சட்டம் - கல்வி - வணிகம் ஆகிய துறைகளை ஒட்டிய விவ காரங்களை அந்தந்த சமஷ்டி அரசுகளே நிர்வாகித்துக் கொள்ளும். இச் சமஷ்டி அரசின் அதிகாரங்களை எப்படியான அரசியல் சட்டங்கள் மூலமாகவோ - நீதிமன்ற மூலமாகவோ துளியேனும் மாற்றமுடியாது. இது மக்களின் உரிமைகளுக் கும் - கௌரவத்திற்கும் தரப்பட்ட மிக உயர்ந்த அந்தஸ் துக்களாகும்.

## விடுதலையும் - அடக்குமுறைகளும்

"விடுதலை" என்ற நான்கெழுத்துச் சொல் அவ்வளவு சுலபமாக உச்சரிக்கக்கூடிய ஒரு வார்த்தையல்ல - இரத்த வெறியும் - பிணப் பசியும் கொண்ட பயங்கரமான மிருகத் தின் உள்ளத்திற்குள் அடங்கியதுதான் அது. அச் சொல்லை உள்ளத்தின் ஆழத்திலே குடியிருத்தி பூஜிக்காதிருந்தால் விடுதலை உணர்வில் மனித இனம் வாழவே முடியாது, எல்



156261
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோராலும் இச் சொல்லின் சக்தியை உணரவும் முடியாது. உயிரைப் பணயம் வைத்துக் களங்கள் பல கண்ட விடுதலை வீரர்களால்தான் அச்சொல்லின் சக்தியின் மேன்மையை உணர்ந்தறிய இயலும். அவர்களுக்கு இது வாழ்க்கைக்கு வேண்டிய ஒளி விளக்கு. மண்ணுலக சொர்க்கம்.

ஆனால் இருண்ட உலகின் கோழைகளாக - குருடர்களாக - என்றுமே பாதம் தொழுது - காட்டிக் கொடுத்து அடிமை வாழ்வே மனித இன்பம் என்று நரக வாழ்வு வாழத் துடிக்கும் சதைப் பிண்டங்களுக்கு அது கற்பனைச் சொல். ஒரு இனம் தன் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடி மடிகின்றதென்றால் - அதிலே அந்த இனம் தனி இன்பம் காணுகின்றது என்றுதான் பொருள்!

வருங்காலத்திற்கு வேண்டிய ஒரு சுதந்திர சமுதாயத்தை - நாம் சார்ந்துள்ள எம் தனிப்பெருமினத்தை விடுதலைச் சின்னமாக பீடுநடையுடன் வாழவைக்கத் துடிக்கின்றோம் - மடிகின்றோம் என்பதில் தனிப் பெருமை - இன்பம் இல்லாதிருக்க முடியுமா?

பொதுவுடமைத் தந்தை காரல் மார்க்ஸ் அடிமைப் பட்ட ஒரு இனம் இன்பம் காணவேண்டுமானால் - விடுதலைப் படையாகப் பெருகி அழிவையும் - ஆனந்தத்தையும் ஒரே இதயத்தால் சுவைத்துக்கொள்ளத் துணிந்துகொள்வதன் மூலம்தான் அதைப் பெறமுடியும் என்று வற்புறுத்தியிருக்கின்றார். எனவே ஓர் அடிமைப்பட்ட இனம் தன் சொந்தப் பாதுகாப்புக்களுக்காக எதை இழக்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும். உயிர் - உடமை - மனைவி - மக்கள் எவைகளுமே விடுதலைக்கு ஈடாக முடியாது என்பதைக் காரல்மார்க்ஸின் தத்துவம் ஆழமாக இதில் எடுத்துக் காட்டுகின்றது.

அடிமைத்தனமும் அச்சமும் - ஒரே தாயின் இரட்டைக் குழந்தைகள். அடிமைத்தனத்தையே தன் வாழ்க்கையின் அச்சாணியாகக் கொண்டிருக்கும் ஒரு இனம் ஒவ்வொரு நிமிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

முமே உயிருடன் செத்துச் செத்துப் பிழைத்கொண்டேதான் இருக்கின்றது. அது அந்த இனத்தைச் சார்ந்த சிலரின் பழக்கப்பட்ட கொள்கையேயாகும். ஒரு இனத்தை அடிமைப் படுத்தியிருக்கும் ஆட்சி - அதிகாரம் - ஆதிக்கம்-ஆகியவைகளின் அனல் தெறிக்கும் கொள்கைகள் இச் சிலரது இருண்ட வாழ்வில் பின்னப்பட்டிருக்கின்றது. தன்னிச்சையாக இவர்களால் எதைப்பற்றியுமே சிந்திக்கமுடியாது - செயல்படவும் இயலாது. இதை உடைத்தெறிந்து ஆர்த்தெழுந்தால் அங்கே இயற்கையாக மனிதஇன உரிமைகள் தோன்றிவிடுகின்றன. அப்போது பாதம் வணங்கி - இன உரிமைகளைக் காட்டிக்கொடுத்து ஈனத்தனமாக வாழ்ந்த அவர்களது வாழ்க்கையும் பறிபோய்விடும்.

உலகம் தோன்றிய அன்றுமுதல் இன்றுவரை, இரு பெரும் சக்திகளாலேயே உலகம் உருட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. சுதந்திரம், அடக்குமுறை என்ற இந்த இரண்டு சக்திகளும் மனிதன் விழிப்படைந்து வரலாறு கண்டகாலம் தொடக்கம் ஓயாது தினம் தினம் பல போர்க்களங்களைக் கண்டே வந்திருக்கின்றன. தம் ஆதிக்க வெறிகளின் அடக்குமுறைகளுக்குப் பல பிணக்குவியல்களைக் காணிக்கையாக்கி - இரத்த ஆறுகளை ஓடவிட்டுச் சுதந்திரதேவியின் ஆசீர்வாதத்தைத் தம்பக்கம் திருப்பியிருக்கின்றன. அடக்குமுறைகள் கண்ட இனங்களின் வரலாற்றில் இவைகளைத்தான் எந்தப்பக்கம் புரட்டினாலும் பார்க்கின்றோம், படிக்கின்றோம் - தம் ஆதிக்க வெறி நிலைத்து நிற்கவேண்டுமே என்ற மிருகத்தின் நப்பாசையில் - மனித உருவில் காட்டிக்கொடுத்து வாழும் மிருக உணர்ச்சி கொண்டவர்களைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டு - அடிமைப்பட்ட இனத்தின் அத்தியாவசிய - அன்றைய பொறுமைகளையும் - சகிப்புத் தன்மைகளையும் - தம் வெறிகளுக்குப் பக்கபலமாக்கிக் கொண்டு அடக்கியாள நினைக்கும் அரசு - அழிவை நோக்கி வேகமாக விரைகின்றது என்றுதான் அரசியல் விற்பன்னர்கள் கூறியிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் - "ஹாரோல்ட்லாஸ்கி" போன்ற மேனாட்டு அறிஞர்களெல்லாம் - இரந்து வாழும் அடிமைத் தனத்தின் சொந்தக் குழந்தைதான் காட்டிக் கொடுத்து வாழும் கயமைத்தனம் என்று ஒளிவுமறைவின்றிக் கூறியிருக்கின்றார்கள்.

மிருகத்தனமான அடக்குமுறைகளால் ஒரு இனத்தின் அடிப்படை ஜீவாதார உரிமைகளைக் கபளீகரம் செய்து வரும் ஒரு நாட்டைப் பார்த்து - எந்த மாமேதைகளும் உண்மையிலேயே இது ஒரு நாடு என்று கூறுவது கிடையாது. மாறாக - கொலைக்களம் - பலிபீடம் - வெடிமலை போன்ற பல புனைப்பெயர்களையே அதற்குச் சூட்டியிருக்கின்றார்கள். மனித தர்மத்தில் நின்றும் ஒதுக்கிவிட்டிருக்கின்றார்கள். நாடு என்றால் - மக்களும் - மண்ணும் - மலையும் -காடும் வீடும் என்பவைகளெல்லாம் சேர்ந்ததல்ல - ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களின் தேவைகளும்-எண்ணங்களும் - உரிமைகளும் - பூர்த்தியாக்கப்பட்டு, அவ்வினம் இனப்பெருமையுடன் வாழ வழி வகுத்துக்கொடுக்கும் தன்மைகளிலிருந்துதான் அது நாடு என்ற புனிதமான பெயரைத் தேடிக்கொள்கின்றது.

எனவேதான் எந்த இடத்தில் அடிமைத் தனம் என்ற சொல் வழக்கற்றுச் சுதந்திரம் அரசோச்சுகின்றதே - அந்த இடம்தான் எனது மதிப்புக்கும் - கௌரவத்திற்கும் உரிய நாடு என்று சொன்னான் ஆங்கிலக் கவிஞன் மில்டன்.

அதே போன்று - மக்கள் தொகையையோ - நீர்- நில வளம் - செல்வம் ஆகியவைகளையோ கொண்டு - ஒரு நாட்டைப் பார்த்து மாண்புறு அரசுகொண்ட நாடு என்று கூற முடியாது. ஒரு நாட்டில் வாழும் பல்வேறு தேசிய இன மக்கள் கொள்ளும் மகிழ்ச்சிகளைக் கொண்டுதான் அந்நாட்டிற்கு மதிப்புத்தரமுடியும் என்றான் பிரஞ்சு அறிஞன் "மாண்டெஸ்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



அதிகார வெறி கொண்டவர்களும் - அடக்குமுறைகளில் நம்பிக்கை வைத்தவர்களும் - அரசியல் நீரை நாற்றமெடுக்கும் சாக்கடையாக்கிக்கொண்டிருப்பவர்களும் - மனித தர்மத்தை ஊனமாக்கிக்கொண்டிருப்பவர்களும் - ஒரே நாட்டில் வாழும் பல தேசிய இனங்களை ஒன்றோடொன்றுமோத விட்டு இடையிலே வழிந்தோடும் குருதிகளைக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்பவர்களும் - காட்டிக்கொடுத்துத் தாம் சார்ந்துள்ள இனத்தின் விடுதலை எழுச்சியைத் தன் சுயதேவைகளுக்காகப் பலியிட்டுக் கொள்ளத் துடித்து நிற்கும் இரண்டு கால் மிருக உணர்ச்சி கொண்டவர்களும் வாழும் - ஒரு நாடு என்ற போர்வையிலுள்ள சுடுகாட்டைப் பார்க்கிலும் - தியாக உள்ளம் கொண்ட ஒரு விடுதலை வீரனுடைய சவக்குழிக்கு அதிகமான ஜீவகளை இருக்கின்றது என்றான் இத்தாலிய எழுச்சிக்கு வித்தூன்றிய மதிப்பிற்குரிய மாஜினி.

தத்தமது இனங்களின் உரிமைகளுக்காக அந்த இனத்தைச் சார்ந்த ஒவ்வொரு உயிரினங்களும் தம் உயிர்களைப் பணயம் வைத்துப் போராடிக்கொண்டிருப்பதைத் தினம் தினம் நாம் பார்க்கின்றோம். தங்கக் கூண்டு என்றாலும், சுயமாகச் சுற்றித்திரியும் பறவை இனம் விண்ணளாவி வாழத்தான் துடிக்கின்றதே தவிர அதில் அடைபட்டு வாழ அது நினைப்பதுகூட இல்லை. வெறிகொண்ட வேங்கை முதல்- சாதுவையே தனதாகக் கொண்டுள்ள வெள்ளாடு வரை விடுதலையோடு வாழவே விழைகின்றன. ஈ எறும்பு முதல் எண்கோடி ஜீவ ஜந்துக்களும் விடுதலை வாழ்வுக்காகவே ஒவ்வொரு வினாடியும் துடிக்கும்போது - தமக்கென ஒரு மொழியும். அரசியல் உணர்வும் - நாகரீகமும் கொண்ட தமிழினம் மட்டும் எந்த அடிப்படையில் அடிமை வாழ்வை அமைதியாக அணைத்துக்கொண்டிருக்கமுடியும்? உறவை - உணவை உடையை - குழந்தைப் பாசத்தை - குடும்பப் பற்றைப் போன்ற எவைகளை வேண்டுமானாலும் - அப்படியே இழந்து விட்டுத் தனித்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டாலும் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமைகளை மட்டும் நான் கண்டிப்பாக இழந்து விடவே மாட்டேன் என்ற முழக்கத்தை எங்கெல்லாமோ இருந்து நாம் கேட்கின்றோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் எப்போதுமே நாம் தனித்தன்மை கொண்ட - இனம் வரலாறுக்ண்டு - மொழிபடைத்தவர்கள் நாம் - வீரம் - விஞ்ஞானம் - வணிகம் - தர்மம் - அரசியல் - நீதி - பண்பு - நாகரீகம் - சமத்துவம் - சகோதரத்துவம் - கலைகள் - இலக்கியம் போன்ற ஆயிரமாயிரம் வழிமுறைகள் கண்டவர்கள்தான் நாம். எனவே இப்பெருமைகளையும் - உரிமைகளையும் கண் எனப் பேணிக்காக்க வேண்டியது எமது கடமைகளல்லவா?

எமதுள்ளங்களிலே கடமை உணர்வு துளிர் விடவில்லையானல் எம் உரிமைகளை எந்த வழிகளிலுமே பெற்றுக் கொள்ள முடியாது. உரிமை உணர்வோடு ஒட்டிஉறவாடிக் கொண்டிருப்பதுதான் கடமை என்ற மூன்றெழுத்தும். இன்று உலகம் இயங்கிக் கொண்டிருப்பதும் இக்கடமை உணர்வில்தானே! மனைவிக்கு நல்ல வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற கடமை கணவனுக்கு இருக்கின்றது- தன் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தைத் தேடிக் கொடுக்க வேண்டிய கடமை பெற்றேர்களுக்கு இருக்கின்றது - வயது முதிர்ந்த பெற்றேரைக் காக்க வேண்டிய கடமை பிள்ளைகளிடமிருக்கின்றது - குடும்பம் கூட்டுறவாக ஒன்றித்து வாழவைக்க வேண்டிய கடமை அதன் தலைவனிடத்திலிருக்கின்றது - ஒரு அரசு மக்களுக்குச் சுபீட்சமான வாழ்க்கை அமைப்பைக் கொடுக்க வேண்டிய கடமை ஆட்சியாளர்களிடமிருக்கின்றது - ஒரு சமுதாதயத்தில் நல்லவர்களாக வாழ வேண்டிய கடமை அதைச் சார்ந்தவனிடமிருக்கின்றது - இப்படிப் பல்வேறு துறைகளிலும் கடமை உணர்வை மையமாக வைத்துத்தான் உலகமே வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது. ஆனல் தத்தமது கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணங்களும் - உணர்ச்சிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே வரண்டு விட்டவர்களுக்கும் - உழுத்துப்போன மரக்கட்டைகளுக்குமிடையே எந்த வேறுபாடுகளும் காண முடியாது.

இக்கடமையை நன்கு ஆய்ந்துணர்ந்து மனிதனோடு - மனிதப் புனிதனாகப் வாழ விழைபவர்களுக்குத்தான் கடமை - உரிமை போன்ற மேலான தத்துவங்களை பகுத்துணர முடியும். ஒரு இனத்தின் உரிமைகளுக்குப் பங்க மேற்படுகின்ற காலத்தில் இக்கடமை என்ற சொல்லின் சக்தியை உணர்ந்தவர்களால்தான் வீறுபெற்றுப் போராடவும் இயலும்.

எந்த ஒரு மனிதனும் சமுதாயக் கட்டுக்கோப்பில் நின்றும் தனியாகப் பிரிந்து - தன் வாழ்வைத் தனித்து அமைத்துக் கொள்ள முடியாது, அது பண்புள்ள மனித வாழ்வாகவும் ஆக இயலாது. ஒரு சமுதாயத்தின் மத்தியில் பிறந்து விட்ட மனிதன் அச் சமுதாயத்தின் பூரணமான ஆதரவுகளைக் கொண்டே வளர்கின்றான் - வாழ்கின்றான். அவனது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் அவன் சார்ந்துள்ள அச்சமுதாயம் அவனுக்கு ஊக்கமூட்கின்றது. உதவியளிக்கின்றது - அப்போது அச்சமுதாயத்தின் ஒவ்வொரு நாடித்துடிப்பிற்கும் அவன் கடமைப்பட்டு விடுகின்றான். அச்சமுதாயத்தின் உரிமைகள் எல்லா மக்களுக்கும் பொதுவானது - அதே போன்று அதன் வாழ்வு தாழ்வுகளிலும் அதைச்சார்ந்த அத்தனை மக்களுக்கும் பூரணமான பங்கிருக்கின்றது.

மனிதன் பிறக்கும் போதே தனக்குரிய தனிப்பெரும் உரிமைகளுடனேயே பிறக்கின்றான். இப்பிறப்பால் பெறப்பட்ட மனித உரிமைகள் எதையுமே அகம்பாவத்தால் அழித்தொழிக்க நினைக்கும் அரசு சில சமயங்களில் இயற்கையின் தாக்குதல்களாலேயே அழிக்கப்பட்டு விடுகின்றன. அதைத்தான் மதவாதிகள் அரசன் அன்று கேட்பான் - தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று கேட்கும் என்று சித்தாந்தமாகச் சொல்லுகின்றனர் கள். ஆனால் - இங்கே இத்தவறுகளைச் செய்ததே, அரசாக இருக்கும் போது - அரசு தட்டிக் கேட்கமுடியாது இதை. அங்கே நின்று கேட்கும் தெய்வத்தாலும் - வெந்துகொண்டிருக்கும் மனித உள்ளத்திற்கு உடனடியாகப்பலன் ஏற்படுமோ! என்னவோ!! அதுமனித சக்திக்கே அப்பாற்பட்டது.

மனிதஇன உரிமைகள் பற்றி இன்றைய வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்கா இன்றைக்கு 197 ஆண்டுகளுக்கு முன்பே மனித உரிமைகளுக்கு மதிப்பளித்துச் சட்டதிட்டங்களையே இயற்றி வைத்திருக்கின்றது. இனப் பாதுகாப்பென்னும் சமஷ்டி ஆட்சி முறைகள் மூலம் பல்வேறு இன மக்களுக்கும் அடிப்படைச் சட்ட அமைப்புக்களால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கியிருக்கின்றன. அதே போன்று தன் தேசியக் கொடியிலும் அங்கு வாழும் சகல தேசிய இனங்களுக்கும் பாதுகாப்பளிக்கும் உத்தரவாதமாக நட்சத்திரச் சின்னங்கள் தந்திருக்கின்றது.

பிரான்ஸ் தேசிய இனப்பிரச்சனைகளில் நடந்துகொண்ட முரட்டுத்தனமான கொள்கைகளினால் தக்க நேரத்தில் நல்ல பாடம் கற்றிருக்கின்றது. மாபெரும் வீரன் நெப்போலியனால் கட்டி எழுப்பப்பட்டுச் சாம்ராஜ்யம் கண்ட பிரான்ஸ் தன் நாட்டுச் சிறுபான்மை தேசிய இனமான ''கியுஜிகொச்'' மக்களுக்குச் சம உரிமை கொடுக்கப் பிடிவாதமாக மறுத்ததே அதன் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. மாபெரும் வல்லரசு - அகண்ட சாம்ராஜ்யம் படைத்த பிரான் சால்கூட, சிறுபான்மை மக்களின் எழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் அணை கட்ட முடியாமல் திணறி இருக்கின்றது - தோல்வி கண்டிருக்கின்றது.

இவ்வுரிமைகள் பற்றி ''ஜோன்ஸ்டுவர்ட்மில்'' என்ற அறிஞர் கூறும்போது - ஒருவன் தன்னுடைய மனோ நிலைக்கேற்ப உணர்தல் - சுயமாகச் சிந்தித்தல் - நல்ல வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுதல் என்பன போன்ற எந்தப் பிரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனைகளிலும் - மற்றவர்களுக்குப் பாதகமில்லாது தன்னுடைய நேரான வளர்ச்சிக்கும் தேவைக்கும் ஏற்றவாறு தன்னை வழி நடத்திக் கொள்ளும் உரிமைகளைத் தடுப்பவர்களை நாகரீகம் தெரியாத காட்டுமிராண்டிகள் என்று எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

இயற்கையின் நியதியான இந்த உரிமைகளைப் பற்றி அரசியல் விற்பன்னர்கள் இருபெரும் காரணங்களைக் கொண்டிருக்கின்றனர். ஒரு நாட்டுக்குட் பட்ட மக்கள் அங்கே அனுபவிக்கின்ற உரிமைகள் அனைத்துக்கும் பொதுவாகச் சமுதாய உரிமைகளென்றே இவர்கள் பெயர் சூட்டியிருக்கின்றார்கள் - மக்களின் உடமைக்கும் - உரிமைக்கும் - உயிருக்கும் எந்த ஆபத்துக்களுமே ஏற்படாமல் காப்பாற்றிக் கொள்வதற்கு எப்படியான பாதுகாப்புக்கள் தேவைகளோ அதைத்தான் ''சமுதாய உரிமை'' என்று அழைக்கின்றனர். அந்நிய படையெடுப்புக்கள் - உள்நாட்டுக் கலகங்கள் போன்றவைகளில் நின்றும் ஒரு இனம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சமுதாய உரிமைகள் என்பதன் மூலம் வாய்ப்புப் பெற்றிருக்கின்றது.

இரண்டாவது - அரசியல் உரிமைகள். ஒரு நாட்டின் அடிப்படை அரசியல் சட்டத்தின் மூலம் எப்படியான தாக்கங்களுமின்றி இயற்கையாகவே கிடைக்கப்பெறவேண்டிய ஒன்றாகும் அது.

## நாட்டின் பொருளாதாரமும்

## வேலையில்லாத் திண்டாட்டங்களும்

பொருளாதாரம் - பொருளாதாரம் என்று தினம் தினம் கோஷமிட்டுக்கொண்டு - கட்சியில் வளர்ச்சி காணத் துடித்து நிற்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளும் - தொழிற்சங்கங்களும் தம் கோஷத்தின் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றியே சிந்திப்பது கிடையாது. பட்டினியோடு எப்படிப் பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாளத்திற்கு அணிவகுக்க முடியாதோ, அதே போன்று- நாட்டு மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டங்களும்-பசியும் - பட்டினியும் - கொடுங்கோலாட்சி நடந்துகொண் டிருக்கும் நிலையில் - எந்த வழியில் அந்நாடு பொருளாதார அபிவிருத்தியில் மேம்பட்டு ஓங்கமுடியும்? கடந்த 1955ம் ஆண்டு சுமார் 71 ஆயிரமாக இருந்த வேலையில்லாதோ ரின் தொகை இன்று பல லட்சோப லட்சமாக உயர்ந்து இந்நாட்டையே பீதிகொள்ளச் செய்திருக்கின்றது. ஒரு வேலைக்கு அரசாங்க நியமனம் நடைபெறவேண்வடுதாக இருந்தால் அதற்காகச் சகல தராதரங்களும் பெற்ற நூற் றுக்கணக்கானோர் அரசியல் செல்வாக்குகளுடன் போட்டி போடுவதையும் - அதற்காகப் பணத்தை வாரி இறைப்பதை யும் சர்வசாதாரணமாக வேதனையுடன் நாம் பார்க்கின் றோம்.

உதாரணமாக:- சென்ற ஆண்டுகளில் பத்தாயிரம் மாணவ ஆசிரியர்களுக்குரிய காலியான இடங்கள் இருந்த போது "ஐம்பது ஆயிரம் பேர்'' அதற்குத் தகுதியுடன் விண்ணப்பித்திருக்கின்றனர். இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்கு 1,000 பஸ்சாரதிகளும் - கண்டக்டர்களும் தேவைப் பட்ட நேரத்தில் சுமார் 25,000 பேர் அதற்காக விண்ணப் பித்திருந்தனர். இராணுவத்தில் 100 இடங்கள் மட்டும் நிரப்பவேண்டியிருந்தபோது, அதற்காக 50,000 பேர்வேலை கோரி முன்வந்தனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நாம் அறிந்த புள்ளி விபரங்களின்படி 3,55,500 எஸ். எஸ். ஸி. தராதரம் பெற்றவர்களுள் 1,35 000 பேர் வேலை வாய்ப்புக்களின்றி அலைகின்றனர். ஆனல் இக்கணக்கு இப்போது பலமடங்கு கள் அதிகரித்திருக்கவேண்டும்.

1964ம் ஆண்டு வெற்றிடங்களாக இருந்த 200 நகரப்பாது காவலர்கள் வேலைக்கு எஸ். எஸ். ஸி. தராதரம் பெற் றிருந்த 17,500 பேர் மனுச்செய்திருந்தனர், அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

போன்று 1972ம் ஆண்டு தேவைப்பட்ட சுமார் 2801 நக்ரப் பாதுகாவலர் உத்தியோகத்திற்கு 64,047 பேர் மனுச் செய்திருக்கின்றனர். சென்ற ஆண்டு 260 பொலிஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்காக 5,994 பேர் விண்ணப்பித்திருக்கின்றனர். கடந்த சில ஆண்டுகளுக்குமுன் 5,30,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை இல்லாதிருக்கின்றனர். எமது திட்ட இலாகாவின் மதிப்புப்படி ஆண்டொன்றுக்கு லட்சம்பேர் மென்மேலும் வேலையில்லாது பெருகி வருகின்றனர்.இத்தொகையையும் நாம் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது இன்று பத்துலட்சத்திற்கதிகமானமக்கள் தொழில் வாய்ப்புக்களின்றி-விஷம்போல் ஏறியவாழ்க்கைச் செலவுடன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் வாழ்கின்றார்கள்.

மேலும் ஆட்சியாளர்கள் இன்று கடைப்பிடித்து வரும் திட்டவட்டமில்லாத கொள்கைகளினால் தினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தொழிலிழந்து வேலையில்லாதோர் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றனர். கைத்தொழில் உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்களின் இறக்குமதிகளைச் செலவாணிக் கட்டுப் பாடுகளால் தடை செய்யப் பட்டிருப்பதால் மக்கள் தொழில்களின்றி வேதனை வாழ்வால் வெந்து கொண்டே இருக்கின்றனர். இந்நிலையிலும் அமைச்சர்கள் - தேசியப் பேரவை உறுப்பினர்களெல்லாம் இதே வெளிநாட்டுச் செலவாணிகளில் உலக நாடுகளில் பவனி வருவதையும் - அதனால் பல இலட்சம் ரூபாய்கள் விரையமாகிக் கொண்டிருப்பதையும் பார்த்து மக்கள் வேதனைப் படுகின்றார்கள். இந்நாட்டின் கஷ்டமான - செலவாணிப் பற்றாக்குறைகளை அனுசரித்து எமது வெளிநாட்டு அரசியல் விவகாரங்களை ஆங்காங்குள்ள எமது வெளிநாட்டுத் தூதுவர்களைக் கொண்டே எந்தப் பிரச்சனைகளுக்கும் முடிவு தேடமுடியுமல்லவா? அப்போது பெருந் தொகையான வெளிநாட்டுச் செலவாணியும் மிச்சம்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுதானு உங்கள் சோஸலிசம்?

ஆட்சியாளர்கள் அவ்வப்போது தேவைப்படும் உத்தியோகங்களுக்காக வழங்கும் நியமனங்கள் இன, மத, மொழி போன்ற வேறுபாடுகளின் அடிப்படைகளிலேயே நடைபெறுவதால் நாட்டிலே மென்மேலும் போராட்டங்களும்—பொருளாதார நெருக்கடிகளுமே தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகநாடுகளில் - நாடு எதுவாக இருந்தாலும் வேலை வாய்ப்புக்கள் வழங்கும் புனிதமான கொள்கையில் குறுகிய கோட்பாடுகளைக் கடைப்பிடித்து நின்றால் நிச்சயமாக அந்நாடு அழிவுப்பாதையை நோக்கி வேகமாக விரைகின்றது என்றுதான் அர்த்தம் - ஏனெனில் - மக்கள் விடுதலைக்கு அடுத்ததாக வேலை வாய்ப்புகளுக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள்.

1970-ம் ஆண்டு ''எக்ஸ்ரே தொழில் நுட்பபயிற்சியாளர்'' உத்தியோகத்திற்கு வழங்கப் பட்ட 25 நியமனங்களில் 24 சிங்களவர்களுள் ஒரே ஒரு தமிழர்தான் எடுக்கப்பட்டார். 1970ம்- ஆண்டு மீண்டும் இதே வேலைக்காகப் பயிற்சிக்காலச் சம்பளத்துடன் தெரிவு செய்யப்பட்ட 20 பேரில் 19 சிங்களவர்களுள் ஒரே ஒரு முஸ்லிம்தான் இடம் பெற்றார். அதைத் தொடர்ந்து இதே வேலைக்காகப் பயிற்சிக்காலச் சம்பளமில்லாது தெரிவு செய்யப்பட்ட 10 நியமனங்களில் 9 சிங்களவரும் ஒரே ஒரு தமிழரும்தான்.

1970 - 71-ம் ஆண்டுவரை வைத்திய ஆய்வுக்கூட தொழில் நுட்ப வியலாளர் பதவிக்கெனத் தேர்ந்தெடுக்கப் பட்ட 60 பேரும் சிங்களவர்கள்தான். அதே போன்று 'இயன் மருத்துவர்'' பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்ட 57 நியமனங்களில் ஆக நான்கே நான்கு நியமனங்கள் மட்டும் தான் தமிழருக்குக் கிடைத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

1970 - 72 வரை நியமிக்கப்பட்ட நரகப்பாதுகாவலர் உத்தியோகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 2801 பேரில் 2566 சிங்களவர்களும் - அதேநேரத்தில் 128 தமிழரும் 107 முஸ்லிம்களும்தான் நியமிக்கப்பட்டனர். 5447-தமிழர்களும் - 2553 முஸ்லிம்களும் சகல தராதரப் பத்திரங்களுடன் விண்ணப்பித்திருந்தும் கிடைத்தவைகள் இதுதான்.

மேலும் இதே ஆண்டுகளில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட 260 நியமனங்களில் 228 சிங்களவர்கள். 23 தமிழர்கள். 9 முஸ்லிம்கள், என்ற கொள்கையிலேயே நியமனம் பெற்றுள்ளனர். ஆனால் இந்த உத்தியேகத்திற்கு 1159 தமிழர்களும் 323 முஸ்லிம்களும் விண்ணப்பித்திருந்தனர். இதேகாலத்தில் உதவி பொலிஸ் சுப்பிரண்டன் பதவிக்கான 14 நியமனங்களில் 13 சிங்களவர்களும் 1 தமிழரும்தான். இதேபோன்றுதான் அனேகமாக அத்தனை இலாகாக்களிலும் ஒரவஞ்சனையாக நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நாடாண்டு - வரலாறு கண்ட -தமிழன் வழிவந்த தமிழன் இப்பதவிகளுக்கெல்லாம் தகுதி இழந்தவனு? இல்லையே? இப் புள்ளி விபரங்களின் பல்வேறு விளக்கங்களை அவ்வப்போது ''சுதந்திரன்'' மூலமாகப் படித்தறிந்துகொண்ட நாம் - அதை விடுதலை உணர்வுக்கு நீராக்கிக்கொண்டோமல்லவா!

எனவே அரசியலில் ஜீரணிக்க முடியாத இந்த இனவாதக் கொள்கைகளுக்குத்தான் ஆட்சியாளர்கள் விஞ்ஞான ரீதியிலே சோஸலிஸம் என்று பெயர் கொடுத்திருக்கின்றார்கள் போலும். அரசியலில் ஊனமடைந்து முடங்கிக் கிடக்கும் இச்ஸோசலிஸத்தை ஓட்டப் பந்தயத்திற்கு இரண்டு கால்களுமே இல்லாது போட்டிக்கு விட்டிருக்கின்றனர்.

ஒரு சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தியாக்கக்கூடிய பொருட்கள் உற்பத்தியாவதற்கும் - உற்பத்தியான அப்பொருட்கள் எல்லோருக்கும் ஒழுங்காகக் கிடைப்பதற்கும் மூலகாரணமாக இயங்கவேண்டிய கொள்கைகள் இனவாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் செயல்பட்டால் அங்கே சோஸலிஸம் இருக்காது. வெறும் கோஸங்கள்தானிருக்கும். சோஸலிஸம் என்பது அடிப்படையில் ஒரு பொருளாதாரத் திட்டம்தான். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பலநாடுகள் தம் அரசியல் கொள்கையாக அடிப்படைச் சட்டத்துடன் மனிதாபிமான உணர்வோடு இணைத்துச் செயல்படுகின்றன. ஆனல் - நாம் வாழ்ந்து வரும் இம்மண்ணில் சோஸலிஸம் என்ற போர்வையில் தினம் தினம் பயங்கரமான இனக்கொலைகள் சட்டத்தால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இன்று உலகில் பல நாடுகளிலும் இச்சோஸலிஸம் என்ற கொள்கையைப் பெரிதும் வலியுறுத்திக் கொண்டு செயல்படுகின்ற முறைகளில் இது ஒரு தத்துவமாகவே வளர்ந்து விட்டது. எனவே அறிஞர்கள் பலர் கூறுவது போன்று, சோஸலிஸம் என்பது எல்லோருக்கும் பொருந்தக் கூடிய ஒரு தொப்பி என்பதை ஓரளவு தமிழினம் ஏற்றுக் கொண்டாலும், எங்களுக்குக் காட்டப்படும் இத்தொப்பிக்குள் பல விச நாகங்கள் குடிகொண்டிருக்கின்றன. அத் தொப்பியால் ஒரு தேசிய இனத்தின் உரிமைகள் அழித்தொழிக்கப்படுகின்றன என்பதனல்தான் நாங்கள் பீதி கொண்டிருக்கின்றோம். ஆட்சியின் பெயரால் சோஸலிஸம் என்று கோஷம் போட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இச்சொல் தம் தவறுகளை எல்லாம் மூடிமறைத்துத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு கருவியாக அமைந்திருக்கின்றது. உலக சரித்திரத்தில் காலத்திற்கு காலம் அவ்வப்போது பல் வேறு அறிஞர்கள் தோன்றிச் சமுதாயத்தில் காணப்பட்ட - சீர் கேடுகள் - ஈன இரக்கமற்ற இனக்கொலைகள் - மக்களிடையே வளர்ந்துள்ள ஏற்றத்தாழ்வுகள் போன்றவைகளைக் களைந்தெறிந்து - சமுதாயம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் - இதன்படிதான் இயங்க வேண்டும் என்ற உயர்ந்த சித்தாந்தங்களை வகுத்துத் தந்து விட்டுச் சென்றார்கள், பல்வேறு சூழ் நிலைகளிலும் - பல்வேறு இலட்சியங்களைக் கற்பனையாக வடித்து விட்டுப்போயிருக்கின்றார்கள். பொதுவுடமைத் தந்தை - தோழர்களின் வணக்கத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய தெய்வம் "காரல் மார்க்ஸ்" முதன் முதலாக இச் சோஸலிஸத்தைச் சாஸ்திரரீதியான ஒரு தத்துவமாகவே வகுத்தார். அதனால்தான் மார்க்ஸைச் சோஸலிஸத்தின் பிதா என்று அடைமொழி கொடுத்து உலகம் அழைக்கின்றது.

## காரல் மார்க்ஸின் அறிவின் சக்தி

மார்க்ஸ் கண்ட இச் சோஸலிஸம் அதிக சக்தி கொண்டது என்பதனாலேயே இன்று உலகில் அது பல கோடான கோடி மக்களையும் - பல நாடுகளையும் தன்னகத்தே ஈர்த்துக் கொண்டிருக்கின்றது. சில நாடுகள் மார்க்ஸின் இச் சித்தாந்தத்தைத் தம் சுய தேவைகளுக்கும், வேண்டியவர்-வேண்டாதவர் என்ற குறுகிய எண்ணங்களுக்குமாகப் பயன் படுத்திக் கொண்டிருப்பதாலேயே அத்தத்துவம் மாசு தேடிக் கொண்டிருக்கின்றது. இத்தத்துவம் உலக முக்கியத்துவம் பெற்று புகழடைவதற்கு மார்க்ஸ் தன்னைச் சுற்றியுள்ளோர்களின் வாழ்க்கை முறைகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்ததே அடிப்படைக் காரணமாக அமைந்தது. அதற்கேற்ற அவகாசமும் - சூழ்நிலையும் - இடஅமைப்பும் - மனப் பக்குவமும் ஒரே நேரத்தில் மார்க்சுக்கு உதவியாக இருந்தன. லண்டன் சேரிப்பகுதியிலே குடியிருந்த மார்க்ஸ் தன் கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்தார் - நன்றாகப்பார்த்தார். அங்கே மக்களின் பஞ்சம் - பசி - பட்டினிகளைக் கண்டார். அதன் முடிவுதான் அவரின் இத்தத்துவம்.

அதே நேரத்தில் இங்கே தன்னைச் சுற்றியுள்ள ஒரு தேசிய இனம் - நம்மால் இயற்றப்படும் சட்டங்களாலும், சுயதேவைகளாலும் எந்த அளவுக்கு இடர்பட்டு வேதனைப் பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை அதே மார்க்ஸின் தோழர்கள் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள். அன்று மார்க்ஸ் தன்னைச்சுற்றி வாழ்ந்த மக்களின் ஏழ்மை - அடக்கு முறை போன்ற வேதனையான வாழ்க்கை அமைப்புக்களிருந்தே இத்தத்துவத்தை வடித்தெடுத்திருக்கும்போது அவரின் சீடர்கள் மட்டும் இங்கே - தம்மைச் சுற்றியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசிய இனத்தை அடக்கி ஆழ்வதற்கும் அதே சோஸலிச சித்தாந்தத்தைத்தான் மூலக்கருவாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

எடுத்தவைகளுக்கெல்லாம் கொள்கைவிளக்கங்கள் தேடி ஓடி அலையும் பொதுவுடமைத் தோழர்களுக்குத் தம் சித்தாந்தத்திலுள்ள இச் சின்னஞ்சிறிய குறிப்பையுமா தெரிந்துகொள்ள முடியாது போய்விட்டது? எனவேதான் இங்கு நடைபெற்றுக்கொண்டிருப்பது மார்க்ஸ் கண்ட சோஸலிஸ சித்தாந்தமா? அல்லது இனவாத சோஸலிஸமா- என்று எமது பொதுவுடைமைத் தோழர்களிடம் கேட்கின்றேன் எங்களின் கொள்கைகளும் - இலட்சியங்களும்தான் அரசோச்சுகின்றன. என்று வாய்கிழியக் கூச்சலிடும் தோழர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப்போகின்றார்கள்- அப்படி உங்களது கொள்கைகளுக்கு அமைச்சரவையில் செல்வாக்கில்லையென்றால் உங்களது கொள்கை அடிப்படையில் நாட்டு நிர்வாகம் இயங்கவில்லை என்றால், அங்கே அமைச்சர் பதவிகளுக்காகவா குந்திக்கொண்டிருக்கின்றீர்கள்?

மார்க்ஸ் கண்ட சமத்துவத்தில் குடும்பப் பாசம் திணிக்கப்பட்டதில்லை. கொள்கைப் பாசம்தான் இதிலே புகுத்தப் பட்டிருக்கின்றது. தன்னைச் சார்ந்தவர்களுக்கும் - குடும்பத்தவர்களுக்கு மட்டுமே அரசியலில் விளம்பரமும் புகழும் தேடிக் கொடுக்கவேண்டுமென்று தவறியும் கூட அவர் நினைத்ததில்லை. ஆனால் இங்கு பொதுவுடமைத் தோழர்கள் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் குடும்பத்தவர்களுக்குமே வாய்ப்புக் கொடுப்பதில் மார்க்ஸின் சிந்தாந்தத்தைச் சாக்கடையாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

தேசிய இனங்களின் கட்டுப்பாடுகளில்லாத வளர்ச்சிகளுக்கு அவர் மதிப்பளித்து முக்கியத்துவம் கொடுத்திருக்கும் அதே நேரத்தில் - அக்கொள்கைகளுக்கு உரிமை கொண்டாடும் எமது தோழர்கள் வஞ்சகம் - பொறாமை-பொச்சரிப்புப்போன்றவைகளை உமிழும், காலத்தால் பட்டொழிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்க்கொண்டிருக்கும் பத்தாம் பசலித்தனமான கொள்கைகளைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கின்றனர்கள் - மார்க்ஸ் கொடுத்த சோஸலிஸம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்ற கோஸம் அடக்கப்பட்ட இனங்களை இதயசுத்தியோடு வாரி அணைத்து ஆறுதல் கூறியிருக்கின்றது. தொழிலாளர்களை ஒன்று கூட்டித் தோழமைகொள்ளச் செய்திருக்கின்றது. பிளந்தவைகளைப் பிணையத் தூண்டியிருக்கின்றது. சுயநலமில்லாத கொள்கைகளுக்காகவே பீடுநடை போட்ட மார்க்ஸ் தன் சித்தாந்தம் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே முடங்கிக் கிடக்கவேண்டுமென்று நினைத்ததேயில்லை. அதை அவரால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

தன் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்களை விரும்பி அணைத்துக்கொண்டார். அங்கே ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களை இழுத்துப் பிடித்துக் கொள்ள - இங்குள்ள தோழர்களைப் போல இரும்பாலான இதயம் மட்டும்தான் தேவை என்று அவர் அடம்பிடிக்கவில்லை சிலதைச் சாதிக்கப் புரட்சியும் - பிடிவாதக்குணமும்தான் தேவை என்று தன் முரட்டுத்தனத்தையும் காட்டிக்கொண்ட மார்க்ஸ், ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழவே கூடாது- அவர்களுக்குள்ள உரிமைகளையும் விட்டுக் கொடுக்கவே கூடாது என்று தவறியும்கூட சொல்லவில்லையே!

தேசிய இனங்களின் மதிப்புக்குரிய மாண்புகளுக்கு உள்ளத்தின் ஆழத்தால் மதிப்புத் தந்த அவர், மக்கள் மாகளாகவே உரிமை பெற்று வாழவேண்டுமென்று கண்டிப்பக்கக் கூறி இருக்கின்றார் - தன் இலட்சியத்தில் மக்கள் நம்பிக்கை கொண்டு செயல்பட வேண்டுமென்று மக்களைத் தூண்டியிருக்கின்றார். வீம்பும் வீறாப்பும் பேசிக் கொள்கையை மாசு படுத்தாதீர்கள் என்று வற்புறுத்திய அவரிடம் அடக்கமும் - அமைதியும் குடி கொண்டிருந்தது. இலங்கைப் பொதுவுடமைத் தோழர்களின் கொள்கைக் குளறுபடிகளை அன்றே அவர் மானசீகமாக உணர்ந்து கொண்டாரோ - என்னவோ! அதனால்தான் எனது கொள்கையை மாசுபடுத்தாதீர்கள் என்று அவர் அன்றே கூறிச்சென்றிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குச் சொந்த எதிரிகள் இருந்ததில்லை. எதிர்க் கருத்துக்களை எடுத்துக் காட்டித் தன் தவறுகளை உணர்த்தியவர்களைத்தான் அவர் வாழ்க்கையிலே சந்தித்திருக்கின்றார். அவைகளையெல்லாம் தன் தெளிவுக்காக ஏற்றுக்கொள்ளவும் செய்திருக்கின்றார். பிரௌதான், பக்குனின் போன்ற தர்க்கவாதிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கத் திணறிய மார்க்ஸ் இவர்களின் விவாதங்களுக்குத் தலைவணங்க மறுக்கவுமில்லை,

உலகப்பெரும் கொள்கைவாதி என்ற இறுமாப்பு அவரிடம் இருக்கவில்லை. அதே போல் அவரை ஒரு சித்தாந்தத் தலைவன் என்று - அவரை நம்பிய மக்கள் புகழும் இடம் வரும்போது அவர் உயிருடன் இருக்கவில்லை.

மார்க்ஸின் அறிவுத் திறமைக்கு மதிப்பளிக்கும் நாங்கள், எப்போதுமே அக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களல்ல என்பதையே எம் பொதுவுடைமைத் தோழர்கள் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். மார்க்ஸின் திறமைகளுக்கு மதிப்பளித்த உலகத் தலைவர்களில் பலர் அவரின் சித்தாந்தத்தைக் கண்டித்து வந்திருப்பதையும் எமது தோழர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அதிலும் குறிப்பாக -எமது தேசியப் பிரச்சனைகளில் பொதுவுடைமையின் பெயரால் - மார்க்ஸின் பெயரால் தோழர்கள் கடைப்பிடித்து நிற்கும் கொள்கை - எங்களது இன உணர்ச்சிகளுக்கு மதிப்புத்தர மறுப்பதால் எக்காரணத்தைக் கொண்டும் இதில் தமிழினத்திற்கு பிடிப்பு ஏற்படவே முடியாது. மார்க்ஸின் சித்தாந்தத்தில் ஓரளவு தெளிவு தெரிந்தாலும்கூட அக்கொள்கைவழி நடப்போரின் குளறுபடிகளில், எங்களுக்கு ஏற்பட்ட இனத்தாக்கத்தை எண்ணி தினம் தினம் வேதனைப்படுகின்றோம்.

தேன் கிடைக்கும் அதே மலரிலிருந்துதான் உயிரைக் குடிக்கும் விஷமும் கிடைக்கின்றது. முத்துக்களைத் தரும் ஆழ் கடல்தான் பயங்கரமான உயிரினங்களையும் கொண்டிருக்கின்றது என்பதைப் போலவே - மார்க்ஸின் சித்தாந்தங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

ளால் அரசியலில் மட்டும் சில நாடுகள் விழிப்படைந்து உல கப் பெரும் வல்லரசு என்ற நிலையில் வளர்ந்திருக்கின்றன. அதே போன்று வேறுசில நாடுகளும் இச் சித்தாந்தத்தால் தினமும் களம்பல கண்டு அழிந்துகொண்டிருக்கின்றன. சிறு பான்மைத் தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சனைகளில் தோழர் லெனின் கடைப்பிடித்த, காலத்தால் சிறந்த கொள் கைகளால் ரஷ்யா இன்று உலகப்பெரும் வல்லரசாகவே மாறி இருக்கின்றது, எனவே பொதுவுடமைத் தத்துவத் திற்குத் தலைமை தாங்கும் ரஷ்யாவை நிமிடத்திற்கு நிமி டம் புகழ்ந்துகொண்டிருக்கும் தோழர்கள் அதன் வளர்ச் சிக்கான அடிப்படை அ ர சி ய ல் காரணங்களைத் தெரிந்து கொண்டார்களா?

எது எப்படியிருந்தாலும் ஒரு பொது நோக்கோடு நாம் பார்க்கும்போது - உலக மக்களின் பல்வேறு பிரச்சனைகளுக் கும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு சித்தாந்தத்தை வகுத்தெடுக்கும்போது - காலத்தின் சுழற்சிகளால் அதிலே சிலபல குறைகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றுதான் என்றாலும் அதைக் காலத்திற்கும் - நாட்டிற்கும் தேசியப் பிரச்சனைகளுக்குமேற்றவாறு வழிவகைகள் காண்பதுதா·ே மனித தர்மமாகும் - புத்திசாலித்தனமானதாகும். அதனால் தான் ரஷ்யத் தலைவர்களில் ஒருவரான ''நிகிட்டா குரு சேவ்'' பிரதமராக இருந்தபோது, ஆங்காங்குள்ள பொது வுடமைத் தோழர்கள் தேசியப் பிரச்சனைகளுக்கேற்ப வளைந்து கொடுக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆழமாக வற்புறுத்தியிருக்கின்றார்.

## பிளேட்டோவின் சித்தாந்தமும்
## காரல்மாக்ஸின் கம்யூனிஸமும்

பொதுவுடமைவாதிகள் உலகரீதியில் தங்களைக் கட் சிக்கு ஒப்படைத்துக் கொண்டவர்கள். உலகிலுள்ள பெரும் பாலான பொதுவுடமைவாதிகளின் தலைமைப்பீட ஆணைப் படியேதான் எந்த நாட்டிலுள்ள பொதுவுடமைத் தோழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கும் கொள்கைக் குரலை எடுத்துக்காட்ட வேண்டும். தத் தமது தாய்நாட்டின் - தாய் மொழியின் - தன்னினத்தின் உரிமைகளை - உணர்ச்சிகளைக் களைந்தெறிந்துவிட்டுத்தான் உலகப் பொதுவுடமை இயக்கத்தில் தன்னையும் இணைத்துக் கொள்ளவேண்டும் - தவறிக்கூட தன்னின உணர்ச்சிகளுக்குத் தம் உள்ளங்களிலே இடம் கொடுக்க எண்ணுகின்றவர்கள் பொதுவுடமை இயக்கத்தில் தொடர்ந்து இருக்க முடியாது- இயக்கமும் அதற்கு இடம் தராது என்பதை அதன் நீண்ட கால வரலாற்றிலே இருந்து நாம் பார்க்கின்றோம். அத ஞல்தான் காரல்மார்க்ஸின் காலத்திலேயே வாழ்ந்த பக்கு னின் என்ற பேரறிஞன் கட்டுப்பாடுகளற்ற பொதுவுடமை யுடன் பூரணசுதந்திரமும் வேண்டும் என்று அன்றே தர்க்க வாதத்துடன் வற்புறுத்தியிருக்கின்ருன்.

கொள்கைகளிலே ஏற்பட்ட குழப்படிகளால் - தலைமைப் பீடத்திலே வெடித்த தகராறுகளால் மார்க்கஸீயக் கருத் துக்களுக்கு நெருக்கடியான சோதனைக்காலமிது. கொள்கைக் கோட்டையிலே ரஷ்ய - சீன ஆதிக்க வெடிப்பு – இலங்கை யிலே ரஷ்யச் சார்பு - சீனப் பிரிவு-அதற்குள்ளும் பல கோஷ் டிக் கூச்சல்கள் - குழப்பங்கள் – இதுதான் இன்று ஏழைக ளின் தோழன் என்பவர்களின் ஆதிக்கப் போட்டியும் - அப் பாவி மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும் கொள்கையுமா கும். அன்று கனவிலே இருந்த இந்த கம்யூனிஸ லட்சி யத்தை நனவாக்கிக் காட்டவேண்டுமென்பதற்காகக் காரல் மார்க்ஸின் தத்துவங்கள் உருவாகின. அத் தத்துவங்கள் கருவிலேயே சில பல குறைகளோடு பிறந்து விட்டதால் காலத்திற்கும் - பல்வேறு இன மக்களுக்குமாக ஏற்றவாறு அமையத் தவறியிருக்கின்றது. இதில் மார்க்ஸ் விட்டகுறை களைவிட பொதுவுடமையின் பெயரால் தோழர்கள் செய் யும் தவறுகள்தான் மிகப்பாரதூரமானவைகளாகும்.

மனித இனத்தை அலைக்கழித்துக்கொண்டிருந்த எத் தனையோ வகையான சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் - இது வரை கிட்டாத பல பேரின்பங்களைக் கொண்டு வந்து பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடவும் - காலத்தின் எல்லைக் கற்களாகத் தமது புகழை நிலைநிறுத்திவிட்டுப் போன அறிஞர்கள் கண்விழித்துச் சிந்தித்துக் கண்டுபிடித்த முடிவுகளைத் தத்துவங்களாக்கி உலகத்தின் காலடியில் சமர்ப்பித்து விட்டுச் சென்றிருக்கின்றார்கள். அத்தகைய பேரறிஞர்களில் கிரேக்கம் தந்த பெருஞ்செல்வம் பிளேட்டோவும் ஒருவர். பிளோட்டோ காலத்தில் கிரேக்கத்திலிருந்த ஜனநாயக அரசியல் மக்களுக்குச் சம உரிமைகளைத் தந்ததே தவிர, சமத்துவத்தை அதனால் உருவாக்கிக் கொடுக்கமுடியவில்லை. எனவே வாழ்வின் அன்றாடத் தேவைகளைச் சம அளவில் பெற்று - சமத்துவமாகச் சுகபோகங்களை எல்லாத் தரத்திலுள்ள மக்களும் அனுபவிக்கக்கூடிய அரசியல் திட்டமொன்றை பிளேட்டோ வகுத்தெடுத்தார். நாட்டிலுள்ள பொருட்கள் - பொருளுற்பத்திச் சாதனங்களெல்லாம் பொதுவுடமையாக்கப்படவேண்டும். மக்கள் தத்தமது சக்திக்கேற்பத் தம் உழைப்பை நாட்டுக்குத் தந்துதவ வேண்டும் - எல்லாத் தரத்திலுள்ள மக்களும் சமமான வாய்ப்புக்களையும் - உரிமைகளையும் பெற்றுக் கொள்ள அரசாங்கமே பாகுபாடுகளின்றிச் செயல்படவேண்டும் - இப்படிப் பல திட்டங்களைத் தந்த பிளேட்டோ - இக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் மக்கள் தம்முடைய இன உணர்ச்சிகளையோ- மொழிப்பற்றையோ தீயிட்டுப் பொசுக்கி விட்டுச் சர்வதேச ரீதியில்தான் இயங்கவேண்டுமென்று அவர் சொல்லவில்லை.

அரசியல் மாமேதை அரிஸ்டாட்டலின் குருநாதரான பிளேட்டோ தத்துவ ஞானியாகவே வாழ்வைத் தொடங்கினார். ஆனால் காலத்தின் வேகப் பாய்ச்சலால் எப்படியோ அரசியலுக்கு இழுக்கப்பட்டுவிட்டார், மனித இனம் ஒன்றிப் பிணைந்த சமூக வாழ்வில் ஆதிக்கத்தாலும் - வளர்ச்சியாலும் ஒருவரை ஒருவர் அழித்து வாழ நினைப்பதைப் பகிரங்கமாகவே கண்டித்தார். நாட்டிலுள்ள அதிகாரங்களைப் பெறுவதற்காகச் சிலர் அவ்வப்போது கடைப்பிடித்துவந்த கொடூர நிகழ்ச்சிகளை நரமாமிசம் தின்னும் மிருகங்களின் செயல் என்று நேரடியாகவே சாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கையில் அதிகாரங்களைத் தம்வசப் படுத்திக் கொள்வதற்காகச் சிங்கள அரசியல் கட்சிகளெல்லாம் தமிழினத்தைச் சொக்கட்டான் காய்களாக நினைத்து நகர்த்திக் கொண்டிருப்பதைச் சரி எனக் கொண்டு - தோழர்கள் அதனுடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருப்பது எந்தக் கொள்கையில்?

மனிதனுடைய உழைப்பிலும் - திறமையிலும் இறுக்கமான நம்பிக்கைகொண்ட பிளேட்டோ, அறியாமை - அடிமைத்தனம் போன்றவைகள் எந்த உருவத்திலிருந்தாலும் அவைகளை அடியோடு வெறுத்தார். அதே போன்று ஒரு அரசு திறம்பட இயங்கப் பல நிபந்தனையும் விதித்தார். பண ஆசை, பதவிவெறி, பந்தபாசம், இன மத அடக்குமுறைகள், தன்னின ஆதிக்கம் போன்றவைகளை ஆட்சியாளர்கள் தம் நெஞ்சங்களிலே இருந்து நிர்மூலமாக்கிக் கொள்ளவேண்டுமென்றார். இப்படி எல்லாம் அன்று ஒரு இலட்சியத்தைக் கருவாகத் தந்த அவர் எல்லோரையும் இதன்படியே நடக்கத் தூண்டினார். இத் தத்துவங்கள்தான் காலத்தால் பாதியும் = காரல்மார்க்ஸால் பாதியுமாக உருவகம் பெற்றுப் பொதுவுடைமை என்ற பெயரில் இன்று நம்மைச் சந்தித்திருக்கின்றது. எனவே ஆழ்ந்து சிந்தித்தால் கம்யூனிசம் என்பது பிளேட்டோயிசத்தின் திரிபே என்பதை எவரும் மறுக்கமுடியாது. மனித இன மேம்பாட்டுக்கான சில திட்டங்களை அன்றைய அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப அவர் கண்டார். அவைகளையே தன்வசப்படுத்திக்கொண்ட மார்க்ஸ் சில திட்டங்களைக்கூட இணைத்துப் புதிய சிந்தாந்த வெளியீடாக்கினார்.

தத்துவங்களால் உலகில் மாற்றங்கள் எதுவும் நிகழ்வதில்லை. உலகில் நிகழும் மாற்றங்களால்தான் தத்துவங்கள் உருவாகின்றன. எனவே கம்யூனிசம் ஒரு தத்துவம் என்பதற்காகவல்ல, அரசியல் நெருக்கடிகளால் இயந்திர வளர்ச்சிகளின் போட்டிகளால் - பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் புழுக்கம் போன்றவைகளால்தான் கம்யூனிசம் வளர்ச்சி கண்டிருக்கின்றதே அல்லாமல் - தன்னின உணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

களால் உந்தப்பட்ட மக்கள் மத்தியில் கம்யூனிசம் நினைவாகக்கூட நிலைகொள்ள முடியவில்லை. கம்யூனிசம் வரும்போது நடக்கும் புரட்சி மக்கள் விரும்பும் ஜனநாயகப் புரட்சியாக இருக்க முடியாது. குருதி கொட்டவேண்டிய வன்முறைப் புரட்சியாகத்தான் அது அமையும். உலகநாடுகளிலே இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் பாடமும் அதுதான்.

பசியும் - பட்டினியும் - வர்க்க வேறுபாடுகளும் வளர்ந் தெழுவதற்கு ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்கும் - புறக் கணிக்கவேண்டிய கொள்கைகளே காரணங்களாக அமைந்து விடுகின்றது. இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தோழர்கள் - மக்கள் மத்தியிலே ஜீரணிக்கமுடியாத பொதுவுடமைக் கொள்கையைக் காட்டி ''வர்க்கம்'' பேசத் துணிந்துவிடுகின்றனர். பொதுவுடமை மலர்ந்தால் மக்கள் வாழ்வும் மலர்ந்துவிடும் என்று எங்கோ இருக்கின்ற சோவியத் ஒன்றியத்தைக் காட்டி - நீர்-நில வேற்றுமைகளை மறந்து அப்பாவி மக்கள் மத்தியில் பவனி வரக் கனவு காண் கின்றனர் - என்றாலும் - எல்லோருமே பொருளாதார ரீதியில் சமமான வாழ்வைப் பெறக் கிடைத்துள்ள ஒரே வழி கம்யூனிசம்தான் என்று எண்ணுகின்ற முற்போக்காளர்களும் - ஒரு வகையில் கம்யூனிச ஆட்சியை எண்ணி அஞ்சத்தான் செய்கின்றனர். ரஷ்யா, சீனு போன்ற நாடுகளில் பொதுவுடமை ஆட்சியில் வாழும் மக்கள் பூரண சுதந்திரமின்மையால் - வெறும் உணவுக்காகமட்டும் உழைக்கும் மனிதப் பிராணிகளாக வாழ்கின்றார்கள் என்பதை நாம் அறியும் போது வாய் பொத்திக் கைகட்டி மரக்கட்டையாக வாழ்வதை விட, சுதந்திரமாகப் பட்டினி கிடந்து மடிவது மேல் என்ற முடிவுக்குத்தான் நாமெல்லோருமே வருகின்றோம்.

ஜனநாயகச் சித்தாந்தத்தைப் பொறுத்தவரையில்.மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் இருந்து வருவது தவிர்க்க முடியாத ஒன்றுதான். நல்ல வசதிகளோடு வாழ்க்கையை ஓட்டிச் செல்பவர்கள்கூட தம்மைவிட வளமாக வாழ்வோரைப் பார்த்து - அவர்களைப்போல் வாழ முடியவில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஏங்குவது சிலருக்குத் தவிர்க்க முடியாத ஒன்ருகவே இருக்கின்றது - ஏனெனில் மனிதன் சமூகமாக இணைந்து வாழ ஆரம்பித்ததிலிருந்து மற்றவர்களை விட உயர்ந்தவனுக வாழவேண்டுமென்று எண்ணிப் பழக்கப்பட்டவன். அப்படி உயர்ந்து வாழமுடியாத நிலையில் - துன்பப்பட்டவனது மனதில் ஏற்பட்ட விரக்தியும் - வெறியும்தான் பொதுவுடமை என்ற சொல்லைப் பரவலாக மக்கள் மத்தியில் உச்சரிக்கச் செய்கின்றது.

பொதுவுடமை நாடுகளில் ஒருவன் தன் சுயதேவைகளைப் பற்றி விரிவாகச் சிந்திக்க முடியாததால் அவன் எதிலுமே ஆசைப்படுவதில்லை-அதனுல் அங்கே தனிப்பட்டோர்களின் தேவைகளும் - பிரச்சனைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. இதில் ஜனநாயக நாடுகளைப் பொறுத்தவரையில் தனிப்பட்டவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிச்சயமாக அரசு செவிசாய்க்கவேண்டியிருக்கின்றது. அதனுல் இங்கு புதிய புதிய தேவைகளும் - பிரச்சனைகளும் தினமும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆதலால் ஜனநாயகம் நாட்டுக்குத் தேவையில்லை என்று இதனுல் கூறிவிட முடியுமா?

இத்தாலியின் மாஜி சர்வாதிகாரி முசோலினி புயல்வேகத்தில் தன் அரசியல் வாழ்வை ஆரம்பிக்கும்போது, ஒருபொதுவுடமைவாதியாகத்தான் ஆரம்பித்தான். இத்தாலி முழுவதுமே பொதுவுடமை மயமாகி விடவேண்டுமென்று அரும்பாடுபட்டான். அதற்காகத் தன் உயிரையும் பணயம் வைத்தான். ஆனுல் - அவன் வெறும் பொதுவுடமை வாதியாக மட்டுமல்ல - தீப்பிழம் பெரியும் தேசபக்தி - இனப்பக்தி கொண்டவனுகவும் இருந்தான். இத்தாலியின் பழங்காலப் பெருமைகளை அவன் எண்ணிப் பார்த்தபிறகு - அடிபட்ட சிங்கம்போல் வீழ்ந்து கிடக்கும் தன் தந்தையர் நாட்டைத் தலைநிமிரச் செய்வதே வாழ்வின் முழு இலட்சியம் என்று மனதுக்குள் பெரும் புயலை எழுப்பிக்கொண்டு அசுரவேகத்தில் தன் அரசியலை ஓட்டிச் சென்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தனது தேசிய உணர்ச்சிகளுக்குப் பொதுவுடமை இயக்கம் தடையாக இருப்பதை எண்ணிய முசோலினி, பொதுவுடமைத் தத்துவத்திற்கு முழுக்குப் போட்டான். அவனது அரும்பாட்டால் இத்தாலியில் எழுந்து வளர்ந்துகொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி இடறி விழுந்தது - ஏன்-ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடம் இத்தாலியிலேயே இருந்ததால் இத்தாலியும்-முசோலினியும் ரஷ்ய, சீனு போன்று கடைசிவரை கம்யூனிஸ்ட்களாகவே வாழ்ந்திருக்கமுடியும். ஆனுல் முசோலினியின் தன்னின உணர்ச்சி அவரைச் சரியான பாதையிலே திருப்பிவிட்டது. இந்நிலையில் இத்தாலிய அரசியல் நிலை நமக்கு இப்போது தேவையில்லை.

எனவே எமது தமிழ் பொதுவுடமைத் தோழர்களிடம் கேட்கின்றேன் - தன்னின உணர்ச்சிகளை விட சர்வதேச அரசியல் கொள்கையால் இதுவரை நீங்கள் எந்த இன்பத்தை-பெருமைகளை அடைந்தீர்கள்?

இத்தாலியின் பழம் பெருமைகளைக் கட்டிக் காக்கச் செயல்வீரன் முசோலினியே இக் கொள்கைக்கு முழுக்குப் போட்டிருக்கும்போது வணிகத்தில் - தர்மத்தில் -வீரத்தில்-நீதியில் - ஆட்சியில் - பண்பில் - விஞ்ஞானத்தில் - கலையில் - மொழியில் இப்படி அனைத்துத்துறைகளிலும் உயர்ந்தோங்கிய எமது பழம் பெருமைகளைக் காக்க - தலைவிரிகோலத்தில் துயருறும் தமிழன்னையை மீட்க எங்கே உங்களது தன்னின உணர்ச்சி? அல்லது இத்தாலிய இனத்தைவிடத் தமிழினம் தாழ்ந்ததா என்ன?

கம்யூனிஸ்ட் கட்சி அகில உலக இயக்கமாதலால் - அமெரிக்கக் கம்யூனிஸ்ட்டுக்கள்கூட ரஷ்ய தலைமைப் பீடத்தை மதித்தொழுகக் கடமைப்பட்டவர்கள். இன்று உலகில் நடக்கும் எந்தப் போட்டிகளை எடுத்துக்கொண்டாலும் அமெரிக்காவின் வெற்றியா? ரஷ்யாவின் வெற்றியா? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியே உலகெங்கும் நிலவுகின்றது. இந்நிலையில் அமெரிக்க மக்கள் அனைவரும் - பொதுவுடமைக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்களாக இருந்தாலும்கூட தம் தாய் நாடான அமெரிக்காவே எதிலும் வெற்றி பெறவேண்டும் என்றுதான் இயற்கையாகவே விரும்புகின்றார்கள். எனவே கம்யூனிஸ்ட்கட்சியை இப்படி அகில உலக ரீதியில் அமைத்து விட்ட காரணத்தால் கம்யூனிசக் கொள்கைக்கும்-தன்னின உணர்ச்சிகளுக்கும் தீராத பிணக்குகள் தொடர்ந்தே வளர்ந்து வருகின்றன.

இந்திய உபகண்ட வடக்கெல்லையில் சென்ற 1962-ம் ஆண்டு சீனக் கம்யூனிஸ்ட்டுக்கள் ஆக்கிரமிப்பு நடத்திய போது-இந்திய உபகண்ட அரசியல் கட்சிகள்-அகில உலக நாடுகளெல்லாம் சீனாவின் கெடுபிடிக் கொள்கைகளைக் கண்டித்த அதே நேரத்தில்-உபகண்ட கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் - தாய் நாட்டுணர்ச்சிகளை மறந்து - தாய்மைப் பாசத்தைக் களைந்து - சீனாவுக்கு எதிராக எதையுமே கூறமுடியாது வாய் பொத்திக் கைகட்டிப் பாதம் வணங்கி நின்றதை நாம் பார்த்தோம். அதன் விளைவு - உபகண்ட கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தீராதபிளவை நோய் கண்டிருக்கின்றது.

அகில உலக ரீதியில் கம்யூனிஸ்ட் கட்சி இயங்கும்வரை ஆங்காங்குள்ள கம்யூனிஸ்ட்டுக்கள் தேசிய உணர்ச்சிக்கோ-தன்னினப் பற்றுக்கோ தர்க்க ரீதியான எந்த மதிப்புக்களுமே தரமுடியாது. தொழிலாளி - முதலாளி என்ற செயற்கையான வர்க்க முழக்கங்களைக் கோஷமாக்கிக் கொண்டிருப்பவர்களால் மக்களின் தேவைகளுக்கு மதிப்புத்தரவே முடியாது. அதனால்தான் - ஒருகாலத்தில் எமது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வளர்ச்சிகொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி இன்று இளைத்து மெலிந்து அடியற்றுப் போகும் நிலைக்கு வந்திருக்கின்றது. இயக்கம் எதுவாக இருந்தாலும் மக்களின் உணர்ச்சிகளையும் - தேவைகளையும் - அபிலாசைகளையும் அரசியல் மதியூகத்துடன் சரியாக எடைபோட முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத இயக்கங்கள் - தலைவர்கள் இருந்த இடமே தெரியாமல் அழிந்தொழிந்த வரலாறுகளை அனுதாபத்துடன் நாம் படித்திருக்கின்றோம்.

## தமிழரசும் சோஸலிஸமும்

எமது தமிழரசுக்கட்சி தமிழினத்தின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்துத் தியாகத்துடன் செயல்பட்டு எமது மொழி- இனம் - பிரதேசம் என்ற சிந்தனையை மக்களின் நெஞ்சங்களிலே அகல் விளக்காக ஏற்றி வைத்த காரணங்களால்தான் தமிழரசு தமிழினத்தின் தனிப்பெரும் வல்லரசு என்ற நிலையில் வளர்ந்தெழுந்துள்ளது. இவ்விடுதலை இயக்கம் மக்களின் உணர்ச்சிகளைப் பாதுகாக்க வாரிவழங்கிய இரத்ததானத்தால் தமிழினத்தின் இரத்த நாளங்களெல்லாம் உணர்ச்சிப் பெருக்கோடு இயங்க ஆரம்பித்துள்ளன.

மனித இனம் முழு நிறைவான வாழ்க்கை வாழவேண்டுமானுல் மக்களிடையே சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் போன்றவைகள் நிச்சயமான தேவைகளாகுமென்பதை ''ரூஸோ'' போன்ற அறிஞர்கள் வற்புறுத்திச் சென்றிருக்கின்ருர்கள். ஜனநாயக ஆட்சியில் பூரண சுதந்திரமும் -சமத்துவமும் உறுதிப்படுத்தப்படுகின்ற அதே நேரத்தில்- கம்யூனிஸ ஆட்சியில் சமத்துவத்தைப் போதனையில் காட்டி மக்களின் வாழ்வு சூறையாடப் படுகின்றது. எனவே சம உரிமைகளையும் - சமத்துவத்தையும் இணைத்துச் செயல்படும் தமிழரசால் தமிழினம் நிரந்தரமான விமோசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதற்குத் தமிழரசின் நீண்ட கால வரலாறே எடுத்துக்காட்டாகும்.

இந்நாட்டின் பொருளாதாரம் ஒருசிலரின் ஆதிக்கத்துக்குள் தேங்கிக் கிடப்பதைத் தமிழரசு எப்போதும் எதிர்த்தே வந்திருக்கின்றது. சோஷலிஸ அரசியல் அடிப்படையின் கீழ் மக்களின் வாழ்க்கையை மலரச்செய்ய முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் தமிழரசுக்கு எப்போதுமே தனிநம்பிக்கைக ளுண்டு. எனவே தன்னின உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் உயர்ந்த அரசியல் சித்தாந்தம் என்றைக்குமே அதற்கு கனவுலகச் சொல்லாக இருந்ததில்லை.

கடந்த 1948 ஆம் ஆண்டு கட்சி ஆரம்பிக்கப்பட்டதி லிருந்து தமிழினத்தின் விடுதலை முழக்கத்தோடு - காலத் திற்குக் காலம் வந்த ஆட்சியாளர்கள் கொண்டுவந்த முற் போக்கான சோஷலிசத் திட்டங்களுக்குத் தமிழரசு தனது அரசியல் வேற்றுமைகளை மறந்து அவ்வப்போது பூரண மான ஒத்துழைப்புக்களை வாரிவழங்கியிருக்கின்றது.

பஸ் கம்பனிகள் தேசியமயமாக்கப்பட்டபோது - துறை முகங்கள் மக்கள் சொத்தாக்கப்பட்டபோது - வெளிநாட்டு எண்ணைக் கம்பனிகள் பொதுச் சொத்தாக்கப்பட்டபோது - வங்கிகள் 'நாட்டின் தேசியச் செல்வமாக்கப்பட்டபோது, காணிச் சட்டத்தின்கீழ் காணிகளுக்கு உச்சவரம்பு கொண்டு வந்தபோது இப்படி எத்தனை எத்தனையோ திட்டங்களையெல் லாம் ஆட்சியாளர்கள் கொண்டுவந்தபோது தமிழரசு நேரடி யாகவே அவைகளுக்கு முன் நின்று ஆதரவு கொடுத்து வந் ததை யாராலும் மறுக்கவோ - மறைக்கவோ முடியாது. இதில் தமிழரசு சுயநலத்திற்காகவோ - சொந்தலாபத்திற் காகவோ செயல்படவில்லை என்பதை அரசியல் தெரிந்தவர் களால் புரிந்துகொள்ள முடியும். ஆனுல் பொதுவுடமைத் தோழர்களின் காமாலைக் கண்களுக்கு இது தெரியவில்லை என்ருல் - அதற்காக அவர்கள்மீது அனுதாபப்படுவதைத் தவிர வேறு வழியேயில்லை.

ஏன், தமிழரசு எந்தப் பிரச்சனைகளிலாவது சுயநலத் திற்காகச் செயல்பட்டிருக்கின்றது என்று தோழர்கள் நிரூ பிப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஆங்கிலேயர்கள் அமைத்துத் தந்துவிட்டுப் போன அரசியல் அமைப்பில் ஒரு எழுத்தையேனும் திருத்தாமல் இந்நாட்டில் ஒரு பூரணமான சோஷலிஸ அரசியல் கொள்கையை வெற்றிகரமாக வழிநடத்த முடியும். கடந்த 1972 மே திங்கள் 22ம் நாள் பிரகடனப்படுத்திய புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு முன்பு-அன்றைய அரசியல் சட்டத்தைக்கொண்டுதான் பஸ்கள், துறைமுகங்கள், எண்ணைக் கம்பனிகள், தனியார் பாடசாலைகள், கட்டிடங்கள் போன்றவைகளெல்லாம் தேசியமயமாக்கப்பட்டன. அதற்கு அப்போதைய அரசியல் சட்டம் தடையாக இருக்கவில்லை. அந்த அரசமைப்பால் நல்ல வாய்ப்புக்களையே பெற்றுக்கொண்டிருந்தோம்.

அப்படியிருக்க - நாட்டிலே அவசரமும் அவசியமுமாகத் தீர்த்து வைக்க வேண்டிய எத்தனையோ பிரச்சனைகளெல்லாம் தேங்கிக் கிடந்து - அன்றாட மக்களைக் கொடூரமாக வாட்டி வதைக்கும்போது-அவைகளைப்பற்றியெல்லாம் கிஞ்சித்தேனும் கவலைப்படாது - புதிய அரசமைப்புக்கு மட்டும் என்ன அவசியம் ஏற்பட்டது?

இந்திய உபகண்டம் போன்ற நாடுகளில் அரசியல் சட்டம் எப்போதுமே சோஷலிஸக் கொள்கைகளுக்கு எதிராகத்தானிருக்கின்றது. அதனால்தான் மன்னர்களின் மான்ய நிறுத்தம் - வங்கிகள் தேசியமயத் திட்டம் போன்றவைகள் நீதிமன்றமூலம் தோல்விகண்டிருக்கின்றன. எனவே எந்தக் காரணங்களுமில்லாமல் எமது முன்னைய அரசமைப்பைச் சோஷலிஸத்தின் பெயரால் திருத்தி அமைக்கத் துடித்த முக்கூட்டு ஆட்சியாளர்கள் எது எப்படியிருந்தாலும் ஒன்றை மட்டும் மறுக்கவே முடியாது.

ஆங்கிலேயர் தந்த அரசமைப்புச் சட்டமூலம் இந்நாட்டிலே வாழக்கூடிய சிறுபான்மைத் தேசிய இனங்களுக்குரிய பாதுகாப்பு (29 வது விதி)ச் சட்டத்தை முற்றாக நீக்கி விட்டு - புதிய அரசமைப்புச் சட்டத்தால் சிறுபான்மைத் தேசிய இனங்களைப் பாதுகாப்பற்ற அரசியல் அனாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில்தான் கொண்டு வரப்பட்டது என்பதை ஆட்சியாளர்களால் மறைக்கவே முடியாது.

இத்திட்டத்திற்குப் பூரணமான ஆதரவளித்த சிங்கள பொதுவுடமைத் தோழர்கள் தமிழ்ப் பொதுவுடமைத் தோழர்களின் இன ரீதியான நலனைப்பற்றிக் கவலைப்படாது. -ஒரவஞ்சனையும் - ஒழிக தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது - தமிழ் தோழர்கள் மட்டும் தன்னின உணர்வை மறந்து - நிரந்தரமாகக் காட்டிக் கொடுத்தே வாழ நினைப்பது அவர்களுக்கே வெட்கமாக இல்லையா?

## லெனின் கண்ட

### சோவியத் அரசமைப்பு

ஒரு நாட்டின் அடிப்படை அரசியல் சட்டத்தை இயற்றும் போது, கண்டிப்பாக முப்பெரும் விதிகளைக் கடைப்பிடிப்பதில் ஆட்சியாளர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று உலகப் பெரும் அரசியல் விற்பன்னர்களெல்லாம் வற்புறுத்தி இருக்கின்றார்கள்,

1. சிறுபான்மை- பெரும்பான்மை என்ற தேசிய வேறுபாடுகளின்றி மக்கள் சுயமாகப் பயமின்றி - தடைகளின்றித் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பரவலான உரிமை.

2. மக்களின் எண்ணங்களையும் - தேவைகளையும் ஒரு அரசு தானாக உணர்ந்து - விருப்பு வெறுப்புக்களைக் களைந்து மனித தர்மத்தோடும் - அனுதாபத்தோடும் செயல்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒரு நாட்டின் அரசியல் அடிப்படைச் சட்டத்தை இயற்றுவதற்கு எந்த அரசியல் கட்சிகளையும் சாராதவர்களாக - அந்நாட்டின் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களிலிருந்தும் நடுநிலையானவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பதே அம்மூன்றுமாகும்.

இதன் அடிப்படைக் காரணங்களை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, இம்முப்பெரும் தத்துவங்களுக்கும் எதிர்மாறாகவே ஆட்சியாளர்கள் புதிய அரசமைப்பை உருவாக்கிச் செயல்படுத்தி இருக்கின்றார்கள் - ஐயகோ கொடுமை! கொடுமை!!

ரஷ்யாவில் ''சார்'' மன்னன் ஆட்சி ஒழிக்கப்பட்டு - அங்கு தேவையான ஒரு அரசமைப்புச் சட்டத்தை இயற்றும்போது சுமார் 24,000 பொதுக்கூட்டங்கள் - கருத்தரங்குகள் - விவாத மேடைகள் ஆகிய பல நடத்தி மக்களின் கருத்துக்களைப் பல ஆண்டுகளாக அறிந்துணர்ந்துதான் அரசியல் சட்டத்தை இயற்றினார்கள். அதனால்தான் அங்கு அரசியல் கெடுபிடிகளெல்லாம் ஆரம்பத்திலேயே தவிர்க்கப்பட்டுச் சிறுபான்மை பெரும்பான்மை என்ற போட்டி பூசல்களும் ஒழிக்கப்பட்டுள்ளன. தோழர் லெனின் கண்ட ரஷ்யா இதுதானே!

1917ம் ஆண்டு புரட்சியில் பூரணமான வெற்றிகண்டபின் - தோழர்களின் பூஜைக்குரிய தெய்வம் தோழர் லெனின் முதன்முதலாக வெளியிட்ட "தேசியப் பிரச்சனை" என்ற அறிக்கையில் ''சார் மன்னன் ஆட்சியில் அடக்கப்பட்ட நாடுகளும் - தேசிய இனங்களும் சுயமாகப் பிரிந்து தனிநாடு காண விரும்புகின்றதா?'' அல்லது தொடர்ந்து ரஷ்யாவுடன் இணைந்து வாழப்போகின்றதா? என்று கேட்டிருந்தார். ஆனால் - அமுக்கப்பட்ட நாடுகளும் இனங்களும் தோழர் லெனினுக்குப் பயந்து தம் கருத்துக்களை வெளியிடத் தயங்கி நின்றன. இதைச் சாடையிலே புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட லெனின் - மீண்டும் அதே அறிக்கையை வற்புறுத்தி, விரும்பினுல் எந்த இனமும் பிரிந்து போவதற்கு என்னிடமிருந்து எந்தத்தடையும் வராது - ஓர் இனம் அடக்குமுறைகளின்றித் தனித்துச் சுயமாக வாழ்ந்தால்தான் தன்னலனுக்கும் உலக நலனுக்கும் அதனுல் உழைக்க முடியும்: சிறுபான்மை இனங்களை யெல்லாம் அடக்கி ஆண்ட ஏகாதிபத்தியங்கள் சட்டப்படி மலையேறிவிட்டன. எனவே விரும்பினுல் பிரிந்து கொள்ளுங்கள் என்று எடுத்துக் காட்டினுர்.

அதன்படி - பின்லாந்து - போலந்து போன்ற நாடுகளின் விருப்பங்களை தோழர் லெனின் ஏற்று அவைகளுக்குத் தனி ஆட்சி வழங்கினுர். அன்று தொடர்ந்து அந்நாடுகள் சார் ரஷ்யாவால் அடக்கப்பட்டுக்கொண்டிருந்தால் இன்று அந்த இனங்களும் - நாடுகளும் உலகிற்கு அதிகமான எழுத்தாளர்களைத் தந்திருக்காது - நோபல் பரிசைப் பெற்றிருக்காது இந்த உண்மைகளை எமது தோழர்கள் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டார்களா?

இனவிடுதலையில் வீறுகொண்டெழுந்து வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களைப் பார்த்துப் பொருளாதாரம் – பொருளாதாரம் என்று காலம் நேரம் தெரியாது கோஷமிட்டுக்கொண்டிருக்கும் தோழர்கள் ஒரு இனத்திற்குப் பொருளாதாரத்தை விட, விடுதலைதான் முக்கியம் என்பதை ஏனே உணர முடியாதவர்களாகி விட்டார்கள். அடக்குமுறைச் சட்டங்களால் அல்லலுற்றுக்கொண்டிருக்கும் எந்த இனமும் விடுதலையை விலைகூறிவிட்டுப் பொருளாதாரத்திற்காகப் போராடியதாகச் சரித்திரத்தில் நம்மால் பார்க்கவே முடியாது. ஏன் - ரஷ்யாவின் தந்தை லெனின் கூட, சார் மன்னன் புரட்சி வெற்றி அடையுமுன் பொருளாதாரத்தைப்பற்றிக் கவலைப்பட்டதே கிடையாதே! முதலில் ரஷ்ய மக்கள் விடுதலை அடையவேண்டும் என்று தானே தொடர்ந்து அவர் புரட்சியை நடத்திக்கொண்டிருந்தார். அப்படியிருக்க அவரின் சீடகோடிகள் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

எந்தச் சித்தாந்தத்தில் எங்களைப் பார்த்துப் பொருளாதாரத்தைப் பற்றிக் கூறமுடியும்?

தோழர் லெனின் கண்ட பொதுவுடைமைச் சிந்தாந்தத்தில் 12 கோடி ரஷ்யமொழி பேசுகின்ற மக்களுக்கு எந்த உரிமைகளிருக்கின்றனவோ, அதே உரிமைகள்தான் 20 லட்சம் கார்க்கசியர்களுக்கும், 16 லட்சம் ஆர்மனியர்களுக்கும். 14 லட்சம் எஸ்தோனியர்களுக்கும், 7 லட்சம் கார்லோபின்னிஸ்டுககளுக்கும் சமத்துவமாகத் தரப்பட்டுள்ளன. இச் சின்னஞ்சிறிய தேசிய இனங்களுக்கு மொழி வளமோ-இலக்கிய வளமோ - வரலாறுகளோ எதுவுமே கிடையாது-இருந்தும் - இத் தேசிய இனங்களுக்கு இத்தனை உரிமைகளையும் வழங்கியிருக்கின்றார் தோழர் லெனின்.

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாட்டில் இப்படியான பிரச்சனைகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். என்றாலும் அப்படி ஏற்படும்போது சிறுபான்மைத் தேசிய இனங்கள் விட்டுக்கொடுக்கத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று கூறும் தோழர்கள் - தமக்குத் தலைமைதாங்கும் ரஷ்யாவில் 60க்கு மேற்பட்ட தேசிய இனங்கள் உரிமைப் பிரச்சனைகளின்றி வாழ்வதைத் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள். இரண்டே இரண்டு தேசிய இனங்கள் வாழும் நாட்டில் பிரச்சனைகள் தவிர்க்கமுடியாதது என்றால் 60க்கு மேற்பட்டதேசிய இனங்கள் வாழும் ரஷ்யா எப்படித்தான் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொண்டது? தோழர்கள் கூறுவார்களா?

இத்தேசிய இனங்களின் பிரச்சனைகளில் - சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு ரஷ்யா தன் அரசமைப்பை நான்கு பிரிவுகளாகக் கண்டிருக்கின்றது. யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிரதேசங்கள், தேசியப் பகுதிகள் என்பதே இந் நான்கும்-சோவியத்திலுள்ள 16 யூனியன் குடியரசுகளுக்கும் பரிபூரண உரி

9

72276C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகள் யாவும் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுத் தொடர்பு - விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமை - தனிப் படைப்பலம் - சொந்தமாகச் சட்டமியற்றிக்கொள்ளும் வாய்ப்புக்கள் போன்ற அனைத்துமே அரசியல் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

*சுயாட்சிக் குடியரசுகள்:* - இது குடியரசில் ஓர் அங்கம். இப்பகுதி மக்களுக்குத் தனிப் பிரஜா உரிமை - யூனியன் குடியரசுப் பிரஜா உரிமை - ரஷ்ய பிரஜா உரிமை என்ற மூன்று உரிமைகள் இதற்குண்டு. இச் சுயாட்சிக் குடியரசுகள் தமக்குத் தேவையான சட்டங்களைத் தாமே இயற்றிக்கொள்ளும். இது தம் தாய்மொழிமூலமே நிர்வாகம் பண்ணிக் கொள்வதுடன் - யூனியன் குடியரசுக்குரிய தேசியக் கொடியுடன் தனது பெயரையும் இணைத்துத் தனிக்கொடி கண்டிருக்கின்றது.

*சுயாட்சிப் பிரதேசங்கள்:* - சின்னஞ்சிறிய தேசிய இனங்களைக் கொண்ட இப்பிரதேசங்களை யூனியன் குடியரசுகளே அமைத்துக் கொடுத்திருக்கின்றன. இப் பிரதேசங்கள் தத்தமது தாய்மொழிகள் மூலமாகத் தம் பகுதிகளை நிர்வகிக்க உரிமைகளுண்டு. உதாரணமாக ஒரு சுயாட்சிப் பிரதேசத்தில் அன்று 6000 மக்களுடன் சுயாட்சி பெற்றிருந்த "நென்ட்ஸி" என்ற இனம் இன்று இனப்பெருமையுடன் 30,000 க்கு மேலாக வீறுடன் எழுச்சி பெற்று வளர்ந்திருப்பதை எமது தோழர்களுக்கு நாம் எடுத்துக் காட்டித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்றிருக்கின்றார்கள்.

எனவே, பொதுவுடமைத் தலைமைப் பீடத்தில் 6,000 மக்களுக்குச் சுயாட்சி - இங்கே 35 லட்சம் மக்கள் அதே போன்ற உரிமைகளைக் கேட்கும்போது தோழர்களுக்கு இது வகுப்புவாதமாகத் தெரிகின்றதாம்.

அன்று 1948-ம் ஆண்டு மத்திய கிழக்கில் 7000 சதுர மைல்களையும் 6 இலட்சம் மக்களையும் உள்ளடக்கி இஸ்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

வேல் என்ற ஒரு தனிநாட்டை உருவாக்கிவிட்டது ரஷ்யாவும், அதன் பொதுவுடமைத் தத்துவமும். ஆனால் இங்கே முற்போக்குத் தோழர்கள், அதே 7,000 சதுரமைல்களையும் - 35 லட்சம் மக்கள் தொகையையும் கொண்ட ஒரு இனம் தனக்குரிய உரிமைகளைக் கேட்பது தவறு என்று தம் மனச்சாட்சிகளைச் சர்கடித்துக் கூறுகின்றார்கள்.

தேசியப்பகுதிகள்: இதுவும் ஒருவிதச் சுயாட்சிப் பிரதேசங்களைப் போன்றவைகள்தான். சிறுபான்மை மக்களின் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடியவாறு அமைக்கப்பட்டவைகளில் இதுவும் ஒன்று, தத்தமது தாய் மொழிகள் மூலமாகவே இவைகள் எந்தத் தடைகளுமின்றித் தம்பகுதிகளை நிர்வகிக்கின்றன.

இப்பிரதேசங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தத்தமது மக்கள் விகிதாசாரங்களுக்கேற்ப சோவியத் தேசிய சபைக்குத் தம் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கின்றன. ஒவ்வொரு யூனியன் குடியரசுக்கும் தலா 25 பிரதிநிதிகளும் சுயாட்சிக் குடியரசுகள் ஒவ்வொன்றும் தலா 11 பிரதிநிதிகளையும், சுயாட்சிப் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதிகளையும், தேசியப் பகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரதிநிதியையும் அனுப்பி வைக்கின்றன.

பிரஞ்சுப் புரட்சிக்கு வித்தூன்றிய "வால்டோர்" சொன்னார், ஒரு தேசிய இனம் தன் உரிமைகளைப்பற்றிச் சிந்திக்கத்தொடங்கிவிடுமானால் அதன் சக்தியை எந்தப் பலத்தாலும் அணைகட்டமுடியாது என்று! வால்டோரின் இச் சித்தாந்தத்தில் தோழர் லெனினுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அதனால்தான், லெனின் தன் உண்மையான பொதுவுடமைத் தோழர்களைப் பார்த்து, பிற தேசிய இனங்களுக்கு உத்தரவாதமான உரிமைகள் தரப்பட்டுச் சமத்துவமாக (அரசமைப்புச் சட்டமூலம்) மக்கள் நடத்தப்பட்டாலே தவிர, வேறு எந்தப் பலத்தாலும் ஒரு நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவைத் தடுக்க முடியாது என்று திட்டவட்டமாக வற்புறுத்தியிருக்கின்ருன். இதற்கு இங்குள்ள எமது தோழர்கள் என்ன வியாக்கியானம் தரப்போகின்ருர்கள்?

லெனின் சித்தாந்தம் பிழையா? சோவியத் அரசமைப்புத் தவரு?

12 கோடி ரஷ்ய மொழியாளர்களுக்கு மத்தியில் 30,000 "நென்ட்ஸி" இனம் உரிமைகள் பெற்று வாழும் போது, ஒரு கோடி சிங்கள மக்கள் மத்தியில் 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் தம் உரிமைகளைக் கேட்பது தப்பா?

## தேசிய இனங்களை அழிக்கும் ஒற்றையாட்சிச் சட்டம்

உலகில் எந்த சர்வாதிகார நாடுகளாக இருந்தாலும் சரியே - சரித்திரத்திற்கு முற்பட்ட கிரேக்க ரோம சாம்ராஜ்யங்கள் தொட்டு - நீதிக்கும் வீரத்திற்கும் பெயர்பெற்ற வழிவழித் தமிழகம்வரை - பிரெஞ்சு மன்னர்கள் லூயி, நெப்போலியன் தொடக்கம் வரலாறுகண்ட ஹிட்லர், முசோலினி வரை ஒரு நாட்டுக்குத் தேவையான அரசமைப்புச் சட்டங்களை இயற்றும்போது மக்களின் கருத்துக்கள் துச்சமாக்கப்பட்டு-அதுவும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் துப்பாக்கி முனைகளில் கொண்டுவரப்பட்டதாக எந்த வரலாறுகளிலும் நாம் படித்திருக்கின்ேறுமா? அல்லது எந்த நாடுகளாலும் இதை நினைத்துப் பார்க்கத்தான் முடிந்ததா? இல்லையே! இதில் நமது நாட்டைப்பற்றி உலகநாடுகளும் - இனங்களும் என்ன நினைத்திருப்பார்கள் என்பதைக் கற்பனைகூடப் பண்ணமுடிகின்றதா நம்மால்?

அதே போன்று, ஒரு நாட்டுக்குத் தேவையான அரசமைப்புச் சட்டத்தை இயற்றும் போதும் - கட்சிச்சார்பற்றவர்களைக் கொண்டே இயற்ற வேண்டும் என்பது அரசியல் மரபுகளில் ஒன்ருகும். தமக்கென்று திட்டவட்டமான அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் கொள்கைகளைக் கொண்டவர்கள் இப்புனிதமான பணியைப் பொறுப்பேற்கும் போது - தத்தமது கொள்கை களுக்கேற்ப அதை உருவாக்கித்தர நினைப்பது இயற்கையே. அதனால் தான் கட்சிச் சார்பற்றவர்களே இப்பணிக்கு பொருத்தமானவர்கள் என்று காந்தி, நேரு போன்ற தலை வர்களெல்லாம் எண்ணிச் செயல்பட்டிருக்கின்றார்கள்.

உதாரணமாக திரு கொல்வின் 38 அடிப்படைச்சட் டங்களையும் - அதற்குப் பல நூற்றுக்கணக்கான உட்பிரிவுக ளையும் அமைத்தெடுத்தபோது - ஒரு கமாவைத்தானும் அதில் திருத்த முடியாதென்று அரசியல் நிர்ணய சபைக்கு ஏதேச்சாதிகாரமாக அவர் கூறியதை நாம் பார்த்தோம். இது மட்டுமல்ல - தமிழரசு கொண்டு வந்த - தமிழினத் துக்குரிய ஆகக்குறைந்த சலுகைகள் சிலவற்றைக்கூட, ஏற்றுக்கொள்ள விடாப்பிடியாக மறுத்து விட்டதையும் புதிய அரசமைப்பால் தமிழினம் அடித்தளத்திற்கே தாழ்த் தப்பட்டுள்ளதையும் அனுபவரீதியாக - விரும்பாமலே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

1956-ம் ஆண்டு ஜூன் 5ல் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் அன்று மிகச் சிறுபான்மை வாக்குக ளால்தான் நிறைவேற்றப் பட்டிருந்தது. ⅔ பெரும்பான்மை வாக்குகளால் அச்சட்டம் நிறைவேற்றப் படாததால் அடிக் கடி நீதிமன்றங்களால் அது நிராகரிக்கப்பட்ட ஒரு சட்டமா கவே இருந்து வந்தது. இந்நிலையில் - நிச்சயமாக ஒன்றை மட்டும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். ⅔ பெரும்பான்மை வாக்குகளால் தனிச் சிங்களச் சட்டம் புதிய அரசமைப்பு சட்டத்தில் - பூரண நிறைவுடன் இடம் பிடித்துவிட்ட அதே நேரத்தில் தமிழ் மொழி தேசிய மொழி அந்தஸ்திலிருந் தும் தூக்கி எறியப்பட்டு விட்டது என்பதேயாகும்.

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கமுடி யாத உரிமைகளைச் சாதாரண மசோதாக்கள் மூலம் - என்ன தான் வாய்ப்புக்கள் கிடைத்தாலும் அதனால் தமிழ் மொழிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156261

நிரந்தரமான பாதுகாப்பும் - அந்தஸ்தும் ஏற்பட்டுவிட முடியாது என்பதைத் திட்டவட்டமாக நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## அரசியல் கோமாளிகள்

எந்த வேலைகளுமே இல்லாத வாழாவெட்டிக்கு எப்போதுமே எதிர்வீட்டுச் சன்னலைப் பார்த்து ஏங்கிக்கொண்டிருப்பதிலேயே ஒரு சுயதிருப்தி. பூவைத்த தலையிலும்-புருசனை உள்ளத்தின் ஆழத்திலுமாக வைத்துப் பூஜித்துக் குடும்பம் நடத்திடும் பத்தினிக்குப் பத்தினியான குலமகளின் ஒவ்வொரு அசைவிற்கும் புதிய புதிய அர்த்தங்களை வலிந்து தேடியும் - காணமுடியாததைக் கண்டுவிட்டதாக எண்ணிக்கொண்டு தினமும் முணுமுணுத்துக்கொள்வதிலே எமது தோழர்களுக்கு ஒரு தாகசாந்தி. தாம் அனுபவிக்க முடியாத இன்பங்களை எவளோ (தமிழரசு) அனுபவித்துக்கொண்டிருக்கின்றளே என்பதால் ஏற்படும் எரிச்சலும் - புகைச்சலும் - பெருமூச்சும் தோழர்களை நிலையிழக்கச் செய்து, அரசியல் நெறியிழந்து வெறிகொள்ளத் தூண்டியிருக்கின்றது.

அதனுல் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கும் ஊரலைத் தணித்துக்கொள்ள -கறுப்புக்கொடிகளுக்கு மத்தியிலே வந்து போய்க்கொண்டிருக்கும் சிங்கள அமைச்சர்களுக்கும்-தோழர்களுக்கும் தலையைச் சொறிந்து காட்டிப் பாதம் வணங்கி நிற்கின்றூர்கள், அங்கே தமிழினத்தின் விடுதலை உணர்ச்சிகளை மனித தர்மத்திற்கு மாருக - மலிவான விலைப்பொருளாகக் காட்டிக்கொண்டு - சுய விளம்பரங்கள் தேடிக்கொள்வதிலும் - வாய்ப்புக்களுக்குப் பேரம் பேசிக் கொள்வதிலுமே -மக்கள் பணி - தியாக சிந்தை கண்டிருக்கின்றூர்கள் தோழர்கள்.

பொது வாழ்வில் தர்மம் - நியாயங்கள் மதிக்கப்பட வேண்டும் - அரசியல் நெறிமுறைகள் காப்பாற்றப்படவேண்டும் - அரசியல் ஒழுங்கீனங்கள் களைந்தெறியப்பட்டுத் தியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு பேணப்படவேண்டும் என்பவைகளில் எப்போது தான் தோழர்களுக்கு அக்கறை இருந்தது? எமது பொது வுடமைத் தோழர்கள் அரசியலில் எதை வேண்டுமானாலும்–எப்படி வேண்டுமானாலும் பேசலாம் - நடக்கலாம் என்று செயல்படுகின்றார்கள். எனவே தவறானதோர் அணியில் தம்மை இணைத்துக்கொண்டது மல்லாமல், தமிழ் பேசும் மக்களையும் ஈனத்தனமான கொள்கையில் இணைத்துவிட முற்போக்குப் பேசும் தோழர்கள் முயற்சித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

இலைகளிடையே இளந்துளிரைக் காணும்போது ஒரு இன்பம் தோன்றுகின்றது. மலர்ந்த மலர்களிடையே ஒரு மொட்டைப் பார்க்கையில் - இந்த மொட்டும் மலரும்-மற்ற மலர்களைப்போன்று - பெரிதாக - மணமுள்ளதாக இருக்கும் என்ற எண்ணமே தலைதூக்கி நிற்கின்றது. இளந்துளிர்-மல ராத மொட்டு=முதிராத பிஞ்சு இவைகள்தான் தன் வளர்ச்சி களை எடுத்துக்காட்டும். வளர்ந்து முழுமை பெற்று இது இவ்வளவுதான் என்கின்ற நிலையைவிட, மேலும் வளரும் என்பதில் நம்பிக்கை அதிகமாகப் பொதிந்திருக்கின்றது. வளரமுடியாத மொட்டு என்றால் அது பிஞ்சிலேயே கரு கிப்போயிருக்கும். எனவேதான் சொல்கின்றேன் - தமிழி னத்தின் நீர் உணர்ச்சிகளில்லாமல் நிராகரிக்கப்பட்டு விட்ட கொள்கை - இங்கு பிஞ்சிலேயே கருகிவிட்ட மொட்டு இது வென்று. அரசியல் கோமாளிகளான தோழர்களுக்கு இன் னுமா மக்கள் நிலைபுரியவில்லை?

எமது அனுதாபத்திற்குரிய அரசியல் கோமாளிகளான தோழர்கள் தமிழரசைப் பார்த்துப் பிற்போக்குவாதிகள் என்று கூறித் திரிகின்றார்கள். ஆனால் இன்று இதை அவர் களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் நீ பிற்போக்கு - இல்லை நீதான் பிற்போக்கு என்று குழாயடிச்சண்டைக்காரர்களாக மாறித் திட்டிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். அரசியலில் மக்கள் சில சமயங்களில் ஏமாளிகளைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருக்கின்றார்கள். ஆனால் கோமாளிகளைப் பார்க்கவேண்டுமானால் நிச்சயமாகப் பொதுவுடமைக் கூடாரத்திற்குள் மக்களால் பார்க்கமுடியும். இந்த உண்மைகளைத் தம்முடைய பூர்வீகப் பழக்கமாக உண்டு ஜீரணித்துவிட்டுத்-தோழர்கள் சதா பொய்களை உமிழ்ந்துகொண்டிருப்பதில் கைதேர்ந்த கலையைப் பெற்றிருக்கின்றார்கள்.

மனித இனத்திற்கு இயற்கை அன்னை வழங்கியிருக்கும் ஒளிவிளக்குத்தான் மனச்சாட்சி. அரசியலில் மக்கள் தொண்டர்களாகவே உலகுக்குத் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட காந்தி, லெனின், அண்ணா, செல்வா போன்ற பல பெரியவர்கள் எந்த நிலையிலும் தம் ஒளி விளக்கை அணையவிடாமல் பாதுகாத்து அரசியலை நெறிப்படுத்தி நிறைவு கண்டார்கள். ஆனால் நமது மத்தியிலே வாழும்-எல்லாமே தெரிந்தவர்களாக நடித்துக்கொள்ளும் தோழர்கள் மனச்சாட்சி என்ற அவ்வொளி விளக்கை அரசியல் பெருமூச்சால் ஊதி அணைத்துவிட்டு - அரசியல் சாக்கடையிலே நீந்திக் குளித்துக் கொண்டு - அதன் சகதியைச் சந்தனமெனக் கூறி - மூக்குப் பிடிக்கவே முடியாத நாற்றத்துடன் மக்கள் மத்தியிலே வலம்வந்துகொண்டிருக்கின்றார்கள்.

தமிழரசுமீது இவர்கள் வசைபாடும் அழகு தமிழில்-தமிழுக்கே உரித்தான வார்த்தைகளைத்தான் காணமுடியுமே தவிர, அதிலே விவாதத்தைக் காணமுடியாது; எம்மீது இவர்கள் கொண்டிருக்கும் எரிச்சல்தான் தேவைக்கதிகமாக இழையோடியிருக்கும். உண்மை இருக்காது; அதில் இதயமிருக்காது. மனிதாபிமானங்களைத் தம் சுயநலத்திற்காகச் சாகடித்துக்கொள்ளும் வெறும் அரசியல் பிண்டங்களான தோழர்கள் - நாடுபோற்றும் நல்லிதயம் படைத்த தியாகி-ஈழத்துக் காந்தி - பார்போற்றும் பெரியார் - தானைத் தலைவன் - தீர்க்கதரிசி - மதிப்புக்குரிய தெய்வம் - செல்வா அவர்களால் கட்டுக்கோப்பாகக் கட்டி வளர்க்கப்பட்ட எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராகப் பேசிப் பழகுவதே தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்நிலை என்று கிடக்கின்றார்கள். சந்திரனின் ஒளியை மறைக்க உள்ளங்கை போதும் என்ற நம்பிக்கை உடைய வர்கள் இவர்கள்.

எனவே - வெறும் அரசியல் அரிப்பால்மட்டும் உணர்ச்சி வசப்படாமல் - அறிவால் உந்தப்படும் உணர்ச்சிகள் ஏற்ப டும்போதுதான் அதன் கௌரவத்தையும்-மரியாதைகளையும் பாதுகாக்க முடியும் என்பதைத் தோழர்கள் நிச்சயமாகத் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றேன்.

மயிலே மயிலே இறகு போடு என்றால் நிச்சயமாக அது இறகு போடாது. நாமாகத்தான் அதிலிருந்து பிடுங்கி எடுக்கவேண்டும் என்பதுதான் - தோழர்களெல்லாம் சாதா ரணமாகத் தெருக்களிலும்-மேடைகளிலும் பேசும் சித்தாந்த மாக இருக்கின்றது.

ஒரு மயில் தானாகத் தோகை விரித்து வருவோர்-பேர்வோர் மனதுகளை எல்லாம் - ஏழை பணக்காரன் என்ற வேற்றுமைகளின்றி அழகாக ஆடிக்காட்டித் தானும் இன் புற்று - மற்றவர்களையும் இன்புறச் செய்கின்றது. அதற்கு இல்லான் - வல்லான் என்ற வேற்றுமைகள் கிடையாது. தன் தோகையின் அழகைக்காண நினைப்பவர்களுக்கெல் லாம் இன்பமூட்டச் செய்கின்றது. பிளேட்டோவும் - மார்க் சும் பொதுவுடமைத் தத்துவத்தைக் காண்பதற்கு முன்பே - மயிலின் தோகையில் காலம் சமத்துவத்தைப் படைத்து விட் டிருக்கின்றது. எனவே மக்கள் சமமாக இன்பம் காணும் மயி லின்தோகையைப் பிடுங்கி விடுவதென்றால்-அதனால் யாருக் கும்என்ன நன்மை? மயிலும் தோகை யிழந்து - அதன் அழ கிழந்து அழிந்துவிடும். அதைப் பிடுங்கிய தோழர்களாலும் மயிலைப்போல் தோகைகட்டி ஆடமுடியாது. அதனால்தான் இப்படியான ஒரு தத்துவம் எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரத்தில் - கம்யூனிஸத்தின் கைக்குழந்தையான சோசலிசத்திற்குப் பாலூட்ட நினைக்கும் நாங்கள் அந்த மனித தர்மத்திற்கு அப்பால்பட்ட மிருகமாகக் காண விரும்ப வில்லை - மனித தன்மைகளின் பிறப்பிடமாகத்தான் அதை வளர்க்க விழைகின்றோம்.

நூற்றுக்கணக்கான பயணிகளுடன் ஒரு புகைவண்டி ஓடிக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு இருப்பிலும் ஒவ்வொருவராக நித்திரை செய்கின்றனர். ஐந்து பயணிகள் ஒரே நேரத்தில் இருந்து போகவேண்டிய ஒரு இருப்பு ஒருவரின் சுகத்திற்காகமட்டும் எதேச்சாதிகாரமாகப் பயன்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கே பிரயாணம் செய்யும் அத்தனை பயணிகளுக்கும் ஒரேவிதமான பயணச் சீட்டுக்கள்தான். இருந்தும் மற்றநான்கு பயணிகளும் வஞ்சிக்கப்பட்டு கால்கள் நோக நிலையாக நிற்கின்றனர். அந்த அப்பாவிப் பயணிகளிடம் முடவர் - குருடர் - வயோதிபர் ஆகியோர்களுமிருக்கின்றனர். அப்படியிருந்தும்-இருதயமோ இரக்கமோ இல்லாது அவர்களுக்கு அந்த சுகபோகிகள் இடம் தர மறுக்கின்றார்கள் என்றால் அங்கேதான் சோஸலிசம் தேவை என்று நாங்கள் சொல்கின்றோம்.

ஆனால் அதற்காக ஓடும் புகைவண்டியிலிருந்து நித்திரை செய்த அப்பயணியை வெளியே தூக்கி வீசிவிட்டு நாங்கள் நாலுபேரும்தான் உட்காருவோம். அதுதான் சோஸலிஸம் - சமத்துவம் என்றால் நிச்சயமாக எங்களுக்கு அப்படியான சோஸலிஸம் தேவையில்லை என்றுதான் நாங்கள் சொல்வோம். ஒன்றை அழித்து-ஒருவரை ஒழித்து-ஒரு சமுதாயத்தைப் புதைத்துக் காண்பதல்ல சோஸலிஸம் - என்பதைத் தோழர்கள் தெரிந்து கொள்வது அவர்களுக்கே நன்மை பயக்கும்.

## வரலாறு படைத்த தமிழினம்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியாம் எம் பழம்பெரும் குடிவழி வந்த தமிழன் - நெற்றியிலே இரத்தத்தால் திலகமிட்டுச் ''சென்றுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

கணவா எதிரிகளின் விலா எலும்பொடித்து வென்றுவா நீ'' என்று வாழ்த்தி வழி அனுப்பி வைத்த தமிழன்னையின் வழி வந்த தமிழன் - பால் மணம் மாறாத் தன் பாலகன் போர்க் களத்தில் புறமுதுகிட்டு மாண்டுவிட்டான் என்று மாசுபடக் கேள்வியுற்று - தாயகமே! என் தமிழகமே!! இது உண்மை யானால் அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பையே அறுத் தெறிவேன் என்று வீரசபதமிட்ட தமிழன்னை வழிவந்த தமிழன் - எதிரிகளின் மண்டைகளைப் பிளக்கப் பிள்ளைப் பேறு பெறமுடியாத பாவியாகிவிட்டேனே என்ற வெஞ்சினத் தால் தன் வயிற்றையே கிழித்தெறிந்த தமிழிச்சியின் வழி வந்த தமிழன் -

உடைவாளுடன் வடநாடு படைநடத்தி-தமிழின் தனித் தன்மைகளை இகழ்ந்த கனகன், விஜயன் என்ற வடநாட்டு மன்னர்களைச் சிறைப்பிடித்து - அவர்களின் தலைகளிலேயே கல்லேற்றி வந்து - சேரநாட்டிலே பிறந்து - பாண்டிய நாட் டிலே கணவனையிழந்து - சோழ நாட்டிலே தெய்வமாகிய கண்ணகிக்குப் பத்தினிப் புகழ் பாடிச் சிலைவடித்த தமிழன் வழிவந்த தமிழன் - வானளாவும் இமயத்தின் உச்சியிலே தமிழ்க்கொடி பொறித்த தமிழினம் கண்ட தமிழன்-வலிமை கொண்ட தன் கப்பல் படையால் வங்கக் கடலைக் கலக்கி- பர்மா - இலங்கை போன்ற நாடுகளில் வெற்றிப் பவனி வந்த தமிழன் வழித் தமிழன் -

தன் மகன் பசுங்கன்றைக் கொன்றுவிட்டான் என்பதற் காகப் பாலூட்டிய - மகன் பட்டத்து இளவரசன் என்றும் பாராது தேர்க்காலிலிட்டுக் கொலைக்குக் கொலை என்று தீர்ப்பளித்து நீதியின் மேம்பாட்டை உலகுக்கு எடுத்துக் காட்டிய மனுநீதிச் சோழன் வழிவந்த தமிழன் - புலியின் பிடியிலே சிக்குண்ட புள்ளி மானைப் பாதுகாக்கத் தன் சதை யிலே ஒரு துண்டைப் பசியால் துடித்த புலிக்கு இரையாக்கி விட்டு புள்ளிமானைக் காத்த ஈகைக் குணம் கொண்ட தமிழ் மாமன்னன் ''சிபி''யின் வழிவந்த தமிழன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் தனிச் சிறப்புக்களுக்குச் சவால் விட்டுக் காலத்திற்குக் காலம் படைஎடுத்து வந்த ஆப்கானிஸ்தர், அரேபியர், நிருதர், குசாணர், ஊணர், தாமர்லேன் போன்ற பல படை எடுப்புக்களை எல்லாம் புறமுதுகிட்டு ஓடச் செய்த தமிழன் வழிவந்த தமிழன்.

வணிகத்தில் - விஞ்ஞானத்தில் - அரசியல் நெறியில் சமத்துவத்தில் - ஆத்மத்தில் இவை அனைத்திலும் தனிச் சிறப்புக்கள் கண்ட தமிழன் வழிவந்த தமிழன் - பஃறுளி ஆற்றின் தென்மதுரையிலே ப8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சங்கம் வைத்து மொழிவளர்த்த தமிழன் வழிவந்த தமிழன் - இன்று ஈழத்தில் மொழியிழந்து - ஆட்சியிழந்து - அடிமைப்பட்ட நிலையில் சுருண்டுகிடக்கும் நிலையில் இன்றே தன் உரிமை காண திரண்டெழுட்டும்!

## ஜனநாயகம் கண்ட

## மக்களும் - தமிழினமும்

மத்தியகாலத்தில் இங்கிலாந்திலும் - மேற்கு ஐரோப்பாக் கண்டத்திலும் - சில இத்தாலிய நகரங்களிலும் மக்கள் பிரதிநிதி சபைகள் அமைக்கப்பெற்றிருந்தன. இங்கிலாந்தில் முதன்முதலாக ''வரி விதித்தல்'' என்ற பிரச்சனையில் மக்களின் பிரதிநிதிகளைக் கலந்தே சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற நியதியை பன்னிரண்டாம் நூற்றுண்டில் இரண்டாம் ஹென்றி மன்னன் ஆட்சி காலத்திலேயே கடைப்பிடிக்கப்பட்டது. மக்களுக்குச் சட்ட உணர்வுகளை ஊட்டி ஜனநாயகத்தை வளர்க்கவேண்டுமென்ற எண்ணம் முதலாம் இரண்டாம் ஹென்றி மன்னர்கள் காலத்திலேயே செயல்படத் தொடங்கியிருக்கின்றது. இரண்டாம் ஹென்றி மன்னன் நாடெங்கும் நீதிவிசாரணைச் சபைகளைக் கூட்டி- எந்தக் கட்டுப்பாடுகளும் ஏற்படாதவாறு மக்களுக்குப் பரவலாக நீதி கிடைக்கும் வகையில் நடுநிலையானவர்களை நீதிபதிகளாக நியமித்திருந்தான். இம்முறைதான் காலத்தால் நீதிமன்றங்களாகவும் - ஜுரர்கள் நியமிக்கப்படும் முறைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகவும் மாறியிருக்கின்றது. ஜனநாயகத்தின் தொட்டில் என்ற பெருமையோடு அழைக்கப்படும் இங்கிலாந்தில் ஜன நாயகம் வளர்ந்தெழுந்த விதம் தனித்தன்மை வாய்ந்த ஒன்ருகும்.

பதிமூன்ரும் நூற்ருண்டில் ''நார்மன்'' மன்னர்களின் படை எடுப்புக்களுக்குப் பின் மன்னர்களின் எதேச்சாதிகார மான போக்குகளால் இங்கிலாந்தில் அரசியல் நெருக்கடி கள் ஏற்படத் தொடங்கின.

இந்நூற்ருண்டில் ஜோன் மன்னன் மக்களை மதியாது காட்டுமிராண்டித்தனமாகச் செயல்பட்டதால் மக்கள் - மத குருமார் - பிரபுக்கள் போன்றவர்களெல்லாம் ஒருமித்துத் திரண்டெழுந்து மன்னர்களைப் பணியச் செய்தனர். அப் போது அவர்கள் மன்னனுடன் செய்துகொண்ட உரிமைச் சாசனம்தான் இன்று ஒரு நாட்டுச்குத் தேவையான அரச மைப்புச் சாசனமாக மாறியிருக்கின்றது. சக்தி படைத்த மன்னராக இருந்தும்கூட மக்களின் மகத்தான உரிமைக ளுக்கு மதிப்பளிக்காது அவரால் ஆட்சித்தேரை ஆடாமல் அசையாமல் ஓட்டிச்செல்ல முடியவில்லை.

எத்தனைதான் அதிகாரங்களைத் தம் சுண்டுவிரல் அசை விற்குள் குவித்து வைத்துக்கொண்டிருந்தாலும் - மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க மறுப்பவர்கள் மண் மேடாகிய வரலாறுகள்தான் உலகில் மிகமிக அதிகமாகும். அதனுல் தான் கடலளவு கண்ணீரைக் கொட்டிக்கொண்டிருக்கும் மக்களின் கண்களில் - கடுகளவு கண்ணீரையாவது பெருங் குணத்தோடு துடைக்க மறுக்கும் ஏகாதிபத்திய அரசுகளை - பொல்லாத ஆட்சியே ஒழிந்துபோ என்று அதற்கெதிராக மக்கள் குரல் கொடுப்பதைத் தவிர வேறு வழியே அவர் களுக்குக் கிடையாது என்றுதான் உலகப் பெரும் அறிஞர்க ளெல்லாம் கூறியிருக்கின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நிலையில் இன்று நாம் வாழும் வேதனைக்குரிய நாட்டையும் - அதை இயக்கிச் செல்லும் அரசையும் பார்க்கின்றோம் - வேதனைப்படுகின்றோம் - வெந்து தீய்ந்துகொண்டிருக்கின்றோம்.

ஆட்சி - சட்டம் சம்பிரதாயம் எதுவாக இருந்தாலும் அரசியல் தர்மங்களையும் - மனித நீதிகளையும் அழித்தொழிக்கத் துடிக்கும் அரசுகளுக்கும் - குடிதாங்கிய மன்னர்களுக்கும் எதிராக மக்கள் அடிக்கடி களம் கண்டு-மணிமுடி கொண்ட மன்னர்களையெல்லாம் மண்கவ்வச் செய்திருக்கின்றனர் - மக்கள் அதனால் எழுச்சியும் மலர்ச்சியும் கொண்டிருக்கின்றனர்.

இங்கிலாந்தில் மூன்றும் ஹென்றி காலத்தில் மன்னருக்கும் - மக்கள் மன்றத் தலைவர் ''சைமன்'' என்பவருக்குமிடையே நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் இறுதி வெற்றி மக்களுக்கே கிடைக்கப்பெற்று பாராளுமன்ற முறையைக் கொண்டுவந்தார்கள். 17, 18ம் - நூற்றாண்டுகளில் மேற்கத்திய நாடுகளில் மக்கள் எழுச்சிகளின் எதிரொலிகளிலேயே மக்களாட்சி ஏற்பட்டுப் புனிதமான ஜனநாயகம் வீறுகொண்டு வளர்ச்சி கண்டிருக்கின்றது. அதனால் அங்கே - கடவுளின் தூதுவர்கள் நாங்கள்தான் என்று மிருகத்தனமாக அறிமுகப்படுத்திக்கொண்டு பேயாட்சி நடத்திய மாமன்னர்களெல்லாம் மக்களால் பணிய வைக்கப்பட்ட நிகழ்ச்சிகளையும் - நாட்டை விட்டே துரத்தப்பட்டதையும் - தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டவைகளையுமே நாம் படிக்கின்றோம்.

முதலாம் ''சார்லஸ்'' மன்னருக்கும் - பாராளுமன்ற அமைப்பு முறைகளுக்குமிடையே ஏற்பட்ட ஒரு போராட்டத்தில் - மக்களுக்குத் தலைமை தாங்கி வெற்றிகண்ட 'தளபதி கிராம்வெல்'' தோற்கடிக்கப்பட்ட 'சார்லஸ்' மன்னரை நீதிமன்றமூலம் குற்றவாளியாகக்கண்டு தூக்கிலிட்டுக் கொன்றான். அதைத் தொடர்ந்து முடிசூட்டப்பட்ட இரண்டாம் சார்லஸ் மன்னரும் காட்டுமிராண்டிக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



கைகளில் நம்பிக்கைகொண்டு செயல்படத்தொடங்கினுன். தனக்குப் பிடிக்காதவர்களெல்லாம் சிறைப்பிடிக்கப்பட்டு- எந்த விசாரணைகளுமே இல்லாது சித்திரவதைசெய்து கொல்லப்பட்டனர். இக்கொடிய கொடூரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காக 1679ம் ஆண்டளவில் பாராளுமன்றம் ஆட்கொணர் சட்டமொன்றை இயற்றி - மக்களில் எவராவது நீதிமன்றத் தீர்ப்பின்றிச் சிறைப்பிடிக்கப்பட்டால் உடனே அவரை நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிடலாம் என்று ஆழமாக வற்புறுத்தியது. எந்தக் குற்றங்களுமே செய்யாத சிலர்-அரசியல் அதிகாரம் பெற்றவர்களுக்கு வேண்டாதவர் என்பதை மட்டும் கொண்டு - இறக்கும்வரை சிறையிலிட்டுச் சித்திரவதை செய்யும் பயங்கரமான அடக்குமுறைகள் சில நூற்றுண்டுகளுக்கு முன் வேறுசில நாடுகளிலுமிருந்து வந்திருக்கின்றன.

1789 ம் ஆண்டு அகில உலகையே அதிர்ச்சி கொள்ளச் செய்த பிரஞ்சுப் புரட்சிபற்றிப் பிடித்தெழுந்ததற்கும் இதே போன்ற பல அடக்குமுறைகளே அடிப்படைக் காரணங்களாக அமைந்திருந்தன. எந்தப் பாவமும் செய்யவே நினைக்காத அப்பாவி மக்களில் பலர் காரணமில்லாமலேயே சிறைப்பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர் - இறுதியில் அதற்குரிய தண்டனைகளையும் ஆட்சியாளர்கள் பெற்றிருக்கின்றனர்.

எனவே - இன்று நமது நாட்டில் - அதுவும் இச்சுதந்திர நூற்றுண்டில் - சுதந்திரத்தின் மகத்துவத்தை அகிலஉலகமே உணர்ந்து எழுச்சிகொண்டபின் - காலத்தால் செத்தொழிந்த அக் காட்டுமிராண்டிக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்களின் சட்டங்களால் நாம் நேரடியாகவே தாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். அடக்கப்பட்டுத் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்குரல் எழுப்பிய பல தொண்டர்கள் - எழுச்சிகொண்ட இளைஞர்களெல்லாம் எந்த விசாரணைகளுக்குமே உட்படாது தொடர்ந்து சிறைப்படுத்தப்பட்

டிருக்கின்றனர். இந்நிலை இருக்கும்வரை - தமிழ் பேசும் மக்களுக்கு வாழ்வோ - விடுதலையோ - விமோசனமோ அடுத்தவர்கள் மதிக்கும் நிலைகளோ நிச்சயமாக எதிர்காலத்தில் ஏற்பட முடியாதென்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

ஏன் இரண்டாம் ''ஜேம்ஸ்'' மன்னன் எதேச்சாதிகாரமாக ஆட்சி நடத்தியபோதுகூட, மக்கள் திரண்டெழுந்து மன்னர் என்றும் பாராது அவரைத் துரத்தி அடித்துவிட்டு ஆலந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் என்பரை மன்னராக முடிசூட்டி மக்களின் மறுமலர்ச்சிகளை எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள் மதிப்பிற்குரிய இங்கிலாந்து மக்கள்!

ஆகவே, பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் மக்களின் அடிப்படைத் தேவைகளும்-எண்ணங்களும் ஒன்றுதான் என்பதையே பொறுப்புள்ளவர்கள் சிந்திக்கவேண்டும். மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புத்தர மறுத்த மாமன்னர்கள்கூட, மக்களின் எழுச்சிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் எப்படியான பரிதாபங்களுக்கெல்லாம் ஆளாகியிருக்கின்றார்கள் என்பவைகளை எடுத்துக்காட்டவே இங்கிலாந்தின் இச்சின்னஞ்சிறிய பகுதியை எழுதினேன்.

ஆட்சியில் இருப்பவர்கள் - அதிகாரங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டவர்கள் எவராக இருந்தாலும் எதேச்சாதிகாரமே தம் இலட்சியம் எனக்கொண்டு துணிந்துசெயல்பட்டால் அங்கே மக்கள் கிளர்ந்தெழுவது அதிசயமான ஒன்றல்ல என்பதையே நாம் பல்வேறு வரலாறுகளிலிருந்தும் படித்தோம் - நமக்கும் பாடமாகக் கொண்டோம்.

அன்று பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்திற்கு வித்தூன்றிய ''ராபர்ட் கிளைவ்'' சின்னஞ்சிறிய தவறு செய்துவிட்டான் - மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புத்தர மறுத்துவிட்டான் என்பதற்காக அவன் தண்டிக்கப்படத் தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் எண்ணங்களுக்கும் - தேவைகளுக்கும் மதிப்புத் தராது - தன் சொந்த வாழ்விலேயே சுகபோகம் கண்ட எகிப்திய மன்னர் பாரூக் இரவோடு இரவாக நாடுகடத்தப்பட்டார்.

சார் மன்னனின் கொடுங்கோன்மைக்கு எதிராக ரஷ்ய மக்கள் கிளர்ந்தெழுந்து வெற்றிகண்டிருக்கின்றார்கள்.

வாரன் ஹேஸ்டிங் ஆட்சியில் நிர்வாக ஊழல்கள் இருந்தன என்பதற்காகப் பிரிட்டிஷ் நீதிமன்றம் அவனைத் தண்டித்திருக்கின்றது.

ஸ்பெயினில் எண்ணூறு ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்திக் கொடுத்த ''தளபதி தாரிக்'' மக்களின் எண்ணங்களை மதிக்கவில்லை என்று தண்டிக்கப்பட்டிருக்கின்றார்.

மக்களின் தேவைகளைத் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டனர் என்பதற்காக மணிமுடிதாங்கிய மாமன்னர்கள் பிரிட்டிஷ் வரலாற்றில் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர் - நாட்டை விட்டுத் துரத்தப்பட்டிருக்கின்றனர் - மன்னிப்புக் கேட்டு மக்களுக்கு மண்டியிட்டிருக்கின்றனர். இந்நிகழ்ச்சிகளெல்லாம் எமக்கு எதை எடுத்துக் காட்டுகின்றன? மக்களின் உணர்ச்சிகளைத் துச்சமாக நினைத்தவர்களின் பரிதாபநிலைகளைத்தானே!

நாகரீகங்களையும் - ஆட்சி அமைப்புக்களையும் கொண்ட இங்கிலாந்து ஜர்மன் இனத்தையும்-மொழியையும் கொண்ட இரண்டாம், மூன்றும் சார்லஸ் மன்னர்களிடமே ஆட்சிப் பொறுப்பைப் பதினெட்டாம் நூற்றுண்டில் ஒப்படைத்திருக்கின்றது. அப்போது ஆங்கிலத்தில் அவர்களுக்கு ஒரு எழுத்துக் கூடப் புரியாது. இருந்தும் மொழியாலும் - இனத்தாலும் முழுக்க முழுக்க வேறுபட்ட ஜர்மனியர்களைத் தொடர்ந்து மன்னர்களாக்கி வந்திருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று ஸ்பெயின் மொழியில் ஒரு சொல் கூடத் தெரியாத "தாரிக்" பல ஆண்டுகள் (12) ஸ்பெயினை ஆட்சி கொண்டிருக்கின்றார். ஆனால் - இதே நாட்டிலேயே பிறந்து தவழ்ந்து - இந்நாட்டிலேயே வாழ்ந்து மடியப்போகும் 35 லட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியலில் அற்ப உரிமைகளைக்கூட அனுபவிக்கமுடியாதிருக்கின்றது.

## ரோமானிய சாம்ராஜ்யமும்
## அதன் வீழ்ச்சியும்

நாம் மேலே படித்த பழம் பெருமை வாய்ந்த கிரேக்க நாடுகளைப் போன்று - பண்டைய புகழ்பெற்ற நாடுகளில் ரோமானியப் பேரரசும் ஒன்றாகும். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ரோமானியர்கள் ஐரோப்பாவில் பெரும்பகுதிகளை மட்டுமல்ல - உலகில் பெரும்பகுதிகளையே வென்று ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தைக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் ஐரோப்பிய சமூகங்கள் அனைத்தும் சட்டம் - சம்பிரதாயம் - அரசியல் கோட்பாடு - குடிமை - நாகரீகம் போன்றவைகளில் ஒரே அடிப்படை இலட்சியத்தைக் கடைப்பிடித்தே "ரோமானியப் பேரரசு" என்ற ஆட்சித் தேரை ஆடாமல் அசையாமல் ஓட்டிக்கொண்டிருந்தது. உலக நாடுகளைப்போன்று ரோமும் அன்று மன்னராட்சிகளையும் - அவர்களின் கெடுபிடித் தனங்களையும் - மக்கள் எழுச்சிகளையும் மாறி மாறிச் சந்தித்திருக்கின்றது. "டார்க்வின்" என்ற மன்னன் வழிவழியாக வந்த சம்பிரதாயங்களைக் கௌரவப்படுத்தாது - மக்களின் நியாயமான கோரிக்கைகளையெல்லாம் படைப் பலத்தால் அடக்கி ஒடுக்கிவிட்டு இறுமாப்புடன் அரசு செலுத்தியபோது - உலக நாடுகளைப் போன்று கிளர்ந்தெழுந்த மக்கள் இம்மன்னரை அப்புறப்படுத்திவிட்டுக் குடியரசு முறைகளைக் கண்டிருக்கின்றனர்.

இக் குடியரசில் - மன்னருக்குப் பதிலாக இரு பெரும் அரசியல் அதிகாரிகள் நாட்டின் நிர்வாகப் பொறுப்புக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KO
JF



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஏற்றிருந்தனர். இவர்கள் இருவரும் மக்கள் சபையால் ஆண்டுதோறும் மாற்றப்பட்டு - அவ்வப்போது திறமைக ளுள்ள புதியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். ரோம சாம்ராஜ்யம் அப்போது மக்களுக்கு மதிப்பளித்துப் பெருமை யோடு கொடிகட்டிப் பறந்தது. உலக நாடுகளுக்கும் ஆட்சி அமைப்பு முறைகளையும்-நாகரீகங்களையும் கற்றுக்கொடுத்த அதே நேரத்தல் - என்று அது அடக்குமுறைகளைக் கையா ளத் தொடங்கியதோ அன்றே வீழ்ச்சியின் பக்கம் வேகமா கச் சரியத்தொடங்கிவிட்டது.

பல்வேறு இன மக்களைக்கொண்ட ரோம சாம்ராஜ்யத் தில் ''பெட்ரீசியர்கள்'' என்ற இனத்தவர்களே அதிகமாக இருந்தனர். காலம் செல்லச்செல்ல இவர்களின் ஆதிக்க வெறிகளுக்குத் தன்னுட்டு மக்களையே பலியிட்டுக்கொள்ளத் துணிந்துவிட்டனர். அந்நாட்டுச் சிறுபான்மை இனமான பளபியர்களை நேரடியாகத் தாக்கினர். நாட்டுரிமை மறுக் கப்பட்டது - நீதித்துறையில் புறக்கணிக்கப்பட்டனர் - ஒரு தலைப் பட்சமான தர்மானங்கள்மூலம் வஞ்சிக்கப்பட்டனர் - மக்கள் சபையில் பங்குகொள்ளும் உரிமை தடுக்கப்பட்டது. சமூகப பொருளாதாரத் துறைகளில் அடக்கப்பட்டனர் - இரு பகுதி மக்களும் தவறிக்கூடத் திருமண - குடும்ப உற வுகள் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது.அளவுக்கதிகமான வரிச் சுமைகள் ஏற்றப்பட்டன. இவர்களின் மந்தைகள் பொது இடங்களில் உணவு தேடக்கூடாது. தெரிந்தோ தெரியா மலோ அப்படி நடந்துவிட்டால் மந்தைகள் பறிமுதல் செய் யப்பட்டன. இப்படியான அனைத்துரிமைகளும் பறிக்கப் பட்ட அதே நேரத்தில், நாட்டின் போர் வீரர்களாகவும் பணியாற்றக் கண்டிப்பாகப் பணிக்கப்பட்டனர். ஆம், அவர் களுக்குள்ள ஒரே உரிமை கொலைக்களம் செல்லும் உரிமை தான். இதனுல் இரு இனத்தவர்களுக்குமிடையே அடிக்கடி மோதல்களும் - பிணக்குவியல்களும் ஏற்பட்டு வந்தன.

அதிகாரப் பலமும் பெரும்பான்மை என்ற நிலையும் பிளேபியர்களை நாளடைவில் அழித்தொழித்து வந்தன. இந் நிலையில் பெட்ரீசியர்களின் இன ஒழிப்புக் கொள்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றும் பிளேபியர்கள் தம்மைக் காத்துக் கொள்வதற்கு இடம் பெயர்ந்து செல்வதைத் தவிர வேறு வழியே அவர்களுக்கு அப்போது இருக்கவில்லை. எனவே இவர்கள் ''தூய மலை'' என்ற பகுதிக்குக் குடியேறி தன்னாட்சி காண விழைந்தனர்.

இக் குழப்பங்களையும் - பூசல்களையும் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள நினைத்த எதிரி நாடுகள் ரோம்மீது அடிக்கடி படை எடுத்தன. அப்போது பிளவுபட்டு நின்ற ரோம சாம்ராஜ்யம் இப் படை எடுப்புக்களுக்கெல்லாம் ஈடு கொடுக்க முடியாது தோல்விகளை மாறி மாறி தழுவிக் கொண்டிருந்தது. அதுவரை எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து - ரோம சாம்ராஜ்யத்தை உருவாக்கிக் கட்டிக் காத்து வந்த சிறுபான்மை இனமான பிளேபியர்கள் இப்போது நாட்டில் இல்லை. ரோம் நாட்டின் தன்மானங்களைக் காத்து வந்த இனம் வஞ்சிக்கப்பட்டுத் துரத்தப்பட்டுள்ளனர். எதிரிகளை மண்டியிடச் செய்து ரோம சாம்ராஜ்யத்தைக் காக்கும் துணிபு பெட்ரீசியர்களுக்கும் இருக்கவில்லை. நாடு அல்லோலகல்லோலப்பட்டது. ரோமின் தனிப்பெருமையும் - புகழும் பொல பொலவென்று உதிர்ந்தன. பிளேபியர்கள் உதவி கொடுக்கவில்லை என்றால் ரோம சாம்ராஜ்யமே சாம்பர் மேடாகிவிடும் என்ற நிலை ஏற்பட்டது.

அப்போதுதான் பெட்ரீசியர்கள் பிளேபியர்களின் தனித்தன்மைகளையும் - உரிமைகளையும் உணரத் தலைப்பட்டனர். பிளேபியர்களால்தான் ரோமுக்கு வாழ்வும் விடிவும் ஏற்படுமென்பதை அனுபவ ரீதியாகவே உணர்ந்தனர் - பிளேபியர்களின் உரிமைகள் அனைத்தையும் படிப்படியாகச் சட்டமூலம் விட்டுக்கொடுக்க முன்வந்தனர்.

எனவே - தெரிந்தோ - தெரியாமலோ அவர்கள் அடங்கி வாழ நினைத்திருந்தால் என்றோ அந்த இனம் அழிந்துபோயிருக்கும். அப்போதுதான் ''வெல்ஜில்'' என்ற ரோமக் கவிஞன் சொன்னான், தன் இளமை முதற்கொண்டு இறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை வெல்லவும் - ஆளவும் - பேறுபெற்ற ரோமின் இடைக் காலச் சரிவு நிரந்தரமானதல்லவென்று!

மக்களின் உரிமைகளுக்கும் - சமத்துவத்திற்கும் ஏற்ற ஆட்சிமுறை சமஷ்டி அரசமைப்புத்தான் என்பதை அனுபவ ரீதியாகவே ஏற்றுக்கொண்ட ரோம் - இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே பிரோக்கான்சல்கள் - பிரோப்ரீட்டர்கள் என்னும் ஆட்சி அமைப்புக்கள் மூலம் மாகாணங்கள் ஒவ் வொன்றும் தன்னுட்சி கண்டிருந்தன. ரோம சரித்திரத்தில் புகழ் படைத்த ஜுலியஸ்சீஸர் - அகஸ்டஸ் போன்ற மணி முடிதாங்கிய மாமன்னர்களும் இந்த ஆட்சிமுறைகளிலேயே திருப்திகண்டிருக்கின்றனர். இம் மாகாண ஆட்சிகளில் நிர் வாக ஊழல்கள் காணப்பட்டால்-அப்போது அதன் கவர் னர்கள் மாற்றப்பட்டுப் புதியவர்கள் நியமிக்கப்படுவார் கள். அவர்களின் ஊழலுக்கான காரணங்கள் ஆராயப் பட்டு கிரேக்கம், இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுக ளைப் போன்று நீதிமன்றங்கள்மூலம் தண்டிக்கப்படுவார்கள்.

ஆகவே சமஷ்டி என்பது பிரிவினை அல்ல - அது இணைப் பாட்சியே என்பதை எமது தோழர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இருபதுக்கு மேற்பட்ட உலக நாடுகள் சமஷ்டி அரசமைப்பில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துச் செயல் படுகின்றன. வல்லரசுகளாக இருந்தாலும் சரியே - சின்னஞ் சிறிய சுண்டைக்காய் நாடுகளாக இருந்தாலும் சரியே இந்த ஆட்சி முறையில் பரிபூரணமான நம்பிக்கை கொண்டிருக் கின்றன.

60 கோடி மக்களைக்கொண்ட இந்திய உபகண்டமும் சமஷ்டியில்தான் நம்பிக்கை கொண்டு வாழ்வுபெற்று - உலக வல்லரசுகளில் ஒன்று என்ற நிலைக்கும் வளர்ந்துள்ளது.

21 கோடி மக்களையும் பல்வேறு இனங்களையும்கொண்ட அமெரிக்கா - ரஷ்யா போன்ற உலகப் பெரும் வல்லரசுகளும் -வல்லரசு என்ற நிலைக்கு வளர்ந்ததற்கு அவைகளின் சமஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



ஆட்சி அமைப்பே காரணமாக அமைந்திருக்கின்றன: அதே போன்று ஒரு கோடிக்கும் குறைவான சுவிஸ்லாந்து போன்ற சின்னஞ்சிறிய நாடுகளும் இச்சமஷ்டி அமைப்பில்தான் நம் பிக்கை கொண்டு செயல்படுகின்றன.

ஆனல் - இச்சமஷ்டி அரசமைப்பு இலங்கைக்கு மட்டும் சாத்தியமாக முடியாது - அது பிரிவினை என்று கூப்பாடு போடும் அரசியல் கோமாளிகளான தோழர்களின் கொள்கை கள் என்றைக்கோ மக்கள் மத்தியில் ஜீரணிக்க முடியாது போய்விட்டது.

ஆகவே தான் சொல்கின்றேன், விடுதலை என்பது நினைத்த நேரத்தில் பெற்றுக்கொள்ளும் தெருப் பொருளல்ல, -களம் பல கண்டு - தியாகங்கள் பல புரிந்து பெறவேண் டிய புனிதமான ஒரு சொல்தான் விடுதலை என்று.

சுதந்திரத் தாயே, எப்போது
நீ எங்களது அடிமைத்தளை
ஒடித்து வாழவைப்பாய்?

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

156261

720207CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படித்து விட்டீர்களா,
இந்நூலாசிரியர்
கே. எஸ். ஏ. கபூர் எழுதிய
## தமிழ் முழக்கங்களை?

மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு வேலுக்கும் விழி வணங்காது-வீரவரலாறு கண்ட தமிழினத்தை அடிமை கொள்ளநினைத்து நிற்கும் தனிச்சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒரு மாபெரும் சவால்.

## 1. சிங்களமே சிறிப்பார்

தமிழினத்தின் விடுதலை உலையில் புரட்சித் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டே இருக்கின்றது. அதன் விழிகளில் கனலும்-கரும்புகையும் சீறிக்கொண்டே இருக்கின்றன. அதனின் மகத்தான சக்தியில் இன்றோ-நாளையோ சுதந்திரத் தாயின் ஆசீர்வாதத்தைப் பெறத்துடிக்கும் தமிழினத்தின் குரல்,

## 2. ஒழிக ஒற்றை ஆட்சி

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழினம் கடந்து வந்த அடக்கு முறைகளையும், அதனால் அவர்கள் கண்ட குருதிக் குளங்களையும் தெளிவான ஆதாரங்களுடன் படித்தறிய வேண்டிய ஒரு அரசியல் ஏடுதான்,

## 3. இரத்தச் சுவடு

அழகு தமிழ் எழில் மிகு அணியாரமாம். அதன் புகழ் சாற்றுவதே நம்பணியாம். பேசும் தமிழிலே ஒரு பொலிவும் - பூரிப்பும், கற்றோருக்கு உலகில் அது பொ[illegible]க்கம், வளர்ந்து நிற்கும் தமிழினத்தைப் பாதுகாக்க வேண்டிய ஒரு பொற் பேழை - வீரத்தின் வித்து - இனத்தின் மணம் பரப்பும் பூ மலர்க்கொத்து-

## 4. இலங்கையில் இனமுழக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org